Registered as a News Paper in Sri Lanka

தினமுரசு வாரமலர்

பக்கம் 24 ரூபா 20.00

ஆக. 24 - 30, 2006

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 676



## பலியான மாணவிகளின் பரிதாபக் கதைகள்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புதிய அரங்குகளில்



அலசல்

## காத்திருக்கும் அதிர்வுகள்!



## அங்கங்களை வெட்டும் ஆபத்தானவர்கள்!

## கேதீஸின் கொலையும் தமிழ் மக்களின் இழப்பும்!

## அசின் அலட்டல்

கோபிகாவின் சிலீர் பேட்டி




# ஆன்மீகம்

## சாமி நீர் அறியாததோ?

உலக வாழ்க்கை என்பதே 'மாயை' என்று சலித்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பது தத்துவஞானிகளின் கருத்திலும் கலக்கத் தொடங்கிவிட்டது. இந்நிலைமை எதனால் ஏற்பட்டது என்பதை ஒரு நிமிடம் சிந்தித்தாலே போதும். அது வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி, நிம்மதியற்ற தன்மை என்பனவற்றால் ஏற்பட்டவை என்பது புலனாகும். "அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது" என்று அவ்வையே சொல்லி வைத்திருக்கும் பொழுது, மானிடராய்ப் பிறந்தவர்கள், வாழ்வே வேண்டாம் என்று சொல்லுமளவிற்கு மனிதப் பிறவியில் வெறுப்பு ஏற்படக் காரணந்தான் என்ன? சமுதாயத்தில் படிப்படியாக வளர்ந்து வரும் நேர்மையற்ற தன்மையும், அதனால் ஏற்படுகின்ற தொல்லையும்தான். அறந் தேய்ந்ததால் சமூகத்தில் நற்பிரஜையாக வாழ நினைப்பவர்கள் தனிமையை நாட வேண்டியுள்ளது. எனவேதான் "தனியே இருப்பதற்கெண்ணினேன். எண்ணமிது சாமி நீர் அறியாததோ" என்று கேட்டார் போலும்.

-என். எஸ். ராஜா, தம்பலகமம்.



## கர்த்தரால் எல்லாம் ஆகும்!

"தேவரீர், எல்லாவற்றையும் ஆளுகிறவர். உம்முடைய கரத்திலே சத்துவமும், வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்."

(1 நாளாகமம் - 29:12)

ஆம், பிரியமான சகோதரர்களே, சகோதரிகளே! தேவன் வல்லமையும், மகிமையும் கொண்ட புனிதர். அவரது அற்புதமான கிரியைகள், ஆழ்ந்து உணர்பவர்களுக்கு மெய் சிலிர்க்க வைக்கும்.

இந்த உலகம் அவரது படைப்பு. நாம் அவரது சிருஷ்டிகள். எம்மையும் இந்த உலகையும் உருவாக்கிய மகிமை பொருந்திய தேவனால் ஆகாத காரியம் உண்டோ?

நோயென்ன, நொடியென்ன? வாழ்வென்ன, சாவென்ன? எல்லாமே அவர் அறிந்ததுதான். அவருக்குத் தெரியாமல் ஒரு அணுவும் அசைய முடியாது. காலையும் மாலையும் கர்த்தரிடம் மன்றாடுவோம். அவர் கரத்திலே சத்துவமும், வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் அவரது கரத்தால் ஆகும்.

-வீ. ஏ. பிரான்சிஸ், திருகோணமலை.


## சத்தியத்தின் பரிகாரம்

உங்கள் சத்தியங்களில் வீணானவற்றிற்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான். எனினும், ஏதாவது ஒன்றை உறுதிப்படுத்தச் செய்யும் சத்தியங்களுக்காக அவற்றில் தவறினால் உங்களைப் பிடிப்பான். எனவே, சத்தியத்தை முறித்தால் அதற்குரிய பரிகாரமாவது - உங்கள் குடும்பத்தினருக்கு நீங்கள் கொடுக்கும் ஆகாரத்தில் நடுத்தரமானதைக் கொண்டு பத்து ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு ஆடை அணிவிக்கவேண்டும் அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். ஆனால் இம்மூன்றில் எதனையும் ஒருவர் பெற்றிராவிட்டால், அவர் மூன்று நாட்கள் நோன்பு நோற்கவேண்டும். நீங்கள் சத்தியம் செய்யும் பொழுது இதுவே உங்கள் சத்தியங்களின் பரிகாரமாகும். உங்கள் சத்தியங்களை முறித்து விடாமல் பேணிக் காத்துக்கொள்ளுங்கள்.

ஆதாரம் : திருக்குரான்.

-மனாப் மனாஸிர், புதிய காத்தான்குடி

## கவிதைப் போட்டி இல.673



### பரிசுக்குரிய கவிதை

#### நடக்கட்டும்...!

ஆமை வேகத்தில்
சமாதானம் என்று
அப்பவே சொன்னேன்
ஊதாரிப் பயலுகள்
ஒருவனும் நம்பவில்லை
சண்டை தொடங்கிடுச்சி
சண்டாளிப்பயலுகளுக்கு
இப்ப புத்தி வந்து
என்ன செய்ய...?

-பி. முதிஷன்,
கஹட்டகஸ்திகிலிய,

#### சண்டையா?

தனி நாட்டுச் சண்டை
கடலுக்குள்ளும்
நடக்கிறதா?
ஆமையாரே!

-க.அல்.ஆஸாத்,
ஏறாவூர் - 06.

#### கண்கூடு

இப்படித் தான்
புறமுதுகு காட்டும்
இருதரப்பும்
ஆமை வேகத்தில்
பேச்சுவார்த்தை நடத்த
அல்லல் பட்டு
பீதியில் கிடக்கு
ஜனநாயகம்!
நாளாந்தம்
அரங்கேறுது
உயிர்ப் பலி நாடகம்!

-ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

#### விழித்தெழு!!

யுத்தம்
தொடங்கி விட்டது!
எதுவும் நடக்கும்.
பதுங்கிக் கொள்ள
ஆமைக்குத் தெரியும்.
உத்தரவாதமின்றி ஊமையாய்
நீ
உட்கார்ந்திருப்பதென்ன
மகனே?

-தம்பன் செல்வி
எம்.சி.ஜுவைரியா.

#### நிம்மதியில்லை!

உனக்கு இருக்கும்
சுதந்திரம் கூட
இங்கு தமிழர்களுக்கு
இல்லையே...
கடல் அலையால்
உனக்கேற்படும்
துன்பம் போன்று
இனப்பிரச்சினையால்
தமிழர்களுக்கு!

-எம்.எஸ்.றமீன்பாஸி,
வாழைச்சேனை.

#### வெறுப்பு

ஆங்காங்கே
கிளைமோர் வெடிக்குது!
நடக்கும் இடமெல்லாம்
நரபலி யாகங்கள்!
ஆயுதக் கலாசாரத்தின்
அக்கிரமம் வேறு...!!
வேண்டாமடா தம்பி
உங்கள் நிலத்தில்
நடக்கும்
நிம்மதியில்லா
வாழ்க்கை!!!

-க.கமால்தீன்,
ஏறாவூர் - 03.

#### ஆழமும் கரையும்!

ஊமை
உள்ளங்கள்
இரண்டு
உரையாடுகிறது
உண்மை தான்
ஆழமும்
கரையுமாகும்.

-காமீம்
செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

#### ஆமைகள்

தம்பி,
இப் போர்ச் சூழலில்
உண்ணாமை
உறங்காமை
இல்லாமை
போன்ற ஆமைகள்
மலிந்திருக்கும்போது
இந்தக் கடலாமை
வேறா?

-அ.சந்தியாகோ,
கண்டி.

## கவிதைப் போட்டி இல.676



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 29.08.2006.

கவிதைப் போட்டி இல.676
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.




# உங்கள் பக்கம்

## வழிநடத்துபவர்களா? அல்லது சர்வாதிகாரிகளா?

புத்தளம் தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலய உள்ளக மேற்பார்வைக்கென கடந்த 2006-07-25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த 11 பேர் கொண்ட அதிகாரிகளின் விரும்பத் தகாத நடவடிக்கைகள் குறித்து மனவேதனையுடன் "உங்கள் பக்கம்" பகுதிக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

மேற்குறிப்பிட்ட அன்றைய தினம் காலை 07.45 மணியளவில் புத்தளம் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஜவாத் மரிக்கார் தலைமையில் 11 பேர் கொண்ட அதிகாரிகள் குழு வந்தபோது, நாம் அவர்களை மரியாதையோடு கௌரவித்து வரவேற்றபோதும், பகல் 12.00 மணிவரை தங்கியிருந்த அக்குழு மேற்பார்வையாளர்கள், எமக்கு கௌரவமிக்க ஆசிரியர்களுக்குரிய மரியாதையையோ, கண்ணியத்தையோ வெளிப்படுத்தாததையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

பல்வேறு வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் இன்று வரை பாரிய பங்களிப்பினை வழங்கிவரும் ஆசிரியர்களுக்கு, குறிப்பாக இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்குரிய மரியாதையினை வழங்காது, ஏதோ திருடனைப் பிடிக்க வந்த பொலிஸ்காரனைப் போல் நடந்து கொண்ட குழு மேற்பார்வையாளர்களின் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே எதிர்காலத்திலாவது பாடசாலை குழு மேற்பார்வைக்கென வருவோர் ஆசிரியர்குழு - குழு மேற்பார்வையாளர்கள் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்பும் முகமாக சிறந்த புரிந்துணர்வினையும், கல்வி மேம்பாட்டிற்குரிய அவர்களது நட்புறவான ஆலோசனைகளையும், கருத்துக்களையும், வழிகாட்டல்களையும் உளமாற வழங்குவார்களென எதிர்பார்க்கின்றோம்.

*இப்படிக்கு - பாதிக்கப்பட்ட தில்லையடி முஸ்லிம் மகாவித்தியாலய ஆசிரியர்கள்.*

# வாசகர் சாலை

## பொய்யும் மெய்யும்!

**எமது** அபிமான பத்திரிகை தினமுரசில் வாரா வாரம் காதிலை பூ கந்தசாமி கூறும் கருத்துக்கள் அருமையிலும் அருமை. 'நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை' என்று அவர் கூறினாலும் உண்மையைத்தான் சொல்கிறார். ஆனால் ஒரு சில ஊடகங்கள் உண்மையைத்தான் கூறுகின்றோம் என்று சொல்லிவிட்டு பொய்யைத்தான் கூறுகின்றன.

பல்சுவை அம்சங்களையும் தன்னகத்தே கொண்ட தினமுரசு பல்லாண்டு காலம் நிலைத்து நிற்க என் நல்லாசிகள் பல. வாழ்க! வளர்க!

*-முஹம்மது ஹஸனி*
*கல்முனை -07*

## அருமை அருமை!

மதிப்புக்குரிய இதழ் ஆசிரியருக்கு வணக்கம்; ஆகஸ்ட் 3 - 9 வரையான இதழைப் பெற்றேன். எல்லா விடயமும் அருமை. அரசியல், நகைச்சுவை, தகவல் பெட்டி, அந்தரங்கம் அனைத்தும் அருமை. தொடர்ந்தும் நல்ல அம்சங்கள் வரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

*ஆறுமுகம் சந்திரமோகன்*
*புசல்லாவ*

## தித்திக்கும் தினமுரசே..!

வெள்ளி நிலவாய்
அள்ளி வீசும் தினமுரசே..!
தரணியிலே தனித்துவமாய்
பவனி வருபவன் - நீ
அந்தரங்கச் செய்திகளையும்
அம்பலப்படுத்துபவன் - நீ
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
அகிலமெல்லாம் ஆர்ப்பரிப்பவனும்
நீதான் - நீ
ஆயிரமாயிரம் ஆண்டுகள்
ஆண்டுவர வாழ்த்துப் பூக்களை
வாரி இறைக்கின்றேன்..!

*அ. ரவி*
*மட்டக்களப்பு*

## எனதன்பின் முரசே!

ஒவ்வொரு வியாழக்கிழமைக்காகவும் தவமிருக்கும் ஆயிரக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி.

வியாழன் காலையில் தினமுரசை படித்தபின்தான் எமக்கு அந்த வாரமே முழுமை பெறுகின்றது.

ஒரு வேண்டு கோள் பிளீஸ்?

லேடீஸ் ஸ்பெஷல், சமையல் குறிப்பு, வீட்டுக்குறிப்பு, அழகுக் குறிப்பு பக்கங்களை தயவுசெய்து அதிகரிப்பீர்களா..!

முரசுப்பிரியை
*ஜனுல் பரீனா*
*பேருவளை*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):- 011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# தமிழகத்திலிருந்து யாழ்.மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

## உடனடியாகக் கொண்டுவர அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு


"நான்கே நான்கு நாட்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவோமெனத் திட்டமிட்டே புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தனர். ஆனால் அவர்களின் யுத்தம் படுதோல்வியடைந்து விட்டது. புலிகள் யுத்தம் நடத்தும்போது அரசு கைகளைக் கட்டிக் கொண்டு பார்த்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்கள் கஷ்டப்பட்டால்தான் தாம் பிழைக்க முடியுமென்பது புலிகளின் நோக்கம். இயல்பு வாழ்க்கையை இழந்து கஷ்டப்படும் யாழ். மக்களுக்கு உதவுவதற்காக தமிழகத்திலுள்ள நாகபட்டினத் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு நேரடியாக அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆறு மணித்தியாலத்திலிருந்து பத்து மணித்தியாலங்களுக்குள் நாகபட்டினத்திலிருந்து கப்பல்கள் காங்கேசன்துறைக்கு வந்து சேரக்கூடிய வசதிகள் இருக்கின்றன" என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் நாயகமும் யாழ் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த 22ஆம் திகதி காலை நடத்திய விசேட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:

"தற்போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு அத்தியாவசிய பொருட்களுடன் கப்பல் விரைந்து கொண்டிருக்கிறது அதற்கும் மேலதிகமாக அடுத்து வரும் நாட்களில் குடாநாட்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்காக தென்னிந்தியாவிலிருந்து நேரடியாகப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

திருகோணமலையில் ஆரம்பித்து யாழ். வரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து யுத்த நடவடிக்கைகளும் புலிகளால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களே ஆகும். அரசாங்கம் ஒருபோதும் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. புலிகள் மக்களின் நலன் குறித்து என்றுமே சிந்தித்ததில்லை. புலித்தலைமைக்கு என்றும் அவர்களின் சொந்த நலன்களே முக்கியமாகவுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது அரசியல் பணி என்று கூறி ஊடுருவிய புலிகளினால் அறுபதுக்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களைக் கொலை செய்யவும் முயற்



சித்தனர். இதில் எமது கட்சி முக்கியஸ்தரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவதாஸனும் புலிகளின் கொலை முயற்சியிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார். புலிகளினால் பலவந்தமாகப் பிடிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு புலிகள் ஆயுதப் பயிற்சியளிக்கும் போது மீண்டும் ஓர் யுத்தம் ஆரம்பித்தால் யாழ். குடாநாட்டையே தாம் ஓர் இராணுவ முகாமாகத் கருத வேண்டியிருக்கும் எனப் புலிகள் கூறியிருந்தனர். நாலு நாட்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவோம் எனத் திட்டமிட்டே புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். ஆனால் அவர்களின் திட்டம் படுதோல்வியடைந்து விட்டது. புலிகள் யுத்தம் நடாத்தும் போது அரசு கைகளைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது. யுத்தத்தினை ஆரம்பிக்க முன்பே பல தடவைகள் புலிகள் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பினார்கள். தமிழ் மக்களை எந்த அளவுக்குக் கஷ்டப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அவர்களை வதைத்தனர். தமிழ் மக்கள் கஷ்டப்பட்டால்தான் தாம் பிழைக்க முடியும் என்பதே புலிகளின் நோக்கம்." என்றார் அமைச்சர்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தேவானந்தா, தென்னிந்தியாவின் நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு நேரடியாக பொருட்களுடன் சரக்குக் கப்பலை வரவழைக்க தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் காலநிலை சீராகவுள்ளது. ஆனால் கொழும்பில் சீரற்ற காலநிலை காரணமாக அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக அனுப்புவதில் காலதாமதம் நிலவுகின்றது. ஆகையினால்தான் நாம் மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்ல இரண்டு, மூன்று நாட்கள் தேவைப்படும் ஆனால் நாகபட்டினத்திலிருந்து 6 தொடக்கம் 10 மணித்தியாலங்களில் பொருட்களை இறக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கலைஞர் கண்டனம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அறிவுறுத்தலின் பேரில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தான் எடுத்த முயற்சி, வைகோ சட்ட விரோதமாக இலங்கைக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்ததால் முறியடிக்கப்பட்டது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டார். கடந்த 20ஆம் திகதி தமிழக சட்டசபையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னார். தி.மு.க. தலைவராக விளங்கிய எனக்குத் தெரியாமலேயே அப்போது எனது கட்சி உறுப்பினராக இருந்த வைகோ சட்ட விரோதமாகப் படகு மூலம் வன்னிக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்தார். அப்போது இலங்கை - இந்திய உறவுகள் சீர்குலைய இதுவும் ஓர் காரணமாக அமைந்தது என்றும் கலைஞர் சொன்னார்.

## ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் மீதும் ஊடக நிறுவனங்கள் மீதும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஜனநாயக தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அண்மையில் 'உதயன்' பத்திரிகை விநியோகஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டதோடு, 'நமது ஈழநாடு' பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளரும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். 'உதயன்' பத்திரிகையின் களஞ்சிய சாலைக்கும் தீவைக்கப்பட்டிருக்கிறது. இவை கண்டிக்கப்பட வேண்டியவையென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு; கொழும்பில் முக்கிய புள்ளிகள் மூவர் தலைமறைவு!

கனடாவிலிருந்து புலிகளுக்குத் தேவையான விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ய முனைந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டிருக்கும் எட்டுத் தமிழர்களோடு நேரடியாகத் தொடர்புபட்டவர்களென்று சந்தேகிக்கப்படும் மூன்று பிரபலப் புள்ளிகள் குறித்து இலங்கைப் பொலிஸ் தலைமையகத்துக்குத் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று தமிழர்களும், அமெரிக்காவில் கைது பற்றிய தகவல்கள் கிடைத்ததுமே தலைமறைவாகி விட்டதாகவும் இலங்கை பொலிஸ் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். இவர்கள் வன்னிக்கோ அல்லது கிழக்கிலுள்ள புலிகளின் வேறெந்த கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கோ செல்ல முடியாதவாறு சோதனை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

அமெரிக்காவின் வெளிநாட்டுப் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து புலிகளின் பெயரை நீக்குவதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முனைந்தார்களென்று மற்றொரு குற்றச் சாட்டும் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இவர்களது ஆயுதக் கொள்வனவுக்கு உதவ முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கனடியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கறுப்புச் சந்தையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட எண்மரில் சசிகலா என்ற பெண்மணியும் ஒருவராவார். சரத்சந்திரன், யோகநாதன், விஜேந்திரன், பரமநாதன் திருச்செந்தூரன் ஆகிய பெயருடைய நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

## புலிகளின் ஆதரவாளர் சென்னையில் கைது

இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் மணிவரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். புதுக் குடியிருப்பு தாக்குதல் தொடர்பாக சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இவர் ஆற்றிய உரை, இந்தியாவின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கக் கூடியது என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழ் நாட்டிலுள்ள திராவிடக் கட்சிகளில் ஒன்றான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வைகோவினால் 1989ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவரது கட்சி தமிழகத்தில் எதிர்க்கட்சியாக விளங்கும் அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்திருந்தாலும் இந்திய மத்திய அரசில் பங்காளிக் கட்சியாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் படை என்ற பெயரில் மக்களை மிரட்டியவர் கைது!

யாழ்.பல்கலைக்கழக கட்டடத் தொகுதியில் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை பொலிஸாரும் படையினரும் கூட்டாக நடத்திய தேடுதலின் போது பல்வேறு அமைப்புகளின் பெயர் கொண்ட கடிதத் தலைப்புகளுடன் பகீரதன் என்ற மூன்றாம் வருட கலைப்பீட மாணவனொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பல்கலைக்கழக கட்டடத் தொகுதியைச் சல்லடை போட்டுத் தேடிய பொலிஸார் கலைப்பீடத்தின் இரண்டாவது மாடியிலுள்ள அறையொன்று பூட்டப்பட்டிருப்பது கண்டு, பல்கலைக்கழக உபவேந்தரின் உதவியுடன் அக் கதவைத் திறந்து பார்த்த போது, பகீரதன் அங்கு மறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மக்கள் படை, சங்கிலியன் படை, எல்லாளன் படை போன்ற பெயர் கொண்ட பெருந்தொகைக் கடிதத் தலைப்புகளும் அந்த அறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

24 வயதான பகீரதன் முல்லைத் தீவைச் சேர்ந்தவரென்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. யான கஜேந்திரனின் தனிப்பட்ட உதவியாளர் என்பதும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் எல்லாளன் படை, சங்கிலியன் படை, மக்கள் படை என்ற பெயரில் மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கும் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பல படுகொலைகளுக்கும் பகீரதன் சம்பந்தப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## ஆயுதக் கடத்தல் : தாய்லாந்திலிருந்து 3 தமிழ் இளைஞர்கள் நாடு கடத்தப்படுவர்!

தாய்லாந்திலிருந்து முல்லைத்தீவுக்கு நீண்ட காலமாக ஆயுதங்களை அனுப்பி வந்த மூன்று தமிழ் இளைஞர்கள், அடுத்த மாதம் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனரென்று தாய்லாந்து அதிகாரிகள் குறிப்பிட்டனர். ஒரு தொகை ஆயுதங்களையும் துப்பாக்கி ரவைகளையும் முல்லைத்தீவுக்கு அனுப்புவதற்காக கப்பலில் ஏற்றிய போது, இவர்கள் தாய்லாந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்ற விசாரணைகளையடுத்து மூன்று வருட காலம் சிறைத் தண்டனையை அனுபவித்த இவர்கள், அண்மையில் தண்டனைக்காலம் முடிவுற்று வெளியே வந்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசீர்வாதம் சத்தியபவன், நெடுங்கேணியைச் சேர்ந்த தர்மராஜா சசீகரன் மற்றும் யூ.ஜி.குணபாலன் ஆகிய மூவருமே கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்தவர்களார். பல்வேறு ரக பிஸ்டல்கள், 45 ஆயிரம் சுற்று ரவைகள் ஆகியவற்றைக் கப்பலில் ஏற்றும்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இம் மூவரையும் இலங்கைக்கு நாடு கடத்துமாறு தாய்லாந்து பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இக்கோரிக்கை குறித்து ஆராய்ந்த தாய்லாந்துப் பொலிஸார், இவர்களை அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது. இலங்கைக்கு இவர்கள் வந்திறங்கினால் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவரென்று இரகசியப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## யுத்த நிறுத்தம் விரைவில்?

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மோதலில் ஈடுபட்டு வரும் அரசாங்கப் படைகளும் புலிகளும் யுத்த நிறுத்த இணக்கத்துக்கு வரக் கூடிய சாத்தியங்களும் சமிக்ஞைகளும் தென்படுவதாக டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். "நாம் தாக்குதலை ஆரம்பிக்கவில்லை, புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடியே கொடுத்தோம். எந்த நேரமும் இணக்கத்துக்கு வரத் தயாராக இருக்கிறோம்" என்று ஜனாதிபதி தெரிவித்த வேளையில், புலிகள் இயக்கத்திடமிருந்தும் தகவல்கள் எமக்கு வந்துள்ளன. இது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு, கிழக்கில் அண்மையில் அரசபடையினருக்கும் - புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை ஓர் இலட்சத்து முப்பத்தையாயிரமாக இருக்கலாம் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் மதிப்பிட்டிருக்கின்ற போதிலும், உள்நாட்டில் அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தையும் தாண்டலாமென்று மேரி கத்தரின் என்ற பிரிட்டிஷ் தன்னார்வத்தொண்டர் நிறுவனமொன்றின் பெண் ஊழியர் தெரிவித்தார். வடக்கிலும், கிழக்கிலுமுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்த பல தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்களின் கருத்துக்களையும் தனது சொந்த மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டே அவர் இந்த புள்ளிவிபரத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தம் இலங்கையில் மட்டும் அல்ல, எங்கு நடந்தாலும் மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவி மக்கள் தான். அதிலும் பெண்கள், பிள்ளைகளே கூடிய அளவில் பாதிக்கப்படுகின்றனர். மூதூரிலிருந்து இடம் பெயர்ந்து கந்தளாய், தம்பலகாமம் போன்ற பகுதிகளில் வாழும் மக்களின் நிலைமை மிகப் பரிதாபகரமானது. அகதிமுகாம்களென்று கூறப்படும் இடங்களில் போதிய அடிப்படை வசதிகளின்றி ஆயிரக்கணக்கான மக்கள் அவஸ்தைப் படுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இதே போன்று மூதூருக்கு அப் பாலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி களிலிருந்து நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தஞ்சந்தேடி அலைந்து கொண்டி ருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. வாழைச்சேனை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு பெரும்பாலானோர் இடம்பெயர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது. இருதரப்பு எறிகணை வீச்சுகளுக்கு மத்தியிலும் காடுகளுக்கூடாக கால்நடையாக மக்கள் செல்கின்றனரென்ற கவலை தரும் செய்தி களும் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்தில் புலிகள் விடுத்த எச்சரிக்கையையடுத்து ஆரம்பத்தில் நாற்பதாயிரம் மக்கள் தேவாலயங்களிலும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர் என்று இருதரப்பும் செய்திகளை வெளியிட்டிருந்தனர். ஆனால் இராணுவமும் புலிகளும் பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்ததையடுத்து ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்களென்று யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கூறியுள்ளாரென்று சென்னார் மேரி கத்தரின்.

## கொழும்பில் சோதனை ஏற்படுத்தும் சங்கடங்கள்

கொழும்பில் கிளேமோர் குண்டுத் தாக்குதல் அதிகரித்து வருவதையடுத்தும் தாக்குதலுக்குக் கொண்டுவரப்பட்ட குண்டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டதையடுத்தும் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கொழும்பின் நுழைவாயில்களில் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழைத் தவிர வேறு மொழிகளில் பேச முடியாதவர்கள் பலர், சங்கடங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையில் ஓர் உலக அதிசயம்! யுத்தம் இல்லாத பகுதிகளில் மட்டும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு!

இலங்கையின் அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையிலான மோதல்கள் இடம் பெற்றுவந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கென இலங்கை வந்த ஸ்கான்டினேவிய நாடுகளின் குழுத் தலைவர் பாதுகாப்புக் கருதி ஹபரனை உல்லாச விடுதிக்கு தனது வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டுள்ளார். இதே போன்று யுத்தம் மோசமாக நடைபெற்றுவரும் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்தும் பாதுகாப்புக் காரணங்களுக்காக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். "யுத்தம் நடைபெறும் இடங்களில்தான், அதனைக் கண்காணிப்பதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் ஆட்கள் தேவை. யுத்தம் நடை பெறாத இடங்களிலிருந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் உலக அதிசயம் இலங்கையில்தான் நடக்கிறது" என்கிறார் கொழும்பிலுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் பணி புரியும் அன்ரன் நோனிஸ் என்பவர்.

இலங்கை வரலாற்றிலேயே மிகக் கூடுதலான பெறுமதி வாய்ந்த அதிக போதைவஸ்துகளுடன் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் குடு நௌபரின் கொழும்பு, வார்ட் பிளேஸ் இல்லத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையலுவலகம் இருப்பதாக அண்மையில் பத்திரிகைகள் அம்பலப்படுத்தின. ஆயிரக்கணக்கான டொலர் கணக்கில் வாடகையும் அள்ளிக் கொடுக்கப்படுகின்றன. இங்கு நடப்பவற்றைப் பார்த்தால், பொருத்தமான இடத்தில்தான் தலைமையகத்தைத் தேடிப் பிடித்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறார் அன்ரன் நோனிஸ்.

தினமுரசு வாரமலர்.
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## நிவாரண உதவிகள் தாமதமின்றிக் கிடைக்க வேண்டும்.

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தக் கெடுபிடிகளால் இடம் பெயர்ந்து அகதிகளாக இருக்கும் அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நிவாரணங்கள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதங்களுக்கு எவ்விதக் காரணங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அரச கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் என்றாலும் சரி, அரச கட்டுப்பாட்டிற்கு அப்பாலிலுள்ள பகுதி மக்கள் என்றாலும் சரி அனைவருக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றி நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். இறைமையுள்ள இலங்கை அரசு என்ற அடிப்படையில் இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்துள்ள அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் உதவுவது கட்டாயப் பொறுப்பாகும். அந்தக் கடமையிலிருந்து அரசு விலக முடியாது.

இதேவேளை அரசின் நிவாரணப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் புலிகளின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசுக்கு இருக்கும் நெருக்கடிகளை உணர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் உதவிகள் கிடைக்க வசதியாக மக்களுக்குள்ளிருந்து புலிகள் அப்புறப்பட வேண்டும். இல்லையெனின் அந்த மக்கள் அரச கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும். என்னதான் தனி நிர்வாகம், தமிழ் இராஜ்ஜியம் என்றெல்லாம் புலிகள் கூறினாலும் நெருக்கடியான நேரத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளேயே இடம் பெயரக்கூடிய மக்களுக்கு குறைந்தது, ஒரு வாரத்துக்குக்கூட உணவு கொடுக்க முடியாத புலிகள் யுத்தப் பீதியூட்டி பாதுகாப்புத் தேவையென்றால் வன்னிக்கு வரும்படி அழைப்பதும், பின்னர் அவர்களுக்கு உணவு இல்லை, நிவாரணம் இல்லையென்று கூறுவதும் மக்களை இழுத்தடிக்கும் நடவடிக்கையே தவிர வேறு எந்த மக்கள் நலன் சார்ந்த நோக்கமுமில்லை என்ற உண்மையை இன்று சர்வதேசமும், தமிழ் மக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

ஆகவே முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலையில் மக்களை வன்னிக்குள் அடைத்து வைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் வரியாகவும், கப்பமாகவும் ஏராளமான பணத்தைப் புலிகள் மக்களிடமிருந்து அறவிட்டும், மக்களுக்கு அனுப்பப்படும் நிவாரணத்தில் ஒரு பங்கை அபகரித்தும் வரும் புலிகள் தம்மை வெறும் மனிதக் கேடயங்களாகவே பாவித்து வருகின்றனரென்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து விடுபட்டு வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது. அரசின் நிவாரணங்கள் தங்கு தடையின்றி மக்களைச் சென்றடைய வேண்டும். அவசரத் தேவைகளுக்காகக் காத்திருக்கும் மக்களுக்கு நிவாரணங்கள் சென்றடைவதில் தாமதங்களுக்கு வாய்ப்புகள் உள்ளபோதும் அவை நியாயப்படுத்த முடியாதவையாகும். அரசு மீது குற்றம் சுமத்துவது இலகுவான காரியம்தான் ஆனால் அரசு பரிந்துரைக்கும் நிவாரணங்கள் உரிய பகுதிகளுக்கு முழுமையாகச் சென்றடைவதில் இருக்கக் கூடிய தடைகளை தளர்த்துவதற்கும் உத்தரவாதத்தைத் தருவதற்கும் எவரும் தயாராக இல்லை.

அகதிகளாக இருப்பவர்கள் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பாகுபாடு காட்டப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதற்குக் காரணம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அகதிகளான போது அமைச்சர்கள் குழு காட்டிய பரபரப்பு வடக்கில் மக்கள் இடம்பெயர்ந்த போது காட்டப்படவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டிய அக்கறை வடக்குக்கு நிவாரணங்கள் சென்றடைவதற்கான விரைவுக்குப் பெரிதும் உதவியது.

எது எப்படி இருப்பினும் யுத்தம் ஒரு முடிவுக்கு வராத இச்சூழலில் நிலைமை இன்னும் மோசமடையக் கூடிய வாய்ப்புகளே அதிகமாகவுள்ளது. ஆகையால் எதிர்காலத்திலும் மக்களின் இடம்பெயர்வும், அகதி வாழ்வும் நீடிக்கலாம். அந்தச் சூழலை எதிர் கொள்வதில் அரசு பலத்த நெருக்கடியை எதிர் கொள்ள நேரிடும். இதில் தொண்டு நிறுவனங்களின் பணியும் பெரும் அவசியத்துக்குரியதாக அமையும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பலியான மாணவிகளின் பரிதாபக் கதைகள்!

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென்று கூறப்படும் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு என்ற இடத்தில், இலங்கை விமானப் படையின் மூன்று கிபீர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 61 மாணவிகள் உயிரிழந்தனரென்று வெளிவந்த செய்திகள் இலங்கையை மட்டுமல்ல, தமிழ் மக்கள் வாழும் உலகப் பகுதிகளையே அதிர வைத்தன. கடந்த 14ஆம் திகதி காலை 7.15 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் 189 மாணவிகள் காயமடைந்தனரென்றும் செய்திகள் தெரிவித்தன. யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த, ஆதரவற்ற பிள்ளைகள் வாழும் 'செஞ்சோலை' என்ற அநாதைப் பிள்ளைகளின் விடுதி மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களும் காயமுற்றவர்களும் வயது குறைந்த சிறுமிகளென்றும், புலிகளின் இராணுவப் பேச்சாளரான இளந்திரையன் என்பவர் பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அன்றைய தினமே பி.பி.சி.தமிழோசை ஒலிபரப்பிய செய்தியில், குண்டு வீச்சில் இறந்த தமது பிள்ளைகளின் சடலங்களைப் பொறுப்பேற்கப் பெற்றோர்கள் பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் முண்டியடித்தனரென்று குறிப்பிட்டது. பெற்றோர்களை இழந்து, அநாதைகளான இச் சிறுமிகளின் சடலங்களைப் பொறுப்பேற்க, இறந்துபோன பெற்றோர்கள் எப்படி உயிரோடு எழுந்து வந்தார்களென்பது இளந்திரையனுக்கும், பி.பி.சி.க்கும் மட்டும்தான் வெளிச்சம்.

விமானத் தாக்குதலுக்கு இலக்கான கட்டடம் 2004ஆம் ஆண்டு முதல் புலிகளின் பயிற்சிக்கூடமாக இயங்கி வந்ததென்றும், இது குறித்து வேவு பார்த்து நன்கு தகவல்களைப் பெற்ற பின்னரே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் பேச்சாளரான, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார். கொல்லப்பட்டவர்கள் ஆண்களா? பெண்களா? என்பது பற்றியோ அல்லது அவர்களின் வயது குறித்தோ தமக்குப் பிரச்சினை இல்லையென்றும்; யுத்தப் பயிற்சி பெறும் பயங்கரவாதிகளென்ற அடிப்படையிலேயே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் அரசு தரப்பு நியாயத்தை அமைச்சர் ரம்புக்வெல நியாயப்படுத்தியிருக்கிறார். ஆனால் கொல்லப்பட்டவர்களும் காயமுற்றவர்களும் முதலுதவிச் சிகிச்சைக்கான பயிற்சி பெற்று வந்தவர்களென்றும் இளந்திரையன் குறிப்பிட்டுள்ளார். ஆக, அரசு கூறுவதுபோல யுத்தப் பயிற்சி பெற்ற அல்லது பெற்றுக் கொண்டிருந்த பயங்கரவாதிகளென்பதற்கு அப்பால், முதலுதவிப் பயிற்சிக்கென அழைத்து வரப்பட்ட சிறுமிகள் என்பதே புலிகளின் வாதம். கடந்த பதினொராம் திகதி முகமாலை முன்னரங்கப் பகுதி, நாகர் கோவில், கிளாலி ஆகிய இடங்களில் புலிகள் தாக்குதலை ஆரம்பித்து, இரு நாட்களின் பின்னர், புலி நிலைகளெனத் தாம் கருதியவற்றின் மீது தாக்குதல் நடத்தியதாக அரசாங்கம் குறிப்பிட்டிருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

கொல்லப்பட்டவர்களும் காயமுற்றவர்களும் அப்பாவிச் சிறுமிகளென்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், இந்த அப்பாவிச் சிறுமிகளைப் பலியெடுத்தவர்கள் அல்லது பலிகொடுத்தவர்கள் யாரென்பதே இமாலயக் கேள்வியாகும். கடந்த ஜூலை இருபதாம் திகதி மாவிலாறு அணைக் கட்டைத் தடுத்து, பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு தண்ணீர் வசதியைத் தடுத்து, பின்னர், கடந்த மூன்றாம் திகதி மூதூர் மீது தாக்குதல் தொடுத்து 35,000 முஸ்லிம் மக்களை (தமிழ் மக்கள் உட்பட) அகதிகளாக வெளியேற்றி, யுத்தத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்கள் புலிகள்தான். எனவே புலிகளுக்குப் பதிலடி கொடுக்கத் தமக்கு உரிமையுண்டென்று அரசு கூறுவதை நியாயமற்றதென்று எவரும் கூறமுடியாது.

தாக்குதல் நடைபெற்ற மறுநாள் சம்பவ இடத்துக்குச் சென்ற, ஐ.நா.சிறுவர் அமைப்பான யுனிசெப்பின் பிரதிநிதிகள், சம்பவ இடத்தில் ஆயுதப் பயிற்சி முகாம் இயங்கியதற்கான அறிகுறிகள் இல்லையென்று தெரிவித்துள்ளனர். அக் கூற்றுத் தவறாக இருக்குமென்று கூற முடியாது. ஆனால், இத் தாக்குதல் சம்பவம் பற்றிக் கருத்துத் தெரிவித்த யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யுவானா வம்லெற், கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவிகளென்று குறிப்பிட்டுள்ளார். இவர்கள் பயிற்சிக்காகவே அங்கு அழைக்கப்பட்டு வந்ததாகவும், இவர்களை யார் அழைத்து வந்தார்களென்பதை உறுதி செய்ய முடியவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து தாங்கள் சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தபோது தம்மால் தெளிவான பதிலைப் பெற முடியவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார். அப்படியானால், பயங்கரவாதிகள் மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டதென்று அரச சார்பில் கூறப்படுவதை மறுக்கிறீர்களா? என்று பி.பி.ஸி. நிருபர் கேட்டபோது, "அரசு கூறுவதை மறுதலிக்க முடியவில்லை" என்று யுவானா பதிலளித்துள்ளார். ஆக, கொல்லப்பட்டவர்கள் மாணவிகள் தானென்பதையும் அவர்கள் பயிற்சிக்காக அழைத்து வரப்பட்டவர்களென்பதையும் யுவானாவின் கருத்துகளும், இளந்திரையனின் கூற்றுகளும் உறுதி செய்கின்றன.

யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்ட சில தினங்களுக்குள், முதலுதவிச் சிகிச்சைக்கென முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவிகளை அழைத்து வந்தவர்கள் யார்? இவர்களுக்கு வதிவிடப் பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டது ஏன்? பயிற்சி அளிக்கப்பட்ட இடம் உண்மையிலேயே அரசு கூறுவது போலப் புலிகளின் பயிற்சி முகாமா? - இவற்றுக்கு விடை காண்பதன் மூலம்தான் இப் படுகொலைகளுக்கான சூத்திரங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தின் பெயர் வள்ளிப்புனம். அடர்ந்த காடுகளற்ற, காடு சார்ந்த பகுதியே வள்ளிப்புனம். புதுக்குடியிருப்பு, உடையார்கட்டிலுள்ள இந்த வள்ளிப்புனம் குடிமனைகளற்ற பகுதி. விவசாயம் செய்யக் கூடிய மண்வளமற்ற கிரவல் தரையே இது. இப் பகுதிக்கு அப்பால் குடிமனைகள் இருக்கின்றன. வவுனியா, நெடுங்கேணிப் பகுதியைப் போன்று வள்ளிப்புனமும் புலிகளின் உயர் பாதுகாப்பு வலயமாகவே கருதப்படுகிறது. வெளியார் இவ்விடத்துக்கு எளிதில் சென்றுவர முடியாது என்பது ஒருபுறமிருக்கட்டும்.

விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட இக் கட்டடத் தொகுதியிலேயே முன்னர் புலிகளின் சித்திரவதை முகாம் இயங்கி வந்தது. புலிகளுக்கு எதிரானவர்கள், வரி, கப்பம் செலுத்தாதவர்கள், புலிகளின் சொற்படி நடக்காதவர்கள் எல்லாம் இந்த முகாம்களிலேயே அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு வந்தனர். 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர், இச் சித்திரவதை முகாம், முல்லைத்தீவு நகரிலிருந்து மூன்று கிலோ மீற்றர்கள் அப்பாலுள்ள நந்திக் கடலோரப் பகுதியிலுள்ள வட்டுவாகல் என்ற இடத்துக்கு மாற்றப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், ஒரு காலத்தில் கொழும்பில் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்ட இடத்தை 'நான்காம் மாடி' என்று அழைப்பதுண்டு. அதனையொத்த புலிகளின் சித்திரவதை சிறைக்கூடமே வள்ளிப்புனத்திலிருந்து வட்டுவாகல் என்ற இடத்துக்கு மாற்றப்பட்டது. 'நான்காம் மாடி'யிலும் வள்ளிப்புனத்திலும் தமிழர்களே சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஆனால் ஒரேயொரு வித்தியாசம். நான்காம் மாடியில் படையினருக்கு எதிராகச் செயற்பட்ட தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். வள்ளிப்புனத்தில் புலிகள் இயக்கத்துடன் இணங்கிப் போகாத தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். எனவே வள்ளிப்புனக் கட்டடத் தொகுதியைப் புலிகளின் பயிற்சிக் கல்லூரியாகப் படையினர் நினைத்திருக்கலாம் அல்லது அவ்வாறு அவர்களுக்குத் தகவல் தரப்பட்டிருக்கலாம். முல்லைத்தீவு நகருக்கு அண்மையில் தற்போது கடலோரத்தில் அதாவது நந்திக் கடலருகே அமைக்கப்பட்டிருக்கும் புலிகளின் சித்திரவதை முகாம், நிலத்துக்குக் கீழான நீர்ச் சிறைக்கூடம் போலவே காணப்படுகிறது. கடல் பகுதியிலிருந்து உள்ளே கால்வாய் போல் அகழ்ந்து வெட்டி, அந்த நீர்ப்பகுதிக்கு மேலே வெறும் கம்பிகளைத் தரைபோல் அமைத்து, அதற்கு மேலாகவே கைதிகள் சிறை வைக்கப்படுகிறார்கள். உள்ளேயிருக்கும் எவரும் வெளியே தப்பிப் போகாதபடி அரண்கள் அமைக்கப்பட்டிருப்பதோடு, காவலுக்கு ஆயுதபாணிகளான புலிகள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

வள்ளிப்புனத்தில் விமானத் தாக்குதலுக்குள்ளான சிறுமிகள் 10, 11, 12ஆம் ஆண்டு வகுப்பு மாணவிகளாவர். புலிகளின் முகவரமைப்பான மாணவர் பேரவை என்ற அமைப்பே கடந்த பத்தாம் திகதி வியாழக்கிழமை இவர்களை முதலுதவி மற்றும் முகாமைத்துவப் பயிற்சியென்று கூறிப் பாடசாலைகளிலிருந்து அழைத்துச் சென்றுள்ளது. 'செஞ்சோலை' என்று புலிகளால் அழைக்கப்படும் அநாதரவான சிறுவர், சிறுமியர்களுக்கான வசிப்பிடம் 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுவிட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்புத் தாக்குதலில் பலியான சிறுமிகள் கல்விகற்ற சில பாடசாலைகளையும் இறந்தவர்களின் எண்ணிக்கையையும் கீழே தருகிறோம்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் - 03, விஸ்வமடு மகாவித்தியாலயம் - 09, உடையார்கட்டு மகாவித்தியாலயம் - 11, முல்லைத்தீவு மகாவித்தியாலயம் - 08, குமுளமுனை மகாவித்தியாலயம் - 04, முள்ளியவளை வித்தியானந்தா மகா வித்தியாலயம் -04, செம்மலை மகாவித்தியாலயம் - 04, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் - 01, முருகானந்தா மகாவித்தியாலயம் - 02, தர்மபுரம் மகாவித்தியாலயம் - 02, பிரேமானந்தா மகாவித்தியாலயம் - 01. மேலதிக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை உடனடியாக எம்மால் பெற முடியவில்லை.

புலிகள் ஆரம்பித்த தற்போதைய யுத்தம் காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாமென ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுகின்றன. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். காடுகளிலும் மர நிழல்களிலும் அன்றாடம் உணவே இல்லாமல் மக்கள் அவஸ்தைப் படுகின்றனர். தமிழகத்துக்கு இவ் வருடம் இதுவரை படகுகள் மூலம் தப்பிச் சென்ற தமிழ் அகதிகளின் எண்ணிக்கை, எட்டாயிரத்தைத் தாண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கைத் தமிழீழத் தீவிரவாதிகளை ஒரு காலத்தில் வாழ்த்தி, வரவேற்று போராட்டத்துக்கு உதவியது தமிழகம். தமிழ்நாட்டு மண்ணில் ராஜீவ் காந்தியின் இரத்தத்தைப் புலிகள் சிந்தவைத்த பின்னர் போராட்டப் போக்குத் திசைமாறிப் போய்விட்டது. 1987ஆம் ஆண்டு ராஜீவின் முன்முயற்சியின் பேரில் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் சரிவரப் பயன்படுத்தத் தவறி, இந்தியப் படையோடு மோதியதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத் திசை மார்க்கமும் மாறிவிட்டது. அதற்கு முன்னதாகவே தமிழ் போராட்டக் குழுக்களை அழித்து, தமிழ் மக்களின் விடிவுக்கு அழிவு தேடிய புலிகள், இனியும் தமிழீழம் கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. அர்த்தமற்ற போராட்டம் தொடருமானால், தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு - கிழக்கு மயான பூமியாக மாறிவிடும். மயானங்களில் தமிழீழக் கொடியை ஏற்றும் சுடலை ஞானத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களின் நீதியான, கௌரவமான தீர்வுக்கு அனைத்துத் தமிழ் சக்திகளுடனும் ஐக்கியப்படுவதே புலிகளுக்கு இருக்கக் கூடிய ஒரே வழி.

## ஊரிலிருந்து....




திருகோணமலையில ஆரம்பிச்ச யுத்தம் இப்ப யாழ் குடாநாடு வரை விரிஞ்சுட்டுது. மக்கள் படுகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை. சனங்களுக்காக யார் உண்மையில கஷ்டப்படுகிறது எண்டது நல்லா தெரிஞ்சு போச்சுது. அரசியல் பணி செய்ய எண்டு நுழைஞ்சு மக்களை சுரண்டிப்போட்டுப் போன ஆக்களே அல்லது இக்கட்டான நேரத்தில் மக்களுக்கு தேவையான உதவிகளை செஞ்சு கொடுக்க முன்னிற்கிற ஆக்களே முக்கியம் எண்டதும் சனங்களுக்கு தெரிஞ்சு போச்சுது. ஒரு பக்கம் ஆக்கள் யுத்தத்தில் ஸ்கோர் சொல்லிக்கொண்டிருக்கினம்; மற்ற புறத்தில எப்படியாவது சனத்துக்கு உதவி செய்ய வேணும் எண்டு பாடு படுகினம் விளங்கினால் சரி

# சடலங்களின் அழுகுரல்கள் உண்மைகளை வாழ வைக்கும்!

**புலிகளின்** இராணுவப் பேச்சாளரென்று கூறப்படும் இளந்திரையன் கூறுவது போல, அநாதைச் சிறுமிகளின் வதிவிடத்தின் மீதுதான் விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதென்றால், கீழ்க்காணும் கேள்விகள் புலிகளை அம்மணமாகத் தோலுரித்து, அவர்களது பொய்களைப் பிண நாற்றம் வீச வைக்கும் என்பது மட்டும் உண்மை.

குண்டு வீச்சு நடத்தப்பட்டது 14ஆம் திகதி திங்களன்று காலை. முப்பது, நாற்பது கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சிறுமிகளை, பரீட்சை நேரத்தில் பாடசாலைகளுக்குச் செல்ல விடாது, வதிவிடப் பயிற்சிக்கு அழைத்து வந்தது ஏன்? பதினொராம் திகதி யாழ்.குடா உட்பட முகமாலை, நாகர்கோவில், கிளாலி ஆகிய இடங்களில்



புலிகள், படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்து இரண்டு நாட்களின் பின்னர், சிறுமிகள் பயிற்சிக்கென அழைத்து வரப்பட்டது ஏன்?

முதலுதவிப் பயிற்சியென்று நீங்கள் கூறுவதை உண்மைதானென்று ஒரு வாதத்துக்கு ஏற்றுக்கொண்டாலும் கூட, முதலுதவிப் பயிற்சியென்பது யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்றாக இல்லையா? முதலுதவிப் பயிற்சியென்று வைத்துக் கொண்டாலும் கூட அதனை வதிவிடப் பயிற்சியாக நடத்தியது ஏன்?

இறந்துபோன சிறுமிகளின் சடலங்களை அருகருகே அடுக்கி வைத்து, படம் பிடித்துக் காட்டி உலகுக்கு பூச்சாண்டி காட்ட முனையும் நீங்கள், முதலுதவிப் பயிற்சி பெறும் மாணவிகள் யுத்தப் பயிற்சி பெறும் போது அணியும் முழு நீளக் காற்சட்டை அல்லது சல்வார் போன்ற உடை அணிந்திருப்பது ஏன்? பெற்றோர்களை இழந்த, ஆதரவற்ற சிறுமிகள் வாழ்ந்த வளாகத்தில்தான் முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டதாக நீங்கள் கூறுவதிலிருந்து, இந்தப் பயிற்சியை ஒழுங்கு செய்தவர்கள் புலிகள் தானென்பதை மறுக்க முடியுமா? உங்களுக்குத் தெரியாமல் உங்கள் கட்டடத் தொகுதியில், அதுவும் உங்கள் கூற்றுப்படி அநாதைச் சிறுமிகள் வாழும் இல்லத்தில் வேறு எந்த அமைப்பாவது பயிற்சி முகாம்களை நடத்த முடியுமா? பதினொராம் திகதி வெள்ளிக்கிழமை நீங்கள் படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு முதல் நாள், அதாவது பத்தாம் திகதி வியாழக்கிழமை, முல்லைத்தீவு மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இருக்கக்கூடிய பாடசாலைகளிலிருந்து, அதிபர்களின் அனுமதியின்றியே முதலுதவிப் பயிற்சியென்ற போர்வையில் ஆண்டு 10, 11, 12ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மாணவிகளைத் தேர்ந்தெடுத்து பஸ்களில் ஏற்றிச் சென்றீர்களென்று சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் கூறுவது பொய்யா? ஆதரவற்ற பிள்ளைகளுக்குத்தான் பயிற்சியளித்தீர்களென்றால் பெற்றோர்கள் கண்ணீரும் கம்பலையுமாக வந்து தமது பிள்ளைகளின் சடலங்களைப் பொறுப்பேற்பதற்கு வானத்திலிருந்தா வந்தார்கள்? எவருக்கும் நடந்தவற்றைக் கூற வேண்டாமென்றும் அப்படிக் கூறினால் நடப்பது வேறென்றும் உற்றார், உறவினர், பெற்றோர்களை நீங்கள் மிரட்டியிருப்பதாகக் கூறப்படுவது பொய்யா? இதனால்தான் காயப்பட்ட சிறுமிகளும் பெற்றோர், உறவினர்களும் பயிற்சி குறித்துத் தெளிவற்ற பதில்களைக் கூறுகிறார்களென்று யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யுவானா கூறியதன் உள்ளார்த்தம் உங்களுக்குப் புரிகிறதா?

இப்போதும் கூட வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்லப்பட்ட 1538 சிறுவர், சிறுமியர் புலிகளின் படையணிகளில் இருப்பதாக அண்மையில் யுனிசெப் விடுத்த அறிக்கையும் பொய்யா? சடலங்களும் பேசும், அவை சாகாவரம் பெற்ற உண்மைகளை அம்பலப்படுத்தும் என்பதையே பிணமாகக் கிடக்கும் அந்தப் பிஞ்சுகளின் சடலங்கள் காட்டுகின்றன.

# புதிய அரங்குகளில் காத்திருக்கும் அதிர்வுகள்!

**போர்** நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் புரியப்பட்ட படுகொலைகளுக்கு ஒவ்வொருவரும் பழக்கப்பட்டுப் போனதைப் போல் இன்று யுத்தமொன்றையும் சகித்துக் கொள்ளப் பழகிவிட்டோம்.

மாவிலாறில் ஆரம்பித்த மோதல்கள் திடீரென்று மூதூரில் வெடித்ததும், அங்கு தொண்டு நிறுவனப் பணியாளர்கள் பதினேழு பேரும், நூற்றுக்கணக்கான பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டதும் கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்த பெரும் பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது.



இலங்கை இராணுவத்தினர்

சர்வதேச நாடுகளின் கண்டனங்களும் அனுதாபமும் ஒரே வகையில் மூதூரை நோக்கித் திரும்பியது. மூதூரில் முஸ்லிம்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டபடியால், முஸ்லிம் அமைச்சர்களின் பிரசன்னமும், அவர்கள் சர்வதேச சமூகத்திடம் பிரச்சினையைக் கொண்டு சென்ற விதமும் புலிகள், முஸ்லிம்களைக் குறிவைத்து நடத்திய தாக்குதல்கள் அப்பட்டமாக - அம்பலமாகக் காரணமாக இருந்தது.

அதேவேளை, மாவிலாறு அணைக்கட்டை படையினர், புலிகளின் பிடியிலிருந்து மீட்டு இன்று தமது ஆளுமைக்குள் கொண்டு வந்துள்ளனர். இறுதி நேரத்தில் தாமே மனிதாபிமான அடிப்படையில் தண்ணீரைத் திறந்துவிட்டதாகச் சொன்ன புலிகளின் பொய்கள் இன்று நிரூபிக்கப்பட்ட நிலையில் படையினரிடம் அணைக்கட்டையும் அதன் பிரதேசத்தையும் பறிகொடுத்துள்ளனர். இவ்வாறு மூதூரில் ஏற்பட்ட அரசியல் தோல்வியையும், மாவிலாறில் ஏற்பட்ட இராணுவத் தோல்வியையும் மூடி மறைக்கும் விதமாகத் திறக்கப்பட்டதுதான் யாழ்ப்பாணத்தின் புதிய போர்க்களம்.

யாழ்ப்பாணத்தில் போர்க்களமானது புலிகளின் நீண்டகாலத் திட்டத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட வேண்டிய துரதிர்ஷ்டம் ஏற்பட்டு விட்டது. புலிகளைப் பொறுத்தவரை, தமது முன்னரங்கக் காவல் நிலைகளிலிருந்து நிலத்துக்கடியில் தோண்டி படையினரின் முக்கிய முகாம்களை நினைத்த வேகத்தில் கைப்பற்றுவதான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்காக நீண்ட கொங்கிரீட் குழாய்களைக் கொண்டு புலிகள் நிலத்துக்குக் கீழாகப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த அதேவேளை, பூநகரியிலிருந்து தீவகத்துக்குள் ஊடுருவி அங்கிருந்து படையினரின் பிடரியைப் பிடிப்பது என்பதும் பாரிய திட்டங்களாக இருந்தது. அதற்கிடையில் திருமலையில் நிலைமை மோசமடைந்து தவிர்க்க முடியாமல் யாழ்ப்பாணத்தில் சண்டையை ஆரம்பிக்கும்படியாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் போட்ட திட்டங்கள் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதாக அமையவில்லை என்றே கூற வேண்டும். புலிகள் யாழ்ப்பாணத்துக்கு ஊடுருவும் மார்க்கங்கள் குறித்து இராணுவம் ஏற்கனவே அறிந்திருந்ததோடு, புலிகளை உள்வாங்கித் தாக்கும் புதிய போர் உத்திகளையும் படையினர் கையாண்டிருந்தனர். இதற்கிடையே கடந்த நான்கு ஆண்டுகளில் புலிகளின் போர்த்திறன் எப்படி வளர்ச்சி கண்டுள்ளது என்று தெரியாமல் படைத்தரப்பு போட்ட கணக்குகளும் புலிகளால் பொய்ப்பிக்கப்பட்டுள்ளன.

மாவிலாறில் அணையைக் கைப்பற்றுவது படைத்தரப்புக்குப் பெரும் நெருக்கடியையும், சவாலையும் கொடுத்தது என்பதை மறுக்க முடியாது. அரை மைல் தூரத்தைக் கடக்க, சுமார் ஒரு வார காலத்துக்கு மேல் படையினர் பெரும் இழப்புக்களுக்கு மத்தியில் போராட வேண்டியிருந்தது. அதேபோல் மூதூருக்குள் புலிகள் திடீரென்று புகுந்து தாக்கியதும் படைத்தரப்புக்கு அதிர்ச்சியாகவே அமைந்தது. ஆகவே படைத்தரப்பு புலிகளின் போர்த்திறன் பற்றிய அளவீடுகளை மீள்பரிசீலனை செய்யவும் அதற்கேற்றவாறு தந்திரங்களை வகுக்கவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த அனுபவங்களும் யாழ். குடாநாட்டைப் புலிகளிடம் பறிகொடுத்துவிட்டால் இலங்கையில் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டு பிரச்சினைகளைப் பார்க்க வேண்டிய நிலை உருவாகும் என்ற பலதரப்பட்டவர்களின் ஆலோசனையும்

> நிலைமையை உணர்ந்து இருதரப்பும் போர்நிறுத்தம் செய்வதோடு, சமாதானத்துக்கான பேச்சுக்களையும் ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் உட்பட அனைத்து சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றன. புலிகளும் தமது தரப்புத் தாக்குதல்களை நியாயப்படுத்துவதோடு, அரசு தாக்குதல்களை நிறுத்தினால் தாமும் நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். இது உளப்பூர்வமான அறிவிப்பா என்பது தொடர்பில் அரச தரப்பில் வலுவான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசுக்கும், படைத்தரப்புக்கும் பெரும் அழுத்தமாகவே இன்று மாறியுள்ளது.

ஆனால் படைத்தரப்பு புலிகளைக் கையாண்ட விதம் புலிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பின்னடைவையும், இழப்பையும் கொடுப்பதற்கு, படைத்தரப்பும் பெரும் இழப்புக்களையும் சேதங்களையும் எதிர்கொண்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணத்தில் மோதல் என்றும், புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விடுவார்கள் என்றும், மக்கள் உணவுப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து



புலி உறுப்பினர்கள்

வருகிறார்கள் என்றும் செய்திகள் பரவிய வேகத்தில் திருமலையில் சுமார் 90 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்ததும், 100க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதும், 200 முஸ்லிம்கள் கடத்தப்பட்டதும், மாவிலாறு அணையை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகப் புலிகள் நடத்திவரும் தாக்குதலும் பேசாப் பொருளாக மாறியுள்ளன.

திருமலையில் புலிகளால் விநியோகிக்கப்படும் துண்டுப் பிரசுரங்களில் முக்கிய படைத்தளங்களுக்கு அருகாமையில் இருப்பவர்களை வெளியேறும்படியும் தாம் தாக்குதல் நடத்தவுள்ளதாகவும் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்புக்குள் குண்டு வெடிப்புகளைத் தொடர்வதற்காகத் தயாரிப்பு வேலைகளைச் செய்து வருகின்றனர். அநேகமாக யாழ்ப்பாணத்தில், போர் உக்கிரமடையும் போது கொழும்பில் தொடர்குண்டு வெடிப்புகளை நடத்தி அரசை திக்குமுக்காடச் செய்வதே புலிகளின் பிரதான நோக்கமாகவுள்ளது.

இதற்கிடையே மட்டக்களப்பு மாவட்டமும், அம்பாறை மாவட்டமும் புலிகளின் கவலைக்குரிய பிரதேசங்களாக மாறியுள்ளன. அங்கு பழைய திறத்தோடு போர் நடத்துவது சாத்தியக் குறைவாகவே உள்ளதை புலிகளின் தரப்புகள் கவலையுடன் சிந்திப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியிலிருந்து படையினரின் நடமாட்டங்களையும், நகர்வுகளையும் புலிகளுக்குத் தெரிவிக்கும் தகவல் பறிமாற்றம் தொடர்பில் சில முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேபோல் ஊடரங்குச் சட்டம் அமுலில் இருக்காவிட்டால் புலிகளின் ஊடுருவலும், தாக்குதல்களும் குடா நாட்டுக்குள்ளிருந்தே இடம்பெறலாம் என்பதும் புலிகளின் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. ஆகவே சிறிய சிறிய ஓய்வுகளைக் கண்டாலும் யாழ்ப்பாண போர்முனை, எரிமலையைப்போல் எந்த வேளையும் வெடித்துச் சிதறலாம்.

இதற்கிடையே வவுனியாவிலுள்ள முக்கிய இராணுவத் தளங்களை இலக்கு வைத்தும் புலிகள் தமது பீரங்கிப் படைப்பிரிவை நகர்த்தி வருவதாகத் தெரியவருகிறது. மோதல் பெரிதாக வெடிக்கின்ற போது இருதரப்பும் எறிகணை வீச்சுக்களையே போரின் பாதி வேலையாக நடத்தவுள்ளன. இதன் விளைவாகப் பொதுமக்களே பெரிதும்

அலசுவது
**- மதியூகி -**

பாதிக்கப்படுவர்.

ஆக, நிலைமையை உணர்ந்து இருதரப்பும் போர்நிறுத்தம் செய்வதோடு, சமாதானத்துக்கான பேச்சுக்களையும் ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் உட்பட அனைத்து சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றன.

புலிகளும் தமது தரப்புத் தாக்குதல்களை நியாயப்படுத்துவதோடு அரசு தாக்குதல்களை நிறுத்தினால் தாமும் நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். இது உளப்பூர்வமான அறிவிப்பா என்பது தொடர்பில் அரச தரப்பில் வலுவான சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஆகவே புலிகள் ஓய்வுக்குச் சென்று மீண்டும் தாக்க நினைக்கும் இலக்குகளை அரசு பாதுகாத்துக் கொள்ளவே முயற்சிக்கும் தாக்குதல்கள் தொடரும்.

## அதிரடி அய்யாத்துரை



"**பல** நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" எண்டு வினம். அப்புடிப் போலை பல்கலைக்கழகத்துக்குள்ள இருந்து கொண்டு அவர் குதிரைக் கஜேந்திரன் சொல்லுறதுக் கெல்லாம் கைகட்டி சேவகம் செய்தவையள் இப்ப வேஷம் கலைஞ்சு வெளியால தெரிய வருகினம். அதில முக்கியமானவர் அதாவது குதிரையாரின்ர வலது கையாக மாணவர்களுக்கு ஹீரோ விளையாட்டுக் காட்டித்திரிஞ்சவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பிடிபட்டார் எண்டு கேள்விப்பட்டவைக்கு பகீர் எண்டுதான் இருந்திருக்கும். எல்லாளன் படை, பொங்கி எழும் மக்கள் படை எண்டெல்லாம் பல பேர்களிலை அவர் வச்சிருந்த கடிதத் தலைப்புகளையும் படைத்தரப்பு கைப்பற்றி இருக்கினம். இப்ப தெரியுதே, ஊருக்குள்ள பினாமிப் பெயர்களில நடந்த வன்முறைகளுக்கும் கொலைகளுக்கும் யார் துணைபோயிருக்கினம் எண்டும், எங்க பாதுகாப்பாக இருந்திருக்கினம் எண்டும். உந்தக் குத்துக் கரணமெல்லாம் அடிச்சுத்தான் குதிரையார் எருமை மாட்டுக்கு ஜீன்ஸ் போட்ட மாதிரி எம்.பி. யானவர். ஏதோ எல்லா மாணவர்களும் உப்பிடி இல்லையுங்கோ. ஒரு சிலர்தான் குதிரையாரின்ர குறுக்கு ஓட்டத்தில ஓடி தங்கட படிப்பையும், பெத்ததுகளின்ர ஆசையையும் குழிதோண்டிப் புதைச்சுப்போட்டு நிக்கினம். இனியாச்சும், பெடியளை படிக்க விட்டுப் போட்டு குதிரையார் தன்ர கொட்டிலை யாழ். பல்கலைக் கழகத்தை விட்டு இடம் மாத்தினால் நல்லது எண்டு பெற்றோர்கள் எதிர்பார்க்கினமுங்கோ.

**போன** வாரம் தலைநகரில நடந்த சமாதானத்தை வலியுறுத்திற பேரணியும், கூட்டமும் தானுங்கோ லேட்டஸ்ட் ஜோக். கோமாளிகள் ஒண்டாச் சேர்ந்து ஒரு ஆர்ப்பாட்டம், பிறகு ஒரு கூட்டம் எண்டு ஒரு தலைப் போடை நடத்தியிருந்தால் இன்னும் சூப்பரா இருந்திருக்கும்.

காவியுடை போட்டவை தர்மம் போதிக்கிற உத்தம வேலையை விட்டுப்போட்டு பொலிரிக்ஸுக்குள்ள போனதே பெருந் தவறு எண்டு முழு பௌத்த சிஷ்யர்களும் சொல்லினம்.

பார்ளிமெண்டுக்குள்ள சண்டை பிடிக்கினம். பிறகு படாத இடத்தில பட்டிட்டுது எண்டிச்சினம். பிறகு போன வாரம் மேடையில வச்சு காவியைப் புடிச்சு துகிலுரிஞ்சிச்சினம். அந்தக் காட்சிகளை மகாராஜாவின்ர டி.வி. நேரடியாகவே படம் புடிச்சுக் காட்டினது. உதென்ன மகாபாரதமே துகிலுரிஞ்சால் கிருஷ்ணன் சேலை தாரதுக்கு? மகா பாதகம் எண்டதாலை காவிகளுக்குத் துகில்தான் உரியப்பட்டதே தவிர, மீண்டும் காவிகொடுக்க எந்தக் கிருஷ்ணனும் அவதரிக்கவில்லையுங்கோ. காவிகள் போர்த்தினவை போடுற குழப்பங்களாலை இந்த நாடு இன்னும் என்னென்ன கண்றாவிகளையெல்லாம் மேடையில கண்டு களிக்கப்போகுதோ...

**வடக்கில** மக்கள் அகதியானதையும், உணவுக்குக்கூட கஷ்டப்படுகினம் எண்டதையும் வீணைக் கட்சியின்ர தலைவர் அதிகாரமானவரை அடிக்கடி சந்திச்சு தெரியப்படுத்தி வடக்குக்கு நிவாரணங்களை அனுப்பி வைக்கிறதை விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறாராம். கிழக்கில ஏழெட்டு அமைச்சர்மார் செய்ததை தான் ஒரே அமைச்சராக நிண்டு செய்யிறனெண்டதைக் கூட விளம்பரம் செய்யாமல் தேவமானவர் செய்யிறாருங்கோ. எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் அறிக்கைக்கு மேல அறிக்கை விடுகினமே தவிர, ஆகிற காரியமாக எதையும் இதுவரை செய்யயில்லையுங்கோ.

இவ்வளவு காலமும்தான் அர்த்தமில்லாத கதையளைக் கதைச்சுக் கொண்டு திரிஞ்சவை. இப்பயாச்சும் சனம் கஷ்டப்படேக்க உந்த பொலிரிக்ஸ் வேறுபாடெல்லாம் ஒருபக்கம் தள்ளிப்போட்டு, அதிகாரமானவரைச் சந்திச்சு சனத்துக்கு ஏதாச்சும் நல்லது செய்யலாமெல்லோ. என்னதான் வாய் வீரம் கதைச்சாலும், அவசரமெண்டு வரேக்க அரசாங்கத்திடம்தான் கேக்கவேணும். அவை குடுத்தால்தான் உதவி எண்டதும் இப்பகூடவா இவைக்குப் புரியுதில்லையெண்டு பாதிக்கப்பட்ட சனம் சொல்லினமாம். கூத்தமைப்புக்காரர் சனம் சொல்லுறதைக் கேப்பினமோ? இல்லையே...

**அண்மையில** அதிகாரமானவர் பத்தி ஆசிரியர்களைச் சந்திச்சவர். அதில ஒளி வீசுற ஒரு பத்தியின்ர ஆசிரியரை தனியாக் கூப்பிட்டு அவையின்ர செய்திகளில நியாயமெண்டதே செத்துப்போயிருச்சே எண்டு செய்த அர்ச்சனைக்கு வித்தியாசமான தரத்தார் கையைக் கட்டிக் கொண்டு ஓமோம்...ஓமோம்...எண்டு தலையை அசைச்சதைப் பார்க்கனுமே. என்னதான் இருந்தாலும் சக பத்தியாசிரியர் ஒருவரை உப்பிடி அர்ச்சிக்கிறாரே எண்டது எனக்கும் கவலைதான். அவருக்கு அர்ச்சனை நடக்கேக்கையே, யாரோ இரண்டுபேர் இடையில நுழைஞ்சு வித்தியாசமான தரத்தார் தன்னை ஒரு தீவிரவாதியாகத்தான் போனில கதைக்கிறவைக்குக் காட்டிக் கொள்ளுறவர் எண்டு போட்டுக் குடுத்திச்சினம். அதைக் கேட்ட அதிகாரமானவர் வித்தியாசமான தரத்தாரைப் பார்க்கவும், வித்தியாசமான தரத்தாரின்ர முகத்தில பால் பொங்கி வழியுமாப்போலை அசடு வழிஞ்சுது. உந்த நேரத்தில நாம என்ன செய்ய முடியும். வித்தியாசமான தரத்தார் அதிகாரமானவருக்கு என்ன நியாயத்தைச் சொன்னாரோ தெரியல்லை. ஆனால், அதிகாரமானவர் திருப்திப்படாதவர் மாதிரியே வித்தியாசமானவரை விட்டு விலகினதைப் பார்க்கேக்க பாவமா இருந்ததுங்கோ.

**மத்திய** மாகாணத்தில தெரிஞ்சவர் ஒருவரின்ர நண்பர் இறந்திட்டாராம். தான் போக வேணுமெண்டு போன வாத்தியார் ரெண்டு நாள் கழிச்சுத் திரும்பி வந்தாருங்கோ. அவரின்ர முகத்தைப் பார்த்து, என்ன செத்த வீட்டை அப்புடியே முகத்தில பூசிக்கொண்டு வாறியள் எண்டு கேட்டதுக்கு வாத்தியார் சொன்ன கதை தூக்கிப் போட்டதுங்கோ.

செத்த வீட்டுக்குப் போனாராம். அங்க பெட்டியையும் காணயில்லையாம், பிணத்தையும் காணயில்லையாம். செத்தவர் யாழ்ப்பாணத்தில நடந்த சண்டையில செத்துப் போயிட்டார் எண்டு வீட்டுக்குத் தகவல் வந்ததாம். பிறகு அவரது சடலத்தைக் காணயில்லை. அவரை ரெண்டெழுத்தார் பிடிச்சுக் கொண்டு போயிட்டினமோ எண்டதும் தெரியலையாம் எண்டும் தகவல் சொல்லிச்சினமாம். மொத்தத்தில ஆள் செத்திட்டார் எண்டு ஒரு முடிவுக்கு வீட்டுக்காரர் பேசி முடிச்சிட்டினமாம். பிறகென்ன செத்த வீடு நடத்தியிருக்கினம். தானையெண்டும் பணையெண்டும் வீடு துக்கத்துக்கு மேல துக்கமாகவே போயிட்டுதாம். வாத்தியார் வாயை வச்சுக்கொண்டு சும்மா இருக்க ஏலாமல் நாளைக்கு அவர் உயிரோடு இருந்து வந்தால் என்ன செய்யுவியள் எண்டு கேட்டாராம். அதுக்கு அவை, அவர் வந்தால் பிரச்சினையில்லை; வீட்டோடை சேர்த்துக் கொள்வோம் எண்டிச்சினமாம். பாவம் வாத்தியார் உந்த முரண்பாடுகளை முடிச்சு அவிழ்க்க முடியாமல் முழிச்சுக்கொண்டிருக்காருங்கோ...

# நாய்க்குட்டி

**நம்மோடு** மிகவும் அந்நியோன்யமாகப் பழகும் நாலு கால் மிருகம் என்றால் அது நாய் என்று காட்டி விடுவோம். அதேபோல் நமக்குப் பிடிக்காத ஒருவரை திட்டித் தீர்ப்பதற்கும் அவரை 'நாய்' என்று விளித்துவிடுகிறோம். எப்போதுமே நமக்கு நமது கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் அதிகம். வேறு எந்தவொரு உயிரினத்திட மும்இல்லாத அத்தனை முரண்பாடுகளும் மனிதனிடம் தான் இருக்கிறது. நன்றியுள்ளது என்றால் யாரும் இன்னொரு மனிதனைக் குறித்துக் காட்டுவதில்லை. நாயைத்தான் காட்டுவது வழக்கம். ஏன், ஒரு நாயை விடவா நன்றிகெட்டவர்க ளாகிவிட்டோம்? நாயோடு நாம் சிரித்திருக்கிறோமா, நாயோடு நாம் அழுதிருக்கிறோமா, நாய்க்கு உதவியிருக்கிறோமா, நாயின் தேவைகளை உணர்ந்து கொண்டிருக்கிறோமா - ஒன்றும் செய்வதில்லையே. ஆனால் நாய் மட்டும் நன்றிக்கு இலக்கணமாக இருக்கிறது. மனிதன் இன்னொரு மனிதனை நம்புவதில்லை. ஒளிவு மறைவு இல்லாமல் இன்னொருவரை நாம் நேசிப்பதில்லை. ஒருவர் செய்த உதவியை விரைவிலேயே மறந்து விடுகிறோம். நமக்குத் தேவையானபோது தனித்தனியான வர்களைக் கூட்டமாகவும், தேவையில்லாத போது கூட்டமான வர்களை தனிமையானவர்களாகவும் வகுத்துக் கொள்கிறோம். பணம், வசதி, செல்வாக்கு என்று மற்றவர்களை அளவிட்டு அவர்களிடம் மண்டியிட்டுப்போகிறோம்.

நாய் தன் எஜமான் நல்லவனா, கெட்டவனா? அழகா னவரா, வசதியானவரா அந்தஸ்து, மிகுந்தவரா? என்று பார்ப் பதில்லை. நாய் தன் எஜமானை, எஜமானாக மட்டுமே பார்க்கிறது. அதற்காக நாயை முட்டாள்தனமான மிருகம் என்று நினைத்துவிடக் கூடாது. நாய், மனிதனை நினைத்தால் ஒரு வகையில் நியாயம் உண்டு. நான் ஒரு கதை படித்தேன். வீட்டில் நாயையும், பூனையையும் வளர்த்தால் இரண்டும் தன் எஜமானைப் பற்றி என்ன நினைக்கும் என்பது பற்றிய கதை.

'தன் எஜமான் தான் கடவுள். தன்னை வைத்துப் பார்க் கிறான்.' என்று நாய் நினைக்குமாம். 'தான் தான் கடவுள் அதனால் தான் தன் எஜமான் தன்னை வைத்துப் பார்க்கிறான்' என்று பூனை நினைக்குமாம். நாயும்,




பூனையும் எப்படி நினைக்கும் என்று யோசிப்பது இன்னொரு விஷயம். ஆனால் அதில் கூட தன் எஜமானைக் கடவுளாகத்தான் நாய் நினைக்கிறது. ஆனால் மனிதன் கடவுளாக நடந்து கொள்வதேயில்லை.


ஒருவேளை உணவுக்கே பிச்சை எடுக்கும் ஒருவருக்குப் பின்னால் வயிறு ஒட்டிப்போய் ஒரு நாயும் இருக்கும் காட்சிகளை அடிக்கடி கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அந்த நாயை நினைத்துக் கொள்வேன். அந்த மனிதனுடைய உறவுகளும், சுற்றமும், அவனை உதறித்தள்ளி, தெருவில் அலைய வைத்துவிட்டாலும் அவனை தன் எஜமானாக நினைத்து அவன் மீது நம்பிக்கையோடு அந்த நாயும் இருக்கும். அந்த நாய் நினைத்தால் அவனை விட்டு விலகி, நாலு தெருக்களில் அலைந்து தன் வயிற்ற நிரப்பிக்கொள்ள முடியும். அப்படி சுயநலமாகப் போய்விட நாய் மனிதனில்லையே! அவ்வழியால் போகும் தெரு நாய் கூட இந்த நாயைப் பார்த்துவிட்டுப் போகும். ஆனால் அந்த மனிதனின் உறவுகளோ அவனின் திசைக்கு எதிர்த் திசையைப் பார்த்துக் கொண்டு போவார்கள். இதற்கும் ஒரு படி மேலே போய் கண் பார்வை இல்லாத தன் எஜமானுக்கு வழிகாட்டியாக இருந்த கதைகளையும், தண்ணீரிலே விழுந்த தன் எஜமானைக் கரைசேர்த்த நாய்க ளைப் பற்றியும் நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

நாய்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதும், வாசித்ததுமான பல விடயங்கள் எனக்குள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில்தான் பகிர்ந்து கொள்ளமுடியும். நான் நேரடியாக அனுபவித்த நாயின் கதை ஒன்று இருக்கிறது. அப்போது எனக்குப் பத்துப் பதினொருவயது தான் இருக்கும். எனக்கும், தம்பிக்கும் நாய்க்குட்டிகளைக் கண்டாலே கொள் ளைப் பிரியம். ஒரு ஆண் குட்டிக்காகக் காத்திருப்போம். கடைசியில் பெட்டைக் குட்டி என்றாலும் பரவாயில்லை என்று தூக்கிக்கொண்டு வந்துவிடுவோம்.

வீட்டுக்குக் கொண்டு வந்தால் தங்கைமாரும், அம்மாவும், அப்பாவும் விருப்பத்தோடு அதற்குப் பால், குளிருக்குப் போர்வையாகத் துணி என்று ஓடி ஓடி வசதி செய்வார்கள். அவர்களிடம் நாயை விட்டுவிட்டு நானும், தம்பியும் அவசர அவசரமாக அந்த நாய்க்குட்டிக்குப் பொருத்தமாக சிறிய கூடு கட்டுவோம். அதற்குள் சாக்கு மடித்துப்போட்டு போத்தல் மூடியில் தண்ணீர் வைத்து நாய்க்குட்டியையும் உள்ளே விட்டு ரசிப்போம். சிரட்டையில் தண்ணீர் வைத்தால் அம்மா திட்டுவார். நாய்க்குட்டிக்கு சுகமில்லாமல் போய் விடுமாம். ஆகையால் போத்தல் மூடியில்தான் தண்ணீர் வைப்போம்.

நாய்க்குட்டி கத்தத்தொடங்கினால் அயல் வீட்டுக்குத் தெரிந்து விடும் எங்கள் வீட்டுக்கு நாய்க்குட்டி வந்து விட்டதென்று. நானும் தம்பியும் எங்கோ போய் தெரு நாயோ, வளர்ப்பு நாயோ என்றெல்லாம் பார்க்காமல் ஒரு குட்டியைக் கொண்டு வந்து விட்டோம் என்பார்கள். நாய்க்குட்டி போடும் சத்தத்தில் அக்கம் பக்கத்தில் உள்ள சின்னப் பிள்ளைகளும் எங்கள் வீட்டுக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாய்க்குட்டியை ஒரு தடவை தூக்கிக் கொஞ்சவேண்டும் போல் தோன்றும். அதற்காக ஒரு கெஞ்சலோடு எங்களைப் பார்ப்பார்கள். நான் ஒரு ஓரமாக இருந்து கொள்வேன். தம்பிதான் ஒவ்வொரு தடவையும் நாய்க்குட்டியைப் பிடித்துத் தூக்கி ஒவ்வொருவருக்கும் கொடுப்பான். அவர்கள் கொஞ்சி, தலையைத் தடவிவிட்டு, தம்பியிடம் கொடுப்பார்கள். தம்பியின் முகம் ஆயிரம் வோல்ட்ஸ் மின்சாரம் போல பிரகாசமாக மின்னும். ஏதோ வேற்று கிரகத்திலிருந்து புதுவகையான மிருகத்தை நாங்கள் எங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டதாகப் பெருமையாக இருக்கும்.

இந்தச் சந்தோஷத்தைச் சில வேளைகளில் நீடிக்கவிடாமல், யாராவது ஒரு சின்னப் பிள்ளை, நாய்க்குட்டியை தன்னுடன் கொண்டு போக வேண்டும் என்று விடாப்பிடியாக அழும். என்ன சமாதானம் சொல்லியும் சரி செய்ய முடியாத சங்கடம் உருவாகும். அதேவேளை என் சின்னத் தங்கச்சியும், அந்தப் பிள்ளையிடம் நாய்க்குட்டியைக் கொடுக்கவேண்டாம் என்று பிடிவாதம் காட்டுவாள். நானும், தம்பியும் எவ்வளவு முயற்சித்தும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாமல் போகும். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அப்பா வந்து, என் தங்கையிடம் ஒரு உறுதி மொழியைச் சொல்வார். அந்த நாய்க் குட்டியை எப்படியும் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருவதாக. அதேபோல் எங்களிடம் திரும்பி, 'இப்பொழுது நாய்க் குட்டியைக் கொடுத்துவிடுங்கள். பிறகு அந்தப் பிள்ளை தூங்கிய பிறகு தூக்கிக்கொண்டு வந்துவிடலாம்' என்று சொல்லிவிட்டு, அழுகிற பிள்ளையிடம் நாய்க் குட்டியைக் கொடுத்து கொண்டு போகும்படி அனுப்பி விடுவார். அப்போதுதான் எங்கோ வீசியெறியப்பட்ட சந்தோஷம் அந்தப் பிள்ளைக்குக் கிடைத்துவிட்டதைப் போல் சிரிக்கும். பெருமையோடு நாய்க்குட்டியை கட்டியணைத்துக் கொண்டு போகும். அப்போது கூடி நின்ற மற்றப் பிள்ளைகளின் முகம் வாடிப்போகும். தாமும் இப்படி அழுது இருந்தால் இந்த நாய்க்குட்டியைத் தமது வீட்டுக்குக் கொண்டு போயிருக்கலாமென்று அந்தப் பிள்ளைகள் நினைப்பது முகத்தில் தெரியும். நானும் தம்பியும் இரவாகி அந்தப் பிள்ளை தூங்கும் வரைக்கும் காத்துக் கொண்டிருப்போம்.



தருவது : தேசன்

இப்படி ஒவ்வொரு தடவையும் பெரும் பாடுபட்டு நாய் வளர்ப்போம். எங்கள் பலன் - எந்த நாய்க்குட்டியும் இரண்டு கிழமை அல்லது ஒரு மாதத் துக்கு மேல் உயிரோடு இருக் காது. இறந்து விடும். ஏன் செத் துப் போகிறது என்று தெரியாது. நானும் தம்பியும் பேப்பரில் சுத்தி றோட்டுக்குக்கொண்டு போய் குப்பை மேட்டில் குழி தோண்டிப் புதைத்து விட்டு, புதைத்த இடத்தில் ஒரு பூமரத்தையோ, மாமரத்தையோ நாட்டிவிட்டு வருவோம். நாய்க் கூடும் போத் தல் மூடியும் அப்படியே இருக் கும். பிறகு இன்னொரு நாய்க் குட்டி. இப்படியே என் ஞாப கத்துக்கு மட்டும் ஒரு பதினை ந்து நாய்க்குட்டிகளை நாங்கள் வளர்க்கப் பெரும் பாடுபட்டோம். கடைசி வரை எந்த நாய்க் குட்டியும் வளர்ந்து எங்களுடன் இருந்ததில்லை.

இறந்து, இறந்து போனாலும் மீண்டும், மீண்டும் நாய் வளர்க்க விரும்பியதற்கு பிரதான காரணம் ஒன்று இருந்தது. அதாவது, நான் பிறந்திருந்த காலத்தில் எங்கள் வீட்டில் 'வீரா' என்றொரு நாய் இருந்ததாம். அப்பா வேலைக்குப் போன பிறகு அம்மா வீட்டு வேலைகளில் இருக்கும் போது - 'வீரா' தான் என் தோழன்... என் பாதுகாவலன் எல்லாம். அம்மா எனக்கு சாப்பாடு ஊட்டும் போது வீராவுக்கும் ஒரு பங்கு வைத்து விடுவாராம். இப்படியே என் அண்ணனாகவும், நண்பனாகவும் வாழ்ந்து வளர்ந்த அந்த 'வீரா' என் ஏழாவது வயதில் ஒருநாள் எங்கள் வீட்டு வாழை மரத்துக்குக் கீழ் இறந்துவிட்டது. 'வீரா' என்னுடன் பழகிய எந்த ஞாபகமும் எனக்கு இல்லை. ஆனால் வீரா இறந்து கிடந்ததும் அதை அப்பா தூக்கிக்கொண்டு போய் எங்களது தோட்டத்தில் புதைத்ததும் இன்னும் துளித்துளியாக ஞாபகம் இருக்கிறது. 'வீரா' செந்நிறமான ஆண் நாய். அதற்குப் பிறகுதான் இன்னொரு வீராவாக ஒரு நாயை வீட்டில் வளர்க்க வேண்டும் என்ற விருப்பம். ஆனால் கடைசி வரை அந்த வீராவுக்குப் பிறகு இன்னொரு 'வீரா' வளரவே இல்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் தெரு நாய் ஒன்று எங்கள் வீட்டில் நன்றியோடு ஒட்டிக் கொள்ளும். நாங்களும் அது விரும்புகிற நாள் வரை இருக்கட்டும் என்று பார்த்துக் கொள்வோம். இப்போது நாய்களில் எத்தனையோ வகைகள், இனங்கள் இருக்கின்றன. ஆனால் எனக்கு எதையும் வளர்க்க விருப்பமில்லை. ஏன் என்றால் இனியும் ஒரு நாய் என் பராமரிப்பிலிருந்து இறந்து விடக்கூடாது என்ற பயம் தான். என் மகன் இப்போதே நாய் பொம்மைகளைக் காணுகின்ற போது, 'பௌவ்... பௌவ்..' என்று விளையாடுகிறான். ஒருவேளை அவனுக்காக ஒரு நாய் வளர்க்க வேண்டியிருக்குமோ...? அப்படி நேர்ந்தால், அவனுக்காகச் சரி அந்த நாய்க்குட்டி இறந்து விடாமல் வளரவேண்டும். நான் இன்னும் 'வீரா' மீதான நன்றியுடன் நாய்களை நேசிக்கிறேன்.




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## இதுவா ஊடக தர்மம்? -பி.பி.ஸி.யிடம் யாழ். முஸ்லிம்கள்

**நாம்** பெருமதிப்பு வைத்திருக்கும் பி.பி.ஸி. தமிழ் ஓசையில் இடம்பெற்ற, ஒரு இருட்டடிப்பு செய்யப்பட்ட பக்கச்சார்பான செய்தி குறித்து எமது ஆழ்ந்த மன வேதனைகளையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பி.பி.ஸி. செய்திச் சேவையில் வடபகுதியில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் குறித்து ஓர் சிறப்பு பெட்டக நிகழ்ச்சி அண்மையில் ஒலிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியை அதன் வவுனியா செய்தியாளர் பி.மாணிக்கவாசகம் தொகுத்தளித்திருந்தார். பி.பி.ஸி.யின் பக்கச்சார்பற்ற செய்தி வழங்கலுக்கு இழுக்கு ஏற்படுத்தும் விதத்தில் மாணிக்கவாசகம் செய்தி வழங்குவது குறித்து ஏற்கனவே பல்வேறு தரப்பினராலும் பல விமர்சனங்கள் வெளியிடப்பட்டமை தெரிந்ததே.


ஆயினும் வடபுலத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களாகிய எமது விடயத்திலும் மூக்கை நுழைத்து, எமது வெந்த புண்ணில் மாணிக்கவாசகம் வேலைப்பாய்ச்சுவார் என நாம் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. அவர் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சியில் எமது வெளியேற்றம் பற்றியோ அல்லது 24 மணிநேரத்தில் புலிகளினால் துரத்தப்பட்டது பற்றியோ எதுவுமே கூறவில்லை. ஏன் புலிகளின் பெயரைக்கூட உச்சரிக்கவில்லை. ஏதோ நாம் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு வெளியேறியது போல் 'இடம்பெயர்ந்த முஸ்லிம்கள்'' என்றே குறிப்பிட்டார்.

மாணிக்கவாசகம் யாரிடமோ நல்ல பெயர் எடுப்பதற்கோ அல்லது அவர்களைத் திருப்திப் படுத்துவதற்கோ வேண்டுமாயின் அவர்களது ஊதுகுழலுக்குப் பணியாற்றியிருக்கலாமே. ஏன் ஒரு பக்கச்சார்பற்ற, உலகெங்கும் ஒலிக்கும் பி.பி.ஸி. தமிழ் ஓசையில் நமது பெயரைப் பாவித்து நாறடிக்க வைக்க வேண்டும்? பி.பி.ஸி. கவனிக்குமா?

– யாழிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள்.
தில்லையடி, புத்தளம்.


# விளம்பரப் பகுதி

**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

**ABI Beauty Parlour**



Abi Beauty Parlour

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

## இன்னொருவர் பார்வையில்

# கேதீஸின் கொலையும் தமிழ் மக்களின் இழப்பும்!

**'ஸ்ரீலங்கா**: இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்' என்பது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக எழுதப்பட்ட முக்கியமான புத்தகமொன்றின் தலைப்பாகும். இந்த நூலை 1995ஆம் ஆண்டு எழுதிய கேதீஸ் லோகநாதன், தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்கான மற்றொரு சந்தர்ப்பம் இழக்கப்பட்டு விட்டதால், பலியாக்கப்பட்டுவிட்டார். மாவிலாறு தண்ணீர் தொடர்பாக ஏற்பட்ட மனிதாபிமானப் பிரச்சினை இப்பொழுது முற்றுமுழுதான யுத்தமாக மாற்றமடைந்துள்ளது. பல நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அல்லது மிரட்டப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரைக் கூட இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அரசியல் வேறுபாடுகள் காரணமாகத் தமிழர்களால் கொல்லப்பட்ட தமிழர்களின் பட்டியலில், கேதீஸ்வரன் லோகநாதனும் இடம்பிடித்துள்ளார். தமிழ் புத்திஜீவிகளையும் அரசியல் தலைவர்களையும் கொலை செய்வதென்பது, புலிகள் இயக்கத்தின் குற்றச் செயலாக மாறியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான கொலைகளில் ஈடுபட வேண்டாமென்று புலிகள் இயக்கத்தைத் தடுத்து நிறுத்துமாறு அரசாங்கப் பேச்சாளர் சர்வதேச சமூகத்தைக் கேட்டுள்ளார். சர்வதேச சமூகம் தனது பங்களிப்பிற்கு அதனையும் விடக் கூடுதலாகச் செய்துள்ளது. இந்தியாவிலும், ஏனைய பல மேற்கத்தைய நாடுகளிலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதானது, மனித உரிமை மீறல்களில் மிக அடிப்படை அம்சமான வாழ்வுரிமையை புலிகள் இயக்கம் மீறியதன் நேரடி விளைவாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் விடுத்த அறிக்கை, கேதீஸ் லோகநாதனின் கொலையைக் கண்டித்ததோடு, இவ்வாறான கொலைகளைப் புலிகள் இயக்கம் நிறுத்தாதவரை அந்த இயக்கத்தின்மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கப் போவதில்லையென்றும் தெளிவாகத் தெரிவித்திருந்தது. புலிகள் இயக்கம் இலங்கை இராணுவத்துடன் தற்போது நடத்தி வரும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி, தடையை நீக்குவதற்கான ஒரு காரணியாக அதனைக் குறிப்பிடவில்லையென்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறும் யுத்தத்தைப் பொறுத்தவரை, சர்வதேச சமூகம் நடுநிலை வகிப்பதைப் போல் தெரிகிறது. இரு தரப்பும் யுத்தத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்று மட்டுமே சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்த எதிர்பார்ப்பை இலங்கை அரசாங்கம் ஈடுசெய்யுமா? அல்லது தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் மனித உரிமைகளைப் பேணுமாறு புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச சமூகம் விடுத்த கோரிக்கைகளுக்கு அந்த இயக்கம் செவி சாய்க்காதமை போன்று இலங்கை அரசாங்கமும் இக் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் விட்டு விடுமா?

'அதிகாரத்தைப் பகிர் அல்லது இறந்துவிடு' என்று அரசியல் ஆய்வாளரான தயான் ஜெயதிலகா எழுதியிருந்தார். தற்போது அரசாங்கத்தை யுத்தத்திற்கு இழுத்துச் செல்லும் ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் அதிகாரத்தைப் பகிர்வதைவிட இறந்து விடுவதே மேல் என்பதை இலட்சியமாகக் கொண்டுள்ளன போல் தெரிகிறது.

'சுயாட்சியும் அதிகாரம் பகிரப்பட்ட ஆட்சியும்' என்று கருத்துத் தெரிவித்தார் கேதீஸ் லோகநாதன். அந்த இலக்குக்காகப் பணிபுரியும் நோக்குடனேயே அரசாங்க சமாதான செயலகத்தில் அவர் இணைந்து கொண்டார். இந்த அரசாங்கத்தின் சமாதான நிகழ்ச்சி நிரலை, சொந்த இலாபத்திற்காக ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் கைப்பற்ற அனுமதிப்பதானது, கேதீஸ் லோகநாதனுக்குச் செய்யும் துரோகமாகும்.



கேதீஸின் தலையில் கை வைத்து மனைவி கதறி அழுகிறார்.

அத்துடன் சமாதான செயலகத்தினூடாக அவர் சாதிப்பதற்கு முயற்சித்த அனைத்திற்கும் செய்யப்படும் துரோகமுமாகும்.

கேதீஸ்வரனும் அவருக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட அனைவரும் தத்தமது வழிகளில் புலிகளுக்கு எதிராக எழுந்து நின்றார்கள் என்பது மட்டுமல்ல ஒற்றையாட்சிக்கு எதிராக தமிழர்களுக்குச் சார்பாக உறுதியாக நின்றார்கள் என்பது வசதிக்கேற்றவாறு மறைக்கப்பட்டு விட்டது. புலிகளின் மனிதப் படுகொலைகள் மிலேச்சத்தனமானவை. அவை குறித்து உடனடியாகக் கண்டனமும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், ஒற்றையாட்சியை மாற்றுவதற்கு எதனையும் செய்யத் தவறும் அரசாங்கத்தின் குற்றச் செயல் குறித்து மிக அபூர்வமாகவே குறிப்பிடப்படுவதோடு அது குறித்து இலகுவாகவும் அசட்டை செய்யப்பட்டுவிடுகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட ஒரு வருட ஞாபக தினத்தன்று கேதீஸ் லோகநாதன் கொலை செய்யப்பட்டுள்ளார். ஒரு பயங்கர உணர்வோடு இக் கொலைக்கான சந்தர்ப்பம் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே படுகொலை செய்யப்பட்டவர்களிலும் பார்க்க கேதீஸ் லோகநாதன் வித்தியாசமானவர். அதாவது, 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் முகிழ்த்த, தமிழ்ப் போராட்ட இயக்கமொன்றின் அங்கத்தவராக செயற்பட்ட அவரது சமூகத் தன்மைக்கு அப்பால், அவரொரு அபூர்வமான மனிதரும் கூட. ஒவ்வொரு தமிழ் தீவிரவாத இயக்கத்திலும் உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் பூர்சுவாக்கள் அல்லது குறிப்பிடக்கூடிய நபர்களும் நன்மை புரிந்தவர்களும் இருந்துள்ளனர். ஆனால் சிலர் மட்டுமே இந்த விதிமுறைகளுக்கு அப்பால் போராட்ட இயக்கங்களில் அங்கம் வகித்திருக்கின்றனர்.

கொழும்பில் வாழ்ந்த தமிழ் சோஷலிஸவாதியும் இலங்கை வங்கியின் தலைவராகப் பணியாற்றிய முதலாவது இலங்கையருமான சி.லோகநாதனின் மகனே கேதீஸ்வரனாவார். அதுமட்டுமல்ல, லோகநாதனின் இளைய சகோதரரான சட்டத்தரணியும் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரமுகருமான பருத்தித்துறையைச் சேர்ந்த சி.தர்மகுலசிங்கத்தின் பெறாமகனுமாவார். தர்மகுலசிங்கம் இளவயதில் மரணித்தமை, சமசமாஜக் கட்சிக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தலைவர் ஒருவரை இழக்கச் செய்துவிட்டது. தமது சித்தப்பாவின் அடிச்சுவட்டில் கேதீஸ்வரன் அரசியலுக்குள் நுழைந்தமை லோகநாதனைப் பெருமிதப்படுத்தியது.

தனது பரம்பரை சார்ந்த விடயங்களை விட, சமாதானம் சார்ந்த விடயங்களில் கடப்பாடு கொண்டிருந்த ஒருவராக கேதீஸ்வரன் விளங்கினார். யுத்தம் தேவையற்றது என்பதை மட்டுமல்ல, சமஷ்டி அமைப்பொன்றில் இலங்கையின் சிறுபான்மையினருக்கு நீதியும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் கருதினார். அரசியலையும் சமாதான முன்னெடுப்புகளையும் புகழுக்கானதும் தொழிலுக்கானதுமான படிகளாக அவர் கருதவில்லை. தனது சுயவிபரக் கோவையில் தன்னைப் பற்றி ஒரு வரியைச் சேர்த்துக் கொள்வதற்காக அவர் சமாதான செயலகத்தில் சேர்ந்து கொள்ளவில்லை. அவரது பாதுகாப்புக் குறித்து பலர் அவருக்கு அறிவுறுத்திய போதிலும், சமாதானத்திற்குச் சாதகமாக ஏதாவது செய்ய முடியுமாவென்ற நோக்கில் தான் அவர் சமாதான செயலகத்தில் இணைந்தார்.

புலிகள் இயக்கத்தோடு இணங்கிப் போகாத தமிழர்களை அந்த இயக்கம் கொன்று வருவதால், நோர்வேயால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான முன்னெடுப்புகள் தமிழர்களைப் பாதுகாக்கவில்லை. இதனால் நோர்வேயின் சமாதான ஏற்பாடுகளை கேதீஸ்வரன் விமர்சனம் செய்து வந்தார்.

உண்மையில் இந்தப் படுகொலைகள் அவரைப் பெரும் துயரத்திற்குள்ளாக்கின. ஆனால், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல், இலங்கையில் சமாதானத்தை அடைய முடியாது என்பது குறித்து அவர் மயக்கம் கொண்டிருக்கவில்லை. சமாதான முன்னெடுப்பு என்பது புலிகளைத் தாஜா பண்ணுவதோ அல்லது அவர்களுடன் சண்டையிடுவதோ என்ற கருத்தை அவர் கொண்டிருக்கவில்லை. இறுதியாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தேவையான முன்னோடியாக சமஷ்டித் தீர்வொன்றுக்கு தென்னிலங்கையின் இணக்கப்பாடு தேவையென்று அவர் வலியுறுத்தி வந்திருக்கிறார்.

கேதீஸ்வரன் லோகநாதனும் ஏனையவர்களைப் போன்று இத்தகைய தவறுகளுக்காக நோர்வே தரப்பினரைக் குற்றம் சாட்டி வந்திருக்கிறார். யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தரப்பினருடன் இணைந்து கொள்வதற்காக, கேதீஸ்வரன் லோகநாதன் சமாதான செயலகத்தில் இணைந்து கொள்ளவில்லை. ஆனால் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் சமாதானத்தைப் பற்றிய எண்ணம் எதுவுமின்றி யுத்தத்தைப் பற்றிய அரசின் தீர்மானத்திற்கு பங்களிக்க முடியாத ஒரு தமிழராக அவர் விளங்கினார்.

தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்திற்கும் இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறைக்குமாக தமது வாழ்வைத் தியாகம் செய்த கேதீஸ் லோகநாதன், நீலன் திருச்செல்வம், லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் அதற்காக உயிரைப் பலிகொடுத்த அனைவரையும் கௌரவப்படுத்துவதற்கு, ஆட்சி அதிகாரத்தை ஒரு தலைப்பட்சமாக சமஷ்டி முறையாக்குவதும் இவை இரண்டினையும் ஏற்றுக் கொள்வதற்கு புலிகள் இயக்கத்தின் மீது சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்துமே அரசாங்கம் இப்போது செய்ய வேண்டிய வேலையாகும்.

> **சமாதானம் சார்ந்த விடயங்களில் கடப்பாடு கொண்டிருந்த ஒருவராக கேதீஸ்வரன் விளங்கினார். யுத்தம் தேவையற்றது என்பதை மட்டுமல்ல, சமஷ்டி அமைப்பொன்றில் இலங்கையின் சிறுபான்மையினருக்கு நீதியும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் கருதினார். அரசியலையும் சமாதான முன்னெடுப்புகளையும் புகழுக்கானதும் தொழிலுக்கானதுமான படிகளாக அவர் கருதவில்லை. தனது சுயவிபரக் கோவையில் தன்னைப் பற்றி ஒரு வரியைச் சேர்த்துக் கொள்வதற்காக அவர் சமாதான செயலகத்தில் சேர்ந்து கொள்ளவில்லை.**

## சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவைகள் இனியும் எழும்

"நான்கு வருட கால தற்காலிகத் தெளிவுக்குப் பின்னர், மீண்டும் ஏற்பட்டுள்ள பைத்தியக்காரத்தனம்" என்ற தலைப்பில், கேதீஸ்வரன் லோகநாதனுக்கு அஞ்சலி செலுத்தி ராஜன் பிலிப்ஸ் என்பவர் எழுதிய கட்டுரை கடந்த 20ஆம் திகதிய 'சண்டே ஒப்சேர்வர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துன்னாலை தெற்கைப் பாரம்பரிய அடியாகக் கொண்ட கேதீஸ்வரன், கொழும்பில் பிறந்து வளர்ந்தவர். கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி, சென்னை லொயோலா கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற இவர், பிரிட்டன் சசெக்ஸ் பல்கலைக்கழகத்திலும் வாஷிங்டன் ஜோர்ச் டவுன் பல்கலைக்கழகத்திலும் உயர் கல்வியை மேற்கொண்டு முதுமாணிப் பட்டத்தையும் பெற்றிருந்தார். நெதர்லாந்து, ஹேக் பல்கலைக் கழகத்திலும் அவர் கல்வி கற்றார். சிறந்த கல்விமானான அவர், தனது ஆரம்ப காலங்களில் தென்னிலங்கை புத்திஜீவிகளுடன் இணைந்து சமூக நீதிக்காகப் போராடினார். 1983ஆம் ஆண்டு இன சங்காரத்தின்போது கொழும்பில் பல தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் பெரும் அர்ப்பணிப்போடு செயற்பட்டார். தேசிய இனப் பிரச்சினை குறித்து சரியான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த அவர், 1983ஆம் ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து செயற்பட்டார். 1985ஆம் ஆண்டு நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தையில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். திம்புக் கோட்பாடுகளை வடிவமைப்பதில் அவர் பெரும் முன்னோடியாகத் திகழ்ந்தார். பத்மநாபாவைப் புலிகள் சுட்டுக் கொன்ற பின்னர், 1993ஆம் ஆண்டு சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து அவர் கட்சியை விட்டு வெளியேறினார்.


அதிகாரப் பகிர்வின் மூலமே சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியுமென்று திடமாக நம்பிய அவர், படுகொலைக் கலாசாரத்திற்கு எதிராக துணிந்து நின்று குரல் கொடுத்தார். ஜனநாயகம், மனித உரிமைகள், பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கான விட்டுக் கொடுக்காத போராளியாகத் திகழ்ந்த அவரைப் புலிகளின் வேட்டுக்கள் களப்பலியாக்கி விட்டன. படுகொலைக் கலாசாரத்தை எதிர்த்து, தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்போடு செயற்படுபவர்களை ஒழித்துக்கட்ட அரக்கர்கள் முயன்றாலும், சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவைகள் தொடர்ந்தும் எழுந்து கொண்டே இருக்கும் என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இந்தப்** படம் ஜனாதிபதியின் விருதைப் பெற்றது.

ஆனால், படம் வெளியாவதற்குள் பல்வேறு வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. தணிக்கை அதிகாரியின் சான்றிதழை வாங்குவதற்கே, பல மாதங்கள் ஆயின. உரையாடல்களில் உஷ்ணம் இருப்பதாகவும், அதனால் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும்



என்றெல்லாம் குற்ற அம்புகள் இந்தப் படத்தைக் குறி வைத்துத் தாக்கின.

அனைத்து அம்புகளையும் நெஞ்சில் தாங்கி, அர்ஜுனன் போல் மீண்டு வந்தவர் என் நண்பர் திரு. ரங்கராஜன்.

ஜனாதிபதியின் விருது பெற்ற இந்தப் படம், அகில இந்திய அளவில் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

படத்தைப் பார்த்துவிட்டு, உடனடியாகத் தொலைபேசியில் என்னைப் பாராட்டியவர்கள் ஒரு சிலரே. மற்றவர்கள் கருத்துத் தெரிவிக்கக்கூட அஞ்சினர்.

'உம்முடைய நாக்கில் சரஸ்வதி நர்த்தனமாடுகிறாளய்யா...' என்று மனம் திறந்து பாராட்டியவர் திரு.வலம்புரி சோமநாதன்.

வலம்புரி சோமநாதன் அவர்கள், படாதிபதியாக, வசனகர்த்தாவாக, இயக்குநராகப் பல வடிவம் தாங்கி - தமிழ் சினிமாவில் தோய்ந்திருப்பவர். கண்ணதாசனின் ஆரம்ப காலத்தில் அவருக்கு நிழல் கொடுத்த கற்பகத்தரு, இந்த சோமநாதன்தான்.

அத்தகைய சோமநாதன் என்னை வாழ்த்துகிறார் என்றால், அதுதான் எனக்கு மெய்யான பெருமையைச் சேர்ப்பதாகும்.

அஃதேபோல் - இந்த அனுபவத் தொடரைப் படித்துப் பரவசப்பட்ட பிரபல இசை விமர்சகர் திரு. சுப்புடு அவர்கள் என்னை வாழ்த்தி ஒரு கவிதையே புனைந்துவிட்டார். இந்தக் கவிதையன்றோ, யான் பெற்ற விருதுகளிலெல்லாம் தலையாய விருது!

வாழ்த்துக்களால் மட்டுமே ஒரு மனிதன் வளருகிறான் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் அடியேன்.

சமீபத்தில் இளையராஜாவுடன் நான் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, நண்பர் ரஜினி அங்கே வந்தார். என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சி பொங்கப் பேசினார்.


"வாலி சார்... டீவில உங்க BLOW-UP பெரிஸ்ஸாக் காமிச்சு, ஒருமணி நேரம் நீங்க எழுதின பாடல்களாக ஒளிபரப்பினாங்க... அதே நான் ரொம்ப ரசிச்சுப் பார்த்தேன். நீங்க எவ்வளவு SENIOR MOST கவிஞர்னு இப்பதான் தெரிஞ்சுக்கிட்டேன்.உங்களோடு சர்வசாதாரணமாப் பழகறமேன்னு நான் நெனைச்சுக்கிட்டேன்," என்று அவர் குழந்தை உள்ளத்தோடு குதூகலமாக என்னைப் பாராட்டி நெஞ்சம் நெகிழ்ந்தார்.

உடனே, அருகில் அமர்ந்திருந்த இளையராஜா அவர்கள், நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னம் எழுதிய பாடல்களையெல்லாம் வரி பிசகாமல் ரஜினியிடம் பாடிக் காட்டி, என் பெருமையை இன்னும் அதிகமாக விளக்கினார். என்பால் இளையராஜா வைத்திருக்கும் அன்பை எண்ணி, நான் நெக்குருகிப் போனேன்.


"அண்ணே! நீங்கதாண்ணே, ஓரிஜினல் கவிஞர். நீங்க எழுதுறது எல்லாம், உங்க கற்பனை. சங்ககால இலக்கியங்களை எளிமைப்படுத்தியோ - அல்லது அவற்றை அப்படியே தர்ஜமா செய்தோ நீங்க எழுதுறதில்லே. உங்க பாட்டுல நீங்க சொல்லுகிற கருத்தெல்லாம், உங்ககிட்டயே உற்பத்தியானதுதான்..." என்று இளையராஜா அடிக்கடி என்னைப் பாராட்டுவதுண்டு.

இதுபோன்ற பாராட்டுதல்களும், ரஜினி போன்ற நல்ல உள்ளங்களின் வெளிப்படையான விமர்சனங்களும் என்னை இன்னமும் இளமையாகவே வைத்திருக்கின்றன.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




ஏன்றாலும்,அந்நிய நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ரகசியங்கள் நம்முடைய அரசாங்கக் கட்டுக் கோப்பை பெருமளவு பாதித்துவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

பிரதமர் ராஜீவ் காந்தியின் முக்கிய செயலாளராக விளங்கிய பி.ஸி. அலெக்ஸாண்டரின் நேர்முக ஊழியர்களே உளவு வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜனாதிபதி ஜெயில்சிங்கின் பத்திரிகை செயலாளரின் நேர்முக உதவியாளரும் உளவு வேலைகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறார். ஜனாதிபதி, பிரதம மந்திரி ஆகியோரின் அலுவலகங்களில் தாராளமாக ஊடுருவி தகவல் சேகரிக்கும் அளவிற்கு ஒற்றர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டிருக்கிறார்கள். இவர்களால் அந்நிய நாடுகளுக்கு விற்கப்பட்ட தகவல்களில் நம்முடைய பாதுகாப்பு ரகசியங்கள் அடங்கும் என்பதோடு சுயுறு என்றழைக்கப்படும் நம்முடைய உளவுத்துறை செயல்படுகின்ற ரகசிய முறைகளும் இருந்தன என்பது திடுக்கிடத்தக்க செய்தியாகும்.

பிடிபட்ட தஸ்தாவேஜு கள் ஐந்நூறு முதல் அறுநூறு பக்கங்கள் வரை ஃபோட்டோ எடுக்கப்பட்ட பிரதிகளைக் கொண்டதாக இருந்திருக்கிறது என்பது வெளியில் சென்றுள்ள தகவல்களின் அளவை எடுத்துக் காட்டுகிறது. இந்தத் தஸ்தாவேஜு களின் ஜெராக்ஸ் பிரதிகளை பிரதமரின் அலுவலகத்திலேயே எடுத்திருக்கிறார்கள். இன்னும் சில ஜெராக்ஸ் பிரதிகள் கூமர் நாராயணனின் அலுவலகத்திற்கு எதிரில் இருந்த ஜெராக்ஸ் பிரதியெடுக்கும் கடையில் எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகிறது. தங்களை யாரும் கண்டுபிடித்து விடக்கூடும் என்கிற அச்சம் கொஞ்சமும் இல்லாமல் இவர்கள் வெகு சுதந்திரமாகச் செயல்பட்டிருக்கிறார்கள்.

வெளியான தகவல்கள் என்ன என்பது விசாரணையின் போது கூட வெளிப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் குறைவு. ஆனால் இருபதாண்டுகளாக கூமர் நாராயணன் தன்னுடைய தொழிலை எந்தவிதமான இடையூறும் இல்லாமல் நடத்தி வந்திருப்பது தேச பக்தியுள்ள அனைவரும் கவலையோடு பரிசீலிக்க வேண்டிய விஷயமாகும்.

கூமர் நாராயணனின் வாடிக்கையாளர்களில் ஆன் போலி என்ற பிரெஞ்சுக்காரர் குறிப்பிடத்தக்கவராக இருந்திருக்கிறார். இவர் கூமர் நாராயணனிடமிருந்து ரகசியங்களை வாங்கி, தன்னுடன் தொடர்புள்ள பல்வேறு நாடுகளுக்கும் விற்றிருக்கிறார்.

**பழைய கணிப்பும் புதிய நடைமுறையும்**

ஒரு காலத்தில் இந்தியாவின் ரகசியங்களை வெளியார் அறிந்து கொள்வது கஷ்டமென அமெரிக்க உளவுத் துறையினரே கருதினார்கள். ஹாரி ரோட்ஸ்கி என்பவர் CIAயின் தலைவராக 1957-லிருந்து 1962 வரை இந்தியாவில் செயல்பட்டவர். அவர் சொன்னார்:

"இந்தியாவின் ரகசியப் பொலிஸ் துறையும், உளவுத் துறையும் சக்தி வாய்ந்தவை. ஆகவே ஒற்றர்கள் தங்களுடைய சாகசங்களைப் புரிவதற்கு இந்தியா ஏற்ற இடமில்லை."

1960 வரை அவருடைய இந்தக் கணிப்பு சரியாக இருந்திருக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. குறிப்பாக அமெரிக்கர்களும், பாகிஸ்தானியர்களும் நம்முடைய ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஒருவருக்கொருவர் அனுசரணையாகவும் இருக்கிறார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


# ஆறுதல்




**அ**ண்மையில் நடந்து முடிந்த உலக அழகுராணிப் போட்டியில் ஒரு காட்சி இது! இதில் இலங்கை சார்பாகக் கலந்து கொண்ட ஜெக்குலின் பெர்னாண்டஸ் மூன்றாவதாகக் காட்சி தருகின்றார்.

இப்போட்டியில் இவர் தோல்வி கண்டபோதிலும், இலங்கையின் இவ்வருட அழகுராணி இவர்தான்! ஆறுதலான விஷயம்!

# கண்டுபிடிப்பு



**பெ**ரிஸ் ஹில்டன் பல மணி நேரம் ஒரே நிலையில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு ஒரு 'போஸ்' கொடுத்துள்ளார்.

தான் கொடுத்த போஸ் மிகவும் நன்றாக வந்திருக்கும் எனப் போய் பார்த்தவர் அதிர்ந்தார்.

காரணம் - அவரைப் படம் பிடித்துள்ள கெமரா அவரது அழகுப் பிரதேசங்களை மாத்திரம் எடுத்துக் காட்டியதாம்...

இதைப் பார்த்துவிட்டு கண்ணீர் விட்ட ஹில்டன், தனது அங்கங்களை இப்படிக் காட்டுவதற்குப் பல மணி நேரம் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லையே! என நொந்தும் கொண்டாராம்.

இதனிடையே பார்வையாளர் ஒருவர் ஒரு பெரிய சர்ச்சையையும் கிளப்பி விட்டுள்ளார்.

அதாவது ஹில்டனின் மார்புப் பகுதி சத்திர சிகிச்சையால் விசாலமாக்கப்பட்டிருக்கிறது என்பதே அந்த சர்ச்சையாகும்!

என்ன கண்டுபிடிப்பு?

# சாதிக்கப் பிறந்தவர்




**பி**ரபலப் பாடகி கிறஸ்டினா எகுலீரா விரைவில் திருமணம் முடிக்கப் போகிறார். இதற்கான ஆயத்தங்களில் இறங்கியிருப்பதாகக் கூறும் இவர், தனது பெயரை மாரியா பிரெட்மன் என்றும் மாற்றிக் கொள்ளப்போகிறாராம்!

தான் விரைவில் ஒரு குழந்தையை எதிர்பார்த்தே திருமணம் செய்து கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் கூறும் இவர் இவ் வருடத்திற்குள் அதை சாதித்துக் காட்டுவதாகவும் கூறுகிறார்.

வேகமான சாதனை!

# பிழைக்கத் தெரிந்தவர்!



**எ**ப்போதுமே தனது உடம்பைத் திறந்து காட்டுவதில் ஜெனட் ஜெக்ஸனிடம் ஒளிவு, மறைவு கிடையாது.

40 வயதுடைய ஜெனட், அண்மையில் 'வைப்' எனும் சஞ்சிகையின் அட்டைப் படத்தை இப்படியே அலங்கரித்தும் இருந்தார்.

அதாவது தனது மார்புப் பகுதியை வலது கை கொண்டு மறைத்து சிப்பிகளிலான மாலை ஒன்றையும் அணிந்து காணப்பட்டார்.

காம உணர்வுகளைத் தூண்டக்கூடிய புகைப்படங்களில் தோன்றுவது குறித்து ஜெனட் ஜெக்ஸன் எப்போதுமே அலுத்துக் கொள்வது இல்லை.

80 வயதிலும் கூட தான் இப்படியே இருக்கப் போவதாகவும் கூறுகிறார்.

இதையே தனது இரசிகர்கள் விரும்புவதாகவும், இது இளைய பரம்பரையினரின் தேவை என்றும் ஜெனட் கூறுகிறார்.

பிழைக்கத் தெரிந்தவர்!

# வாழ்க கலை!



**நி**ர்வாணக் காட்சிகள் கதையில் இருந்தால் அதில் தோன்றி நடிப்பதில் தவறே இல்லை என்கிறார் மெக்ஸிக்கோ திரைப்பட நடிகையான சல்மா ஹையக்!

இவர் நடித்துள்ள Ask the Dust திரைப்படத்தில் வரும் நிர்வாணக் காட்சிகளில் இவர் தோன்றி நடித்துள்ளார்.

நிர்வாணத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காக நான் நிர்வாணமாகத் தோன்றவில்லை. அது கதைக்குத் தேவை என்பதால் அவ்வாறு தோன்றி நடித்தேன். இதில் தவறில்லை என்பது சல்மாவின் கூற்றாகும்!

வாழ்க கலை!

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவுக்கு மரண தண்டனை; கொலை வழக்கில் தீர்ப்பு

**பா**கிஸ்தான் பிரதமராக இருந்த பூட்டோ மீது கொலை வழக்குத் தொடரப்பட்டது. அதில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.


பாகிஸ்தான் அரசியலில் முக்கிய இடம் பெற்றவர் பூட்டோ. ஜின்னாவுக்கு அடுத்த படியாகப் பெரிய தலைவராகக் கருதப்பட்டவர்.

பூட்டோவின் இளமைப் பருவம், அரசியல் வாழ்க்கை பெரும் திருப்புமுனைகளைக் கொண்டது. அவருடைய இறுதிக்கால வாழ்க்கை சோதனை மிகுந்த கண்ணீர்க் காவியமாக அமைந்தது.

## பம்பாயில் வசித்தவர்

பூட்டோவின் தந்தை ஷா நவாஸ். பெரிய பணக்காரர். திவானாக இருந்தார். தாயார் ஜக்கிபாய். இந்தியப் பெண்.

பூட்டோவின் முழுப்பெயர் ஜூல் பிகார் அலி-பூட்டோ. 1928ஆம் ஆண்டு பாகிஸ்தானில் உள்ள 'லர்கானா' என்ற ஊரில் பிறந்தார். ஆனால் வளர்ந்தது எல்லாம் பம்பாயில் தான். பாகிஸ்தான்



சுதந்திரம் பெற்றபோது பூட்டோவுக்கு வயது 19.

பூட்டோ அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும், இங்கிலாந்து நாட்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் படித்து வக்கீல் (பாரிஸ்டர்) பட்டம் பெற்றார்.

தொடக்கத்தில் வக்கீல் தொழில் செய்த பூட்டோ, அரசியலிலும் ஆர்வமாக ஈடுபடத் தொடங்கினார். 1958க்குப் பிறகு அவரது அரசியல் செல்வாக்கு ஓங்கத் தொடங்கியது. இஸ்கந்தர் மந்திரிசபையில் இடம்பெற்றார்.

## மந்திரி ஆனார்

பாகிஸ்தானில் அயூப்கான் அதிபராக இருந்தபோது, அவரிடம் பூட்டோ வர்த்தக மந்திரியாக இருந்தார். பிறகு 1963இல் வெளி விவகார மந்திரியானார்.

1967ஆம் ஆண்டு மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு 'மக்கள் கட்சி' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். அயூப்கானுக்கு எதிராகச் செயல்பட்டதால் பூட்டோ 1968ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பல மாதங்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார். உடனே பூட்டோ அமெரிக்காவுக்குச் சென்று வசித்து வந்தார்.

இந்த நிலையில், யாகியாகான் பாகிஸ்தான் அதிபர் ஆனார்.

அவரது ஆட்சிக் காலத்தில் 1971இல் இந்தியாவுடன் நடந்த போரில் பாகிஸ்தான் தோற்றது. கிழக்கு பாகிஸ்தான் 'வங்காளதேசம்' என்ற பெயரில் சுதந்திர நாடாகியது. இதனால், யாகியாகான் பதவி இழந்தார்.

அதன்பின் பூட்டோ பாகிஸ்தான் அதிபரானார். அதுவரையில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி முறையே இருந்து வந்தது. அதிபர் ஆன 2 ஆண்டுகளுக்குப் பிறகு, பூட்டோ இராணுவ ஆட்சி முறையை இரத்துச் செய்தார். பாகிஸ்தானின் பிரதமராக பூட்டோ பதவி ஏற்றார்.

## இராணுவப் புரட்சி

1977ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் பூட்டோவின் 'மக்கள் கட்சி' 216 இடங்களில் 155 இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் தேர்தலில் தில்லு முல்லு நடந்ததாக எதிர்க்கட்சிகள் புகார் கூறி கிளர்ச்சி நடத்தினார்கள். இந்தக் கலவரத்தில் 250 பேர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து 05.07.1977இல் பூட்டோவுக்கு எதிரான இராணுவப் புரட்சி நடந்தது. பூட்டோவினால் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஜியா - வுல் - ஹக், இந்தப் புரட்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார்.

பூட்டோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தானில் தேர்தல் நடத்த ஜியா தீர்மானித்ததைத் தொடர்ந்து பூட்டோ விடுதலை செய்யப்பட்டார்.

## சிறையில் அடைப்பு

தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக இறங்கி இருந்த பூட்டோவை, இராணுவ அரசாங்கம் மீண்டும் கைது செய்தது. ராவல்பிண்டி சிறையில் அடைத்தது.

தன்னுடைய அரசியல் எதிரியான அகமது கசூரி என்ற பாராளுமன்ற உறுப்பினரின் தந்தையைக் கொலை செய்ய உத்தரவிட்டதாக பூட்டோ மீது குற்றம் சாட்டப்பட்டது.

பூட்டோவின் 'மக்கள் கட்சி' தொடங்குவதற்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர் கசூரி. முதலில் பூட்டோவின் நண்பராக இருந்த அவர், பிறகு பூட்டோவின் ஆட்சியை கடுமையாகத் தாக்கி பிரசாரம் செய்தார்.

இதனால் கசூரியை தீர்த்துக்கட்ட பூட்டோ திட்டம் தீட்டினார் என்றும் 4 அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தார் என்றும் கூறப்பட்டது.

## வழக்கு

1974இல் கசூரியும், அவர் தந்தையும் ஒரு திருமணத்துக்குச் சென்றுவிட்டு, காரில் திரும்பிக் கொண்டு இருந்தார்கள். அப்போது அந்தக் காரை நோக்கி இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. குறி தவறியதால் கசூரி உயிர் தப்பினார். அருகில் இருந்த அவர் தந்தை குண்டு பாய்ந்து இறந்தார்.

இதையொட்டி, பூட்டோ மீதும் மற்றும் இராணுவ அதிகாரிகள் முகமது அப்பாஸ், குலாம் முஸ்தபா, அரத் ஊக்பால், ராணா இஸ்திகார் ஆகியோர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது.

## தூக்குத் தண்டனை

இந்த வழக்கை பாகிஸ்தானில் உள்ள லாகூர் ஐகோர்ட்டு விசாரித்து பூட்டோவுக்கும், மற்ற 4 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து 18.03.1978இல் தீர்ப்புக் கூறியது.

இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் பூட்டோ அப்பீல் செய்தார். அப்பீலை 7 நீதிபதிகள் விசாரித்து பெப்ரவரி 6ஆம் திகதி தீர்ப்புக்



கூறினார்கள்.

தூக்குத் தண்டனையை 4 நீதிபதிகள் உறுதி செய்தார்கள். 3 நீதிபதிகள் விடுதலை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். மெஜாரிட்டி தீர்ப்பின்படி தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டது.

நீதிபதிகள் கருத்து பிளவுபட்டு இருப்பதால், தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்று பூட்டோ சார்பில் மீண்டும் அப்பீல் செய்யப்பட்டது. அந்த அப்பீல் மார்ச் மாதம் 24ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆயினும் தூக்குத்தண்டனையை குறைக்கலாம் என்று அதிபர் ஜியாவுக்கு நீதிபதிகள் சிபாரிசு செய்திருந்தனர். ஆனால் இரும்பு மனம் கொண்ட அதிபர் ஜியா அதை ஏற்கவே இல்லை.

---




**தனது** பிரத்தியேக அறைக்குக் கூட்டிச் சென்ற ஜனாதிபதி ஜோன்சன் என்ன நடந்நது என்பதை விலாவாரியாக அவரை அடிக்காத குறையாகக் கூறி முடித்தார். தன்னை மீறி விஷயம் இவ்வளவு தூரம் முற்றி விட்டதை உணர்ந்த விமானப்படைத் தளபதி அவமானத்தினாலும், கோபத்தினாலும் பெரிதும் வித்தியாசமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார். அவரின் இந்த வெளிப்பாடுகளை உன்னிப்பாக கவனித்த ஜனாதிபதி அவரிடம் மெதுவாக உன்னுடைய வேலைகளை எல்லாம் முடித்த பின்புதான் நீ இந்தப் பெண்களுடன் உல்லாசமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் நீ அப்படிச் செய்யவில்லை. எனவே நான் உனக்கு கடுமையான தண்டனை வழங்கப் போகிறேன் என்று கூறினார். அவரின் வாயிலிருந்து என்ன வார்த்தை வரும் என்று எதிர்பார்த்திருந்தார். அவரை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்த விமானப்படைத் தளபதி திடீரென்று எழுந்து நின்று நீங்கள் என்ன சொன்னாலும் நான் அதற்குக் கட்டுப்படுவேன் ஆனால் அதற்கு முன் எனக்கு ஒரு நாள் ஆவகாசம் தாருங்கள் நான் யார் என்று அவர்களுக்குக் காட்டி விட்டு உங்களின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறேன் என்றார். அவர் இருந்த அவேசத்திற்கு தன்னையும் மீறி ஏதும் செய்து விடுவார் என்று



பயந்த ஜனாதிபதி, எல்லாவற்றையும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் நீர் இப்போது போய் வாரும் என்று தன்னுள்ளிருந்த பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மளமளவென்று பேசினார். ஆனாலும் ஏதேனும் செய்து முடிக்க வேண்டும் என்ற வெறியில் அவர் வெளியேறிப் போனார். உடனே தாக்குதலுக்குள்ளாகிய இடங்களை அன்றிரவே சுற்றிப்பார்த்தார். எப்படித் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள் என்று மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தார். இவ்விராணுவ தளத்தை அவ்வளவு இலகுவில் தாக்க முடியாதவாறு தான் தாங்கள் கட்டியமைத்திருந்ததாக இராணுவ நிலையத்திற்குப் பொறுப்பான அதிகாரி அடித்துக் கூறினார். அப்படியிருக்கையில் எப்படி இது என்று இவர்கள் இன்னும் குழம்பினார்கள். தாக்குதலில் பெரியளவில் எந்த இழப்பும் அவர்கள் பக்கம் இல்லாமல் முடிந்ததையிட்டு விமானப்படைத் தளபதி பெரிதும் குழம்பினார். ஆனால் ஒரு விடயம் மட்டும் அவரை நெருடியது. முன்னரங்க காவல் இடங்களில் இருந்த இராணுவ வீரர்களை காணவில்லை. அவர்கள் இறந்து போன தடயங்களும் இல்லை என்று உடனே அவர்களைத் தேடும் பணியில் ஆட்களை ஈடுபடுத்தினார். அன்றிரவே இந்தத் தேடுதல் வேட்டையினை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அவர் மிகவும் கடுமையான கட்டளையிட்டிருந்தார். அவ்வாறே நடந்தும் முடிந்தது. முன்னரங்கக் காவல் நிலைகளின் மீது தென் வியட்நாமிய படைகளையே காவலுக்கு வைப்பது அமெரிக்க இராணுவத்தினரின் வழமை ஏனெனில் அவர்களுக்குத் தான் அந்த இடம் அத்துப்படி ஆனால் வியட்நாமிய மக்கள் ஒருவருக்கொருவர் அடையாளம் கண்டுபிடிக்க மிகவும் சிரமமாகவே இருந்தது அமெரிக்க இராணுவத்தினருக்கு. அந்த வாய்ப்பை பிடித்துக் கொண்ட வியட்கொங் இராணுவத்தினர் அவர்கள் தென் வியட்நாம் இராணுவம் போல உள்ளுக்குள் புகுந்து தங்கள் ஆட்களை




உள்வரவழைத்து அசுரத்தனமான தாக்குதலை நடத்தியிருப்பது அவருக்குப் புலனாகியது. கெரில்லாப் போர் முறையில் பெரிதும் வளர்ச்சியடைந்திருந்த அவர்களை எப்படி எதிர் கொள்வது என்று தெரியாமல் ஒருகணம் குழம்பிப் போனார். ஆயினும் விமானப்படைத் தளபதி உள்ளுக்குள் அவர்களின் திறமையைக் கண்டு சற்று வியந்து போனது என்னவோ உண்மைதான். தாக்குதல்களை எவ்வாறு திட்டமிட்டுச் செய்கிறார்கள் என்று யோசித்து யோசித்து மண்டை குழம்பிய நிலையில் அவர் இருந்தார். இறுதியில் தான் என்ன செய்தாலும் அவர்களுக்கு தெரிந்து விடுவது எப்படி என்று கண்டுபிடிக்கும் பணியைத் தொடங்கினார். இப்பணியை அவர் தொடங்குவதை அறிந்து கொண்ட வியட்கொங் இராணுவத்தினர் தாக்குதல் திட்டங்கள் எதனையும் முறியடிக்காமல் அதேவேளை தங்களுக்கு எந்த வித இழப்புகளும் இல்லாமல் இருக்க வேலைகளைச் செய்து வந்தனர். இந்த வேலைகளால் தன் திட்டம் எதும் வெளிப்படுத்தப்படாமல் பத்திரமாகவே இருக்கிறது என்றும் நான் தான் ஏதோ முட்டாள் தனமாக யோசித்துவிட்டதாகவும் என்றும் விமானப்படைத்தளபதி நினைத்துக் கொண்டிருந்தார். அவரின் மனதில் இச்சிந்தனை தோன்றும் வரையிலும் கூட அவள் அவரிடம் எல்லாவிதத்திலும் நெருங்கியிருந்தாள். எல்லாத் தகவல்களையும் பெற்றுக் கொண்டுதான் இருந்தாள் இத் தகவல்களை வியட்கொங் இராணுவத்தினருக்குத் தெரிவித்துக் கொண்டு தான் இருந்தாள். ஆயினும் எந்த வித தாக்குதல் முறியடிப்புகளும் நடைபெறவில்லையே என்று அவளும் கூட ஆச்சரியப்பட்டாள். ஆயினும் அதனை வெளிப்படுத்திக் கொள்ளாமல் தான் எப்படி முன்போல் பழகினாளோ அப்படியே அவரிடம் பழகிவந்தாள். உண்மையில் அவள் மனதிலும் இராணுவத் தளபதி தொடர்பில் நல்லபிப்பிராயம் தோன்றத் தொடங்கியது. இதனை வியட்கொங் இராணுவத் தளபதியிடம் அவள் பகிரங்கமாகவே தெரிவித்தாள். அதனை ஏற்றுக் கொண்ட அவர், இவ்வபிப்பிராயம் வியட்கொங் இராணுவத்தினருக்கு எதிராகத் திரும்பாமல் இருந்தால் சரி என்றார். அவ்வார்த்தையை கேட்ட அவள் கோபவேசத்தோடு என்னை அப்படி நினைத்து விடாதீர்கள் நான் நாட்டிற்காகத் தான் எப்போதும் பாடுபடுவேன் என்ன இருந்தாலும் திட்டங்கள் தீட்டும் போது விமானப்படைத் தளபதிக்கு ஏதும் ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டாள். அதனை அவரும் ஏற்றுக் கொண்டார்.

**(தொடரும்)**




தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாகு மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி,
பாரில் வெற்றி எனக்குறு மாறே.

- சுப்பிரமணிய பாரதியார்



# திமிர்!



சந்தானத்தின் மகன் குஞ்சுமோன் மிக நன்றாக சமைப்பான். ஆனால், வாய்த் துடுக்கு அதிகம். எதிலும் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருப்பான். அவன் தந்தை சந்தானத்தை எல்லோரும் விசேஷங்களுக்குச் சமைக்க அழைப்பர். அவருக்கு வயதாகி விட்டது. எனவே, மிராசுதார் மகளின் திருமணத்திற்கு தன் மகனை அனுப்பிவைத்தார் சந்தானம். அது குக்கிராமமாதலால் வேறு சமையல்காரர்கள் கிடையாது.

தன் உதவியாட்களோடு வந்த குஞ்சுமோன், "இதென்ன விறகு இத்தனை ஈரமாக இருக்கிறது! வீடு பூராவும் புகைந்து கண்ணைக் கெடுத்துவிடும். வேறு காய்ந்த விறகு வந்தால்தான் சமைப்பேன்" என்று உட்கார்ந்து விட்டான்.

மிராசுக்கு, அற்பப்பயல்...இப்படி ஆடுகிறானே என்று கோபம் வந்தது. ஆனாலும் வந்த விருந்தினர் சாப்பிட வேண்டுமே என்று அடக்கிக் கொண்டு காய்ந்த விறகு வாங்கி வர ஆள் அனுப்பினார். காய்ந்த விறகு வந்தது!

நாலு அடுப்பு பற்றவைத்துச் சமைக்க ஆரம்பித்தான் குஞ்சுமோன். இதென்ன காய்கறிகளெல்லாம் புழுத்ததும் அழுகலுமாயிருக்கிறது. புதுசா இருந்தாத்தானே சமையல் ருசிக்கும். இல்லேன்னா என் பெயரைக் கெடுத்துடும் என்று முறைத்தான். மிராசு எதுவுமே பேசாமல் அவன் கேட்ட படி காய்கறிகளை வாங்கிக் கொடுத்தார்.

இவ்வளவு செய்திருக்கிறீர்களே! மீந்து போகுமே, என்று மிராசுதாரின் தம்பி கேட்டதற்கு, கல்யாண வீடு! திடீரென்று ஆட்கள் வந்து விட்டால் நான்தானே செய்ய வேண்டும்! திருப்பியா அனுப்புவீர்கள். கேள்வி கேட்பதே எனக்குப் பிடிக்காது! கரண்டியைப்

### பாப்பா முரசு சிறுகதை

போட்டுவிட்டுப் போய் விடுவேன், என்று பயமுறுத்தினான்.

மிராசுதார், தம்பி! குஞ்சுமோன் கெட்டிக்காரர். அவருக்கு எல்லாம் தெரியும். நீ இப்படி வா, என்று தம்பியை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

விருந்து சிறப்பாக இருந்ததென்று அனைவரும் புகழ்ந்தனர். எனவே, மிராசுதார் பேசியபடி மரியாதை செய்து அனுப்பினார்.

அடுத்து வந்த நாட்களில் சந்தானம் உடம்பு முடியாமல் படுத்த படுக்கையாகிவிட்டார். குஞ்சுமோனின் பந்தா தாங்காததால் ஊரார் வெளியூரிலிருந்து செந்தில் என்ற சமையல்காரரை அழைத்து வந்தனர். அதனால் குஞ்சுமோனுக்கு வேலையே இல்லை. அடாவடிக்காரன் என்று எவரும் அவனைக் கூப்பிடுவதில்லை. இப்போது சோற்றுக்கே திண்டாட்டமாகிவிட்டது. மிராசுதார் சமையலுக்கு ஆள் தேடுவதாகக் கேள்விப்பட்டு, அங்கு சென்று தனக்கு அந்த வேலையைத் தரும்படி கேட்டான் குஞ்சுமோன்.

உனக்கா! எங்க வீட்டு விறகு ஈரமாயிருக்கும். காய்கறியெல்லாம் புழுத்து அழுகலாயிருக்கும். நீ பத்துப் பேருக்குச் சமைக்கச் சொன்னால் பதினைந்து பேருக்குச் சமைப்பாய்! கேட்டால் கரண்டியைப் போட்டுவிட்டுப் போய்விடுவாய்! நீயெல்லாம் சரிப்படமாட்டாய்! நான் பொறுப்பானவனாக இருப்பதை வைத்துச் சமாளிக்கும் திறமைசாலியாக, சிக்கனமானவனாக ஒரு ஆளைத் தேடிக்கொண்டிருக்கிறேன். போ! போ, என்றார்.

நெடுஞ்சாண்கிடையாக அவர் காலில் விழுந்து அழுதான் குஞ்சுமோன். என்னை மன்னிக்க வேண்டும். என் கண்களைத் திறந்துவிட்டீர்கள். என் அகம்பாவம் அழிந்துவிட்டது. எனக்கு நீங்கள் வேலை தந்தால்தான் வாழமுடியும் என்று கெஞ்சினான். அவனது சமையல் ருசியை எண்ணி மகிழ்ந்த மிராசுதார் இரக்கப்பட்டு வேலை கொடுத்தார். பழைய குஞ்சுமோனா இவன், என்று ஊரார் மூக்கில் விரல் வைக்கும்படி கச்சிதமாக கொட்டாமல், சிந்தாமல் குற்றம் சொல்லாமல், சோம்பேறித்தனம் இல்லாமல் வேலை செய்து நல்ல பெயர் பெற்றான். எந்தத் தொழிலிலும் அடக்கமும், பணிவும் இருந்தால் தான் பிழைக்க முடிந்தது. தாழ்ந்து போனால்தான் வாழ முடியும். திமிர் பிடித்து அலைந்தால் பிழைக்க முடியும். என்ற உண்மையை உணர்ந்த குஞ்சுமோன், தன் மகனுக்கும் சிறுவயதிலேயே அடக்கமாக வாழக் கற்றுக் கொடுத்தான்.

# ஆத்திசூடி

## கைவினை கரவேல்

**நீ அறிந்த கைத்தொழில்களை வஞ்சனையின்றி மறைக்காது மற்றவர்களுக்கும் கற்றுக்கொடு.**

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# படிப்பதே கடமை!

நன்றி உள்ள நாயே வா!
நாமும் மகிழ்ந்தே ஆடிடலாம்!
உன்னைப் போல அன்புள்ள
ஒருவர் எனக்குக் கிடைப்பாரா?
என்னை வளர்க்கும்
எஜமானின்
வீட்டைக் காக்க
வேண்டுமப்பா!
இந்தக் கடமை கண்ணாகும்!
மாலையில் வந்தால் நான்
வருவேன்!

குருவி! குருவி! வருவாயா!
கூடிப் பாடி ஆடிடலாம்!
அருமையான நண்பர்தான்
அருகில் வாராய் அன்புடனே!
கூட்டைக் கட்டி முடித்தால்தான்
குஞ்சும் நானும் வாழ்ந்திடலாம்!
ஆட்டம் போட நேரமில்லை!
அருமைக் கடமை அழைக்கிறது!



கழுதை நண்பா! பாடிடலாம்!
கைகள் கோர்த்தே ஆடிடலாம்!
அழுக்கைச் சுமந்தது போதுமப்பா!
ஆடிப் பாட வந்துவிடு!
சுமப்பது எனது கடமையப்பா!
சுமைதான் எனக்கே
வாழ்க்கையப்பா!
அந்தோ! கடமை அழைக்கிறது!
அருமை நண்பா சென்றுவிடு!


ஆகா! இவர்கள்
அனைவருமே
அவரவர் கடமை
செய்கின்றார்!
எனது கடமை படிப்பதுதான்!
இன்றே பள்ளிக்கு நான்
செல்வேன்!

பெற்றோர் கனவை நனவாக்கி
பெருமையோடு புகழ்
பெறுவேன்!
நாட்டை, வீட்டை முன்னேற்றி
நல்ல மனிதன் ஆகிடுவேன்!

# அதிசய உலகம்

## நகத் தவளை

படத்தில் உள்ளவர் பெயர் நகத் தவளையார். இது ஆபிரிக்காவில் உள்ள தென் பகுதிகளில் காணப்படுகிறது. இதன் கை விரல்கள் பறவை நகங்கள் போல் இருப்பதால் இப்பெயர் பெற்றது.



இந்த நகங்கள் மண்ணைத் தோண்டி பூச்சிகளைப் பிடிக்க உதவுகின்றன. நன்கு வளர்ச்சி அடைந்த தவளைகள் 5 அங்குலம் நீளமுடையது.

இதன் தோல் மிகவும் மிருதுவாக இருக்கும். 60 வருடங்களுக்கு முன்பாக இந்த தவளையாரின் மீது அட்ராக் பண்ணப்பட்ட விஞ்ஞானிகள் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்தனர்.

இந்தத் தவளைகளைக் கொண்டுதான் முதன் முதலில் பிரக்னென்சி டெஸ்ட் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு தென் ஆபிரிக்க டாக்டர் கருத்தரித்த பெண்ணின் யூரினை இந்த இளம் கன்னித் தவளையார் ஒன்றுக்குச் செலுத்தினார். சில மணி நேரங்களிலேயே இந்தத் தவளையார் முட்டைகளை இட ஆரம்பித்தது. கருத் தரிக்காத பெண்ணின் யூரினை எடுத்து இந்த தவளைகளுக்குப் செலுத்தினால் இவை முட்டைகள் இடவில்லை. பல வருடங்களாக இந்தப் பரிசோதனை மூலமே ஒரு பெண் கருவுற்றிருக்கிறாளா என்று டாக்டர்கள் கண்டுபிடித்து வந்தனர். அதன் பிறகே இன்றைய நவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன.


# சில விடுகதைகள்

1. ஆழ்கடலில் கிடைப்பான் அழகு மங்கையர் மேனியில் ஜொலிப்பான் - அவன் யார்?
2. எட்டடி உயரம் கொண்டு இனிப்பைச்சுமந்தவன் - அவன் யார்?
3. மூக்கிலே பூ வைத்தவன் அதிகாலைப் பாட்டுக்காரன் - அவன் யார்?
4. தண்ணீரால் வடிவம் பெற்றவன் சாம்பாருக்குள் புதைந்து போகிறான் - அவன் யார்?
5. தனக்குத்தானே குடை பிடிப்பான் மழைக்கு மட்டும் கண்ணில் படுவான் - இவன் யார்?
6. முதலில் தொலைத்தவனுக்கு திரும்பக் கிடைத்தது. மறுபடி தொலைத்தவனுக்கு எதுவும் கிடைக்கவில்லை - அது என்ன?
7. திறந்த வாய் மூடாதவன் தகவல் பரிமாற்றத்தில் கெட்டிக்காரன் - அவன் யார்?
8. எரித்தாலும் எரிய மாட்டான் அவன் யார்?
9. உறவுக்கு எடுத்துக்காட்டு கா...கா...என்பது இவன் பாட்டு - அவன் யார்?
10. கண்டதையும் தின்று தீர்ப்பான். தண்ணீருக்கு மட்டும் செத்துப்போவான் - அவன் யார்?

**விடைகள்**

1. முத்து
2. கரும்பு
3. சேவல்
4. உப்பு
5. காளான்
6. பற்கள்
7. தபால் பெட்டி
8. இருள்
9. காகம்
10. நெருப்பு

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.08.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 658**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 656

**பரிசுக்குரியவர்:**
எப். மசிபா மவ்ஜூட்
B - 14 1/7, சொய்சாபுர, மொரட்டுவ.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| மர்ஸியா நாபிர், இல. 11/02A, பாகிர் மாகார் ஒழுங்கை, மருதானை, பேருவளை. | டி. ஆர். ஆன் டிலுக்ஷி, தரம் 6C, நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13. |
| ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ கொடிகாவத்த. | ஜே. பி. சுதர்சிலா, 32/2, கோணாவல வீதி, டிகன, ராஜவல. கண்டி. |
| கீர்த்தனா, தரம் 6 கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15. | கி. சர்தசன், "திருவேரகம்", 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன். |
| எம். துர்காதேவி, இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | ச. டினுசியா, பெரிய கடை, மன்னார். |
| கே. பிரசாந்தி, 89,பாபாபதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | ஜே. தனுசியா, விதானையார் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். |

# தகவல் பெட்டி



## குரங்காபிமானம்

அமெரிக்காவில் பேஸ் போல் விளையாட்டு பிரபலமானதொன்று என்பது நாம் அனைவரையும் அறிந்த விடயம். அமெரிக்கா, போஸ்டன் நகரில் அண்மையில் உடல் ஊனமுற்றோருக்கான பேஸ் போல் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அவ்விளையாட்டில் அடிக்கப்பட்ட பந்துகளை ஓடி, ஓடி பொறுக்கி எடுத்துக் கொடுத்து, உடல் வலுவற்றோருக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்யும் குரங்காரே படத்தில் காணப் படுகின்றார். இதற்கென இக்குரங் காருக்கு விசேட பயிற்சியும் வழங்கப் பட்டுள்ளது.





## புலிக்குப் பிறந்தது புலிதான்

இங்கே கைவிரல்களின் அரவணைப்பில் புட்டிப் பால் குடிப்பது பூனைக்குட்டியார் என நீங்கள் நினைத்தால் ஏமாந்துதான் போவீர்கள். இவர் மூன்றே மாதம் நிரம்பிய சிறுத்தைக் குட்டியார். உலகிலேயே அதிவேகமாக ஓடும் அரிதான சிறுத்தைப் புலி இனத்தைச் சேர்ந்த இக்குட்டியை காட்டில் ஈன்ற தாய்ச் சிறுத்தை கைவிட்டுச் சென்ற நிலையில், இந்தியாவின் கவுஹாத்தி வனவிலங்கு பூங்கா ஊழியர்களின் பராமரிப்பில் இப்போது வளர்கிறது.

## முதலை வேட்டை


அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள நீர் நிலைகளில் முதலைகள் மிதமிஞ்சி பெருகிவிட்டன. அளவிற்கு மிஞ்சிய முதலைகளின் இனப்பெருக்கம் காரணமாக அவற்றைக் கட்டுப்படுத்த மாநில அரசு முதலை வேட்டைக்கு அனுமதி வழங்கியது. இதன்படி வேட்டையாட லைசன்ஸ் பெறும் ஒருவர் இரு முதலைகளைச் சுட்டுக் கொல்லலாம். வழங்கப்பட்ட லைசன்ஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

4 ஆயிரம். கொல்லப்பட்ட முதலையை ஒருவர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.




## மெத்தென்ற இடி

**நமது** நாட்டில், வீட்டில் ஆடு, மாடு வளர்ப்பது போலவே நியூஸிலாந்து தேசத்தில் வீட்டிற்கு குறைந்தது ஒரு கம்பளி ஆடாவது வளர்ப்பது சர்வசாதாரண விடயம். குளிர்தேசமான நியூஸிலாந்தில் கம்பளி ஆட்டின் உரோமத்தில் இருந்து தயாரிக்கப்படும் கம்பளித் துணி வகைகளுக்கு பெரிதும் கிராக்கி நிலவுகின்றது. படத்தில் நியூஸிலாந்து சிறுவன் ஒருவன் தன் வீட்டில் வளர்க்கும் கம்பளி ஆட்டுடன் விளையாடும் போது கீழே விழுகின்றான். மோதும் போது மெத்தென்று இருந்தது, விழும்போது வலித்திருக்குமோ?



## பன்றி அடக்கும் காளை

**தமது** வீரத்தை நிரூபிப்பதற்காக காளை அடக்கும் போட்டியில் காளையர்கள் பங்குபற்றுவது நாம் அனைவரும் அறிந்த விடயம். அலங்காநல்லூர் மற்றும் ஸ்பெயின் தேசத்தில் அப்போட்டி பிரசித்தம். ஆனால் இந்தோனேஷியாவில் முக்கிய நிகழ்வுகளின்போது தமது வீரத்தைக் காட்ட பன்றி அடக்கும் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. கடந்த இந்தோனேஷிய சுதந்திர தினத்தின்போது பெருந்தொகையான ரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் மூர்க்கமான பன்றியை அடக்கிய கட்டிளங் காளையினையே படத்தில் காண்கின்றீர்கள்.





ஸ்ரீகாந்த் - பாவனா
கிழக்கு கடற்கரை சாலை



# அசின் அலட்டல்

தென்னிந்திய நடிகைகளிலேயே மிகப் பெரிய கோடீஸ்வரி யார் என்றால் கண்ணை மூடிக் கொண்டு அசின் பெயரைச் சொல்லி விடலாம்.

பணம் மட்டும் தான் அசினிடம் அதிகம் என்று நீங்கள் தப்பு கணக்குப் போட வேண்டாம். பந்தாவும் அலட்டலும் கூட அவரிடம் அதிகம் தான்.

எந்த இயக்குனராவது கதை சொல்ல அணுகினால் முதலில் ஹீரோ, பேனர் எல்லாவற்றையும் முடிவு செய்து விட்டு என்னிடம் வாருங்கள் என்று சொல்லி விடுகிறாராம்.

இதனால் நல்ல கதை, கதாபாத்திரம் வைத்து இருப்பவர்கள் கூட அசினிடம் சொல்ல முடியாமல் புலம்பி தீர்க்கிறார்கள்.

# 'சிவாஜி' படப்பிடிப்பு : ரஜினிகாந்த் அமெரிக்கா பயணம்!

ரஜினி, ஸ்ரேயா நடிக்கும் சிவாஜி படப்பிடிப்பு விறு விறுப்பாக நடக்கிறது. சென்னை பின்னிங் மில்லில் சண்டைக்காட்சி உட்பட சில முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. திருவேற்காடு பகுதியில் ஒரு கல்யாண மண்டபத்தில் ரஜினி, ஸ்ரேயா திருமணக்காட்சி படமாக்கப்பட்டது. திருக்குறள் படித்து அத்திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

படப்பிடிப்பை இயக்குனர் ஷங்கர் ரகசியமாக நடத்தி வருகிறார். படப்பிடிப்பு குழுவினருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அவர்களைத் தவிர மற்றவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. படப்பிடிப்பின் போது ரஜினிக்கு தோள்பட்டையில் வலி ஏற்பட்டுள்ளது. வலியைப் பொருட்படுத்தாமல் அவர் நடித்துள்ளார்.

ஏற்கனவே டெல்லியிலும், ஸ்பெயினிலும் படப்பிடிப்பு நடந்தது. ஸ்பெயினில் படப்பிடிப்பு நடந்த போது அந்த காட்சிகளை யாரோ படம் பிடித்து இண்டர்நெட்டில் வெளியிட்டு விட்டார்.

அடுத்த கட்டமாக அமெரிக்காவில் படப்பிடிப்பு நடக்கிறது. இதற்காக ரஜினி, ஸ்ரேயா அமெரிக்கா செல்கிறார்கள்.

அமெரிக்காவில் தொழில் அதிபர் கெட்டப்பில் ரஜினி நடிக்கிறார். தமிழக மக்களுக்கு சேவை செய்ய அமெரிக்காவில் சம்பாதித்த கோடிக்கணக்கான பணத்துடன் சென்னை வருவதுபோல் காட்சிகள் எடுக்கப்படுகின்றன. பாடல் காட்சிகளும் எடுக்கப்பட உள்ளது.

நவம்பர் இறுதி வரை 'சிவாஜி' படப்பிடிப்பு நடக்க உள்ளது.

இதுவரை எடுக்கப்பட்ட காட்சிகளை எடிட்டிங் செய்யும் பணி நடக்கிறது. இந்த பணியில் டைரக்டர் ஷங்கரும், எடிட்டர் ஆண்டனியும் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். அடுத்த ஆண்டு தமிழ் புத்தாண்டு தினத்தில் சிவாஜி படம் ரிலீசாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கின்னஸ் சாதனைக்கு அனுப்பப்பட்ட 'நெஞ்சில் ஜில் ஜில்'

முழுக்க முழுக்க லண்டனிலேயே படமாக்கப்பட்டிருக்கிறது 'நெஞ்சில் ஜில் ஜில்'. நவ்தீப், அபர்ணா, வடிவேலு, பரவை முனியம்மா, தலைவாசல் விஜய் என ஏகப்பட்ட நட்சத்திரங்களைக் கூட்டிப்போய் படத்தை முடித்து விட்டு வந்திருக்கிறார் டைரக்டர் செல்வா.

ஒரு தனியார் நிறுவனம் நடத்துகிற போட்டியில் வெற்றி பெற்றவர்களை லண்டனுக்கு அழைத்து செல்கின்றார்கள். அப்படி 30 நாள் டூராக லண்டன் போகும் நவ்தீப், அபர்ணா, வடிவேலு, பரவை முனியம்மா போன்றவர்களோடு அங்கே நடைபெறும் சம்பவங்கள் தான் ஜில் ஜில் படத்தின் கதையாம்.

இந்தப் படம் கின்னஸ் சாதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சித்தார்த் நாகராஜ் என்கிற 9 வயது சிறுவனை இந்தப் படத்தில் ட்ரம்ஸ் வாசிக்க வைத்திருக்கிறார் இசையமைப்பாளர் இமான்.

சினிமா இசையமைப்பில் பங்கேற்ற இளம் வயது கலைஞன் என்கிற முறையில் 'நெஞ்சில் ஜில் ஜில்' முதல் முயற்சியாம். இதனால் உலகச் சாதனைக்கு இந்தப் படத்தை அனுப்பியிருக்கிறார்கள். மற்றபடி இது ஒரு இளமையான ஜாலியான சிம்பிளான காதல் கதை என்கிறார்கள்.

# நயன்தாரா தெலுங்கில்

நயன்தாரா தெலுங்கில் வெங்கடேஷ் ஜோடியாக நடித்து வெளியான 'லட்சுமி' படம் வெற்றிகரமாக ஓடுகிறது. இதனால் அவர் நடித்த தமிழ், மலையாளப் படங்கள் தெலுங்கில் டப்பிங் செய்து வெளியிடப்படுகின்றன.

கள்வனின் காதலி படம் தெலுங்கில் டப்பிங் செய்யப்பட்டுள்ளது. மலையாளத்தில் முன்னணி நடிகர்களுடன் நடித்த படங்களும் தெலுங்கில் வெளியிடப்படுகிறது.



ரவி - பாவனா
தீபாவளி

# தெலுங்கில் நடிக்க மறுத்த விஷால்

விஷால் நடித்த 'சண்டைக் கோழி' தெலுங்கில் டப்பிங் ஆகி வெற்றிகரமாக ஓடுகிறது. இதனால் தெலுங்குப் பட அதிபர்கள் விஷால் கால்ஷீட் கேட்டு குவிந்துள்ளனர். ஆனால் தெலுங்கில் நடிக்க விஷால் மறுத்து விட்டார்.

தமிழில் மேலும் இரண்டு ஹிட் படங்கள் கொடுத்த பிறகு தான் வேறு மொழிகளில் நடிப்பேன் என்று கூறி விட்டாராம். விஷால் நடித்து சமீபத்தில் வெளியான திமிரு படம் தெலுங்கில் டப்பிங் செய்யப்பட்டுள்ளது.

# 'அரண்' படத்தில் மோகன்லால் குரலைச் சேர்க்காதது தவறுதான்:

—ஆர்.பி.சௌத்ரி பேட்டி

மோகன்லால், ஜீவா, கோபிகா நடிப்பில் உருவான 'அரண்' படம் சமீபத்தில் வெளிவந்தது. இதில் மோகன் லாலுக்கு நடிகர் ராஜிவ் டப்பிங் குரல் கொடுத்து இருந்தார். இதற்கு மோகன்லால் கடும் அதிருப்தி தெரிவித்தார்.

தமிழ்பேசத் தெரிந்த எனது குரலை சேர்க்காமல் வேறு ஒருவர் குரலை எனக்குச் சேர்த்தது தவறு என்று கூறி இருந்தார்.

இது தொடர்பாக படத் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி நிருபர்களிடம் கூறியதாவது :-

மோகன்லாலின் வருத்தம் எங்களுக்கு வேதனை அளிக்கிறது. மோகன்லாலைதான் டப்பிங் குரல் கொடுக்க வைக்க நினைத்து இருந்தேன். ஆனால் அப்போது அவர் லண்டனில் இருந்தார். எனவே ராஜீவை வைத்து டப்பிங் பதிவு செய்தோம். இது தவறுதான். அவரது குரல் படத்தில் இல்லாதது குறையாகத்தான் இருக்கிறது.

மோகன்லால் டப்பிங் கொ்டுக்க முன்வந்தால் மீண்டும் 25 புதிய பிரிண்டுகள் போட்டு வெளியிடத் தயாராக இருக்கிறோம்.

இந்த படம் தமிழ், மலையாளம் இரண்டிலும் வெளியாகி இருக்கிறது. தமிழில் அதிக காட்சிகளைச் சேர்த்து இருப்பதாக புகார் கூறியுள்ளனர். அப்படி எதுவும் சேர்க்கவில்லை. நகைச்சுவை காட்சிகளை மட்டும் கூடுதலாகச் சேர்த்து இருக்கிறோம்.

மலையாளத்தில் இந்த படம் நன்றாக ஓடுகிறது. ஒரே வாரத்தில் ரூபா.1கோடியே 5 லட்சம் வசூலாகி இருக்கிறது.

மோகன்லாலை ஜீவா தாக்கிப் பேசியதாக கூறியது தவறு. ஜீவாவுக்கு அவர் நடிப்பு சொல்லிக் கொடுத்து நிறைய உதவிகள் செய்தார். அப்படிப் பட்டவரை தாக்கி பேசுவாரா? இதில் உண்மை இல்லை. இவ்வாறு ஆர்.பி.சௌத்ரி கூறினார்.



சூர்யா - பூமிகா
சில்லுனு ஒரு காதல்



சத்யராஜ்
பெரியார்

# சினி மினி

♥ ஜோதிகாவின் திருமணம் அறிவிக்கப்பட்டு விட்டதால் அதற்கு முன்பே திருமணம் செய்து கொள்ளவிருக்கிறார் நக்மா. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நடிகர் ரவிக்கிஷன்தான் மாப்பிள்ளை.

♥ லண்டனுக்குப் போன அபர்ணா ஏராளமான பரிசுப் பொருட்களுடன் வந்து இறங்கியிருக்கிறார். அவருக்குக் கிடைத்த பரிசுகள் இல்லை. நண்பர்களுக்குக் கொடுப்பதற்காக வாங்கி வந்தவை.



# கோபிகாவின் சிலீர் பேட்டி



அமோகா

**+ தமிழில் நீங்கள் நடித்த படம் வெளிவந்து வருஷக்கணக்கானது போல இருக்கிறதே? ஏன் இந்த இடைவெளி?**

நான் எப்போதுமே செலக்ட்டிவாகத்தான் படங்களைப் பண்றேன். அதனாலதான் ஒரு கேப் விழுந்தது. இடையில் சில மலையாளப் படங்களிலும் நடிச்சேன். அதனால் தமிழில் ஒரு கேப் விழுந்த மாதிரி உங்களுக்குத் தெரியும்.

**+ இப்போது மலையாளத்தில் நடித்து வரும் படங்கள் பற்றி?**

அங்கே இப்போ மூணு படங்கள் பண்ணிகிட்டு இருக்கேன். அதில் ஒன்று, ஜோஷி சார் டைரக்ஷன்ல சுரேஷ் கோபி ஹீரோவா நடிக்கிற படம். இதுல எனக்கு ரஜினி என்ற ஆர்.டி.டீ.ஓ. கேரக்டர். கொஞ்சம் நெகட்டீவான கேரக்டர். க்ளைமாக்ஸ் திருந்துற மாதிரியான ரோல்.

அடுத்து திலீப் சார்கூட ஷாஜி கைலாஸ் இயக்கும் படத்துல நடிக்கிறேன். இதுல ஷகிதா என்ற முஸ்லிம் பெண் வேடத்தில் நடிக்கிறேன். இதுல டயலாக்ஸ் கம்மியாக இருக்கும். ஆனால் பேஸ் எக்ஸ்பிரஷன்ஸ் நிறைய இருக்கும். நடிப்பு திறமையை வெளிப்படுத்தக்கூடிய கேரக்டர்.

இன்னொன்று மம்முட்டி சாருடன் நடிக்கும் 'போத்தன் வாலா'. இதில் கிளாடிஸ் என்கிற கிறிஸ்தவப் பெண்ணாக, அட்வகேட் கேரக்டரில் நடிக்கிறேன். பிரபல பின்னணிப் பாடகி உஷா உதுப் இதில் மம்முட்டி சாருக்கு அம்மாவா நடிக்கிறார். படத்தில் அவங்க பெரிய லாயர். நான் அவங்ககிட்ட ஜூனியர் லாயரா இருப்பேன். எல்லாமே வித்தியாசமான கேரக்டர்கள்.

**+ இப்போது தமிழில் நடித்துவரும் படங்கள்?**

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கிற 'எம்டன் மகன்' படத்துல ஹோம்லி கேரக்டர் பண்ணியிருக்கேன். படத்தோட ஃபர்ஸ்ட் ஆஃப் முடியிற நேரத்துலதான் நான் என்ட்ரி ஆவேன். இதில் சங்கராபரணம் புகழ் ராஜலட்சுமி ஆன்ட்டி எனக்கு அம்மாவாக பண்றாங்க. சண்முகராஜன் அப்பாவா பண்ணியிருக்கார்.

அப்பா - பையனுக்கு இடையே நடக்குற ஈகோ பிரச்சினைதான் படத்தின் கதை. வித்தியாசமான ஸ்கிரிப்ட். இதன் பெரும்பாலான காட்சிகளின் படப்பிடிப்பு காரைக்குடியில் நடந்தது. ஜாலியான யூனிட்.

அப்புறம் 'அரண்' படத்துல நடிச்சிருக்கேன். படத்துக்காக காஷ்மீர் போறோம்னு சொன்னதும் த்ரில்ரிங்காக இருந்தது. முன்பு யாரைப் பார்த்தாலும் அவர்களிடம் காஷ்மீர் எப்படி இருக்கும்னு கேட்பேன். எல்லோரும் காஷ்மீர் ரொம்ப அழகா இருக்கும்னு சொல்வாங்க. அவங்க சொன்ன மாதிரியே அது அழகான ஊரு.

அங்குள்ள இயற்கையோட அழகைப் பார்க்கணுமே! அங்கு நடக்கும் தீவிரவாத பிரச்சினைகள் மட்டும் இல்லைன்னா அது சூப்பரான பிளேஸ். ஃபேமிலியோட போய் என்ஜாய் பண்ண வேண்டிய இடம்.

நாங்க அங்கு அஞ்சு நாள் இருந்தோம். ஷூட்டிங் போகும்போது டிரைவர் சொல்வார் நேத்து நைட்டு இங்கே குண்டு வெடிச்சது, திரும்பி வரும்போதும்கூட சொல்வார் மத்தியானமும் இங்கே வெடிச்சது, நாலு பேர் இறந்துட்டாங்கன்னு.



இப்படி அவர் பாட்டுக்கு கேஷுவலா சொல்வதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமா இருந்ததோடு உடம்பெல்லாம் வெட வெடத்தது. அவங்களுக்கு அதெல்லாம் பழகிடுச்சு. பத்தின் டைரக்டர் மேஜர் ரவி இராணுவத்தில் மேஜராக இருந்ததால அவர் எந்த டென்ஷனும் அடையவில்லை. அதையெல்லாம் விடுங்கன்னு சொல்லுவார்.

அரண் படத்துல ஜீவாவுக்கு மனைவியாக நடித்திருக்கேன். இராணுவப் பின்னணியில் நடக்கிற கதை என்பதால் என் கேரக்டரை பெரிசா சொல்ல முடியாது. மிலிட்டரி கேம்பில ஷூட் பண்ணும்போதுதான் அங்குள்ளவர்கள் படும் கஷ்டங்களை தெரிஞ்சுக்கிட்டேன். அதெல்லாம் புது எக்ஸ்பீரியன்ஸா இருந்தது.



கோபிகா

**+ நீங்களும் பாவனாவும் நல்ல பிரெண்ட்ஸாமே?**

நாங்க ரெண்டு பேரும் சினிமாவுக்கு வர்றதுக்கு முன்னாடியே நல்ல பிரெண்ட்ஸ். நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து திருச்சூர்ல உள்ள லோக்கல் டி.வி.சேனலில் நிகழ்ச்சிகளைக் காம்பியர் பண்ணியிருக்கோம்.

இது தவிர நானும் பாவனாவும், நடிகை காவ்யா மாதவனும் சேர்ந்து ஒரு மலையாளப் பத்திரிகைக்கு பேட்டிகூட கொடுத்திருக்கோம். இப்போது நாங்க எல்லோரும் பிஸியாக இருப்பதால் அடிக்கடி சந்திக்கிற வாய்ப்பு அமைவதில்லை. இருந்தாலும் நாங்கள் போனில் அடிக்கடி தொடர்பு கொண்டு பேசுவோம்.

**+ நீங்க அதிக சம்பளம் கேட்பதாலதான் உங்களுக்கு அதிக படங்கள் வரவில்லை என்கிறார்களே?**

அப்படியெல்லாம் இல்லை. யாரோ வேணும்னு புரளியைக் கிளப்பி விடுறாங்க. ஸ்கிரிப்ட் நல்லா இருந்து அதில் என் கேரக்டரும் நல்லா இருந்தால் மட்டுமே நான் நடிக்க ஒத்துக்கொள்கிறேன். இல்லைன்னா சும்மா இருப்பேன். எண்ணிக்கையில் அதிக படங்களைப் பண்றதைவிட தரமான படங்களைப் பண்ண வேண்டும் என்பதுதான் என் விருப்பம்.



பிரசன்னா - உதய தாரா
கண்ணும் கண்ணும்

## கார்த்திகாவின் கவர்ச்சிப் பொலிசி!

புதிதாக வந்துள்ள நாயகிகளில் இரசிகர்கள் மத்தியில் பேசப்படும் ஒருவராக இருக்கிறார் 'தூத்துக்குடி' பட நாயகி கார்த்திகா. மாடலிங் துறையில் இருந்து சினிமாவுக்கு வந்துள்ள இவர், முதல் படத்திலேயே தனது நடிப்பின் திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார். உங்கள் முதல்பட அனுபவம் எப்படி இருந்தது என்று கேட்டால், அந்த படத்தில் எல்லோருமே புது முகங்கள்.

அனைவருமே பயத்தில்தான் இருந்தோம். முதல் ஷாட் திரில்லிங்காக இருந்தது. அதன் பிறகு எல்லாம் சரியாகி விட்டது என்றார். 'தூத்துக்குடி' படத்தில் கவர்ச்சி காட்டாமல் நடிப்பை வெளிப்படுத்தினீர்கள். இனிவரும் படங்களில் கவர்ச்சி காட்டாமல் தான் நடிப்பீர்களா? என்று கேட்டதற்கு, என் கேரக்டருக்கு எது தேவையோ அதுமாதிரி நடிப்பேன். கேரக்டருக்குத் தேவை என்றால் கவர்ச்சியாகவும் நடிக்கலாம் தப்பில்லை. கிளாமர், ஹோம்லி என்று தனி அடையாளங்களை ஏற்படுத்தவும் விரும்பவில்லை. எந்த கேரக்டர் என்றாலும் அந்த கேரக்டராகவே நான் தெரிய வேண்டும் என்று அனுபவ நடிகை போல பதில் அளிக்கிறார் அம்மணி.



லோரன்ஸ் - வேதிகா
முனி

## சி னி வி சி ட்



சேரன் - நவ்யாநாயர்
மாயக்கண்ணாடி




# பிரிவும் எரிவும்

பிரிவுகளைப்
பிரசவித்தாய்...
எரிவுகளை
ஏற்படுத்தினாய்...
இதனால் இன்று
எனக்குள்ளே
நெருப்புக் கோளம்...!

ஓ...
உன்னைச் சுமந்த
நெஞ்சிலின்று
சுழலும் நெருப்புக்
கோளத்தினைச்
சுமந்து கொண்டு
திரிகிறேன்...

வேகம் கூடி
அதுவொரு நாள்
வெடிக்கும்...
அந்த வெடிப்பிலே
சிக்குண்டு
சிதறும் உனக்கு
விடுதலை கிடைக்கும்...

ஆம்...
அப்போதுதான்
அனைத்துமே உனக்கு
விளங்கும்...
'எனக்குள்ளே
நெருப்புக் கோளம்...'
இனி வெடிக்கும்.

*–கன்னிமுத்து வெல்லபதியான்.*

## பூச்சியக் கற்பனை

ஆதவன்
அகோரமாக - வானில்
அன்றாடம் உலுப்பிக் கொள்ளும்
செஞ்சடைக் கற்றையைச்
சீவி முடித்துச் சிங்காரித்து,
அன்னவன்
அனற் பிழம்பான
சீற்றத்தைக் கூடத்
தணித்திடலாம்...
-கொஞ்சம் பொறுங்கள்!

தேசுறு முழு மதியைக் கூட,
தேய்ந்து மடிய விடாமல்
அம் முழு நிலவுக்கு
அலங்காரக் குஞ்சங் கட்டி
ஆகாயத்தில் பறக்கவிட்டு,
அகில மெங்கும்
அப்பிக் கொண்ட
அமாவாசை இருள் அகல
ஒளி பரப்பலாம்...
-எதற்கும் கொஞ்சம்
பொறுங்கள்!

கால மெல்லாம்
காரிருள் சூழ் நிலத்தில்
கறுப்புக் கோலிகளைத் தேடும்
கண்படைத்த கபோதிகள்
பால் வெளுப்பான
பூரண நிலவிலேனும்
பரிபூரணனைக் கண்டு,
பூதலக் கொடுமை யினின்று
வீடு பேறடைய
வாய்ப்பளிக்கலாம்...
பூச்சியக் கற்பனை யல்லாமல்,
நம்மிடம்
எல்லாவற்றையும் வசியமாக்கும்
மந்திரக் கோலொன்றிருந்தால்...!

*–ஏறாவூர் அனலக்தர்.*

## முதுமையின் ஏகாந்தம்...

இள நரைக்குள் மின்னி மறையும்
இறந்தகால தாம்பத்தியம்
இலேசாய் தலைதூக்கிப் பார்க்கும்.

தீராப்பளுவை சுமந்ததில்
தள்ளாடும் கால்கள்
ஊன்றுகோலை அரவணைக்கும்

காய்ந்த சருகாய்
தளர்ந்துவிட்ட உடல்
ஓய்விற்காய் நிழல் தேடும்.

பேச்சுத் துணைக்கு
பேயாய் அலையும் மனது
பேரப் பிள்ளைகளை நாடித் தவிக்கும்.

புதுப்புது உணவுகளை
இச்சையுடன் தேடும் நாக்கு
சுவைக்காய் அலைமோதும்.

சின்னச் சின்ன மறதிகளும்
ஆத்மார்த்த எதிர்பார்ப்புகளும்
முதுமை இங்கிதத்தை
மீண்டும் குழந்தையாக்கிவிட,
யுகமாய் நகரும்
ஏகாந்த நொடிகள் மட்டும்
மரணவாசலை தொட்டு
மீள்கிறதே
ஏன்?

*–பிரமிளா செல்வராஜா, ஹாலி – எல.*

## நீறு நெருப்பு

இருளும் ஒளியுமான
சிலநிமிடப் பொழுதுகளில்
நீ
கடத்தப்பட்டாய்.

காலுதைத்து அழுத
உன்
கர்ப்பக் குழந்தை மீதும்
அவர்களுக்கு
அனுதாபம் வரவில்லை.

இன்னும் சில
மணிகளில், நாட்களில்,
இல்லையென்றால் -
வாரங்களில் - நீ
தலையில் சுடப்பட்டோ
கழுத்து வெட்டப்பட்டோ
வழக்கமான முறை ஒன்றில்
நீ கொல்லப்படலாம்.

சேற்றுக் குழியில்
புதைக்கப்பட்டோ
சாக்குப் பையில்
அடைக்கப்பட்டோ
மிருகத்தீனியாகக்
கொழுவப்பட்டோ
போகும் உன்
நிச்சயமான
மரண திகதி தெரியாமல்
அழுது புரண்டு
எல்லோரையும் போல
கத்தம் ஓதுவதைத் தவிர
வேறுவழியில்லை
எங்களுக்கு.

உன் போல் அப்பாவிகளாய்
வயல் செய்கையில்
வலை வீசுகையில்
வாய்கிழியக் கத்தி மீன் விற்கையில்
மாடு பிடிக்கையில்
காணாமல் போன
ஆத்மாக்களெல்லாம் ஒன்றுகூடி
ஆர்ப்பரிக்கையில்
நிச்சயமாய் ஒருநாள்
தலைகுனியும் உனக்கெதிராய்
தூக்கப்பட்ட துப்பாக்கிகள்.

*'அல்லைக்கவி'.*

## உயிர் ஜோடி

கொஞ்சமாய்ப் பிறந்து,
கொஞ்சமாய் இறந்து,
முழுவதுமாய்த் தொலைத்து,
உன்னுடன் மோகித்த கணங்களை
மீட்டபோது,
மின்சாரம் ஒருமுறை
தடைப்பட்டு மீண்டது.

மின்காந்த அலைகளில்
ஏறிவந்து,
செவிப்பறை மென்செவ்வில்
அறைந்த உன்னன்பு
அழவைத்தது.

தொட முயன்று நான்
தோற்றுப் போனதை,
தொடாமலேயே - நீ
தொலைந்து போனதை
சொல்லிச்சொல்லி அழுதாய்.

'தொலைவு' ஒரு பொருட்டல்ல,
என்னைத் தொலைக்க
அனுமதி
துன்பங்கள் விழிவிரித்து,
விளிம்புகளில் விஷம் பூசி,
பழிவாங்க வந்தாலும்
உன்னைச் சொல்லி,
உன்னைச் சொல்லி
உயிர்மூடித் தப்பிக்கிறேன்.

*–வை.சாரங்கன், யாழ்.பல்கலைக்கழகம்.*

## உயிர் மொழியில் உளமுடைந்து...!

தோழிகளுடன்
கூடிமகிழ்ந்து
உயிர் வெடிக்கச்
சிரிக்கிறாய்...
எனக்கான
புன்னகையை
எந்த
மர்மத்திற்குள்
மறைத்து வைத்திருக்கிறாய்...!

உன்
அழகின் உச்சங்களை
அணு,
அணுவாய்
ஆராயச் சொல்கிறது
ஐஸ்டீன் புத்தி...!

கவிதை
தொகுக்கும்
ராப்பிச்சை
சறுகல்களை
தேன் வடியும்
உதடுகளின்
ஈரங்களில்
தேடுகிறேன்...!

மௌனம் மறந்து
ஓர்
பார்வை வீசு
தனிமையின்
ஆவர்த்தனத்தை
கிழித்தெறிகிறேன்...!

பழைமையின் ஊறலில்
காதல்
உலக குற்றமாய்
அரச முத்திரை அடித்து
எம்
தொடர்பு
தொப்புள் கொடி
அறுக்கப்படுகிறது...!

*–நஸீம்ரூமி.*

## உனக்காக...

மூங்கில் காட்டையே
அழித்து
ஒரே ஒரு
புல்லாங்குழல்
செய்தேன் -
உனக்காக
ஊதும் போதுதான்
தெரிந்தது
அதுவும்
உன்னைப் போலவே
ஊமை என்று...

*–வினோ கே.என்., அக்கரைப்பற்று.*

## சும்மா ஒரு 'கெஸ்!'

ஒரு ஊர்ல
ஆயிரத்துக்கிட்ட
இருக்கும் மிருகங்கள்...

அது ஒவ்வொன்றும்
ஒவ்வொரு நாளும்
அடிக்கடி
சண்ட புடிக்கும்
ஏதோ ஒன்னு...ரெண்டு
மூணு...நாலெண்டு சாவும்.

இவ்வாறு காலம்
புரண்டோடியது.

மிருகமும்
அதுட எண்ணிக்கையில
அரைவாசியாகி - பொறவு
காவாசியாகி
அப்புடியே!...
பத்துப்
பண்ணன்டுக்கிட்டத்தான்
கடசியா மிஞ்சினிக்கு...

என்டு
எங்கட வாப்பா
அடிக்கடி சொல்லுவாக.

அதுவுஞ்
சண்ட போட்டத்தால
கடசியா
ரெண்டே ரெண்டுதான்
மிஞ்சுனிக்கு.

அட கடவுளே!
அதுவுஞ் சண்ட போட்டு
கட்டாக் கடசில
ஒன்னே ஒன்னுதான்
எஞ்சியதாம்.

பூமியெங்கும்
கொண்டாரை
கொல்லும் கொலை
என்பதை
ஆய்வு செய்தால்
மிருக மெஞ்சியது
போலதான்.
சமாதானம் கிடைக்குமோ!...

*–அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான விஜி, ஈஸ்வர், யாஸ்மின், எஸ்.முருகன் ஆகியவர்கள் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

### நம்பிக்கைப் பயணம்

ஒதுங்கச் சொல்லும்
ஒலிப்பான்களிடையே
புகுந்து புறப்படும்
நடுத்தரவர்க்க சாதுரியம்.

அலுவலக நேரத்தை
ஞாபகப்படுத்தும்
சாலையோர மணிக்கூண்டு கடிகாரம்.

நூல் பிடித்தாற்போல்
விரையும் வாகனங்களிடையே
அந்த அவசரத்திலும்
நினைவுக்கு வரும்
மளிகை, பால் பாக்கி கெடு.

கனவுக் கண்களிடையே
விழப்பார்க்கும்
கண்ணீர்த்துளிகளுடன்
"பீஸ் கட்டணும்பா" என்ற குழந்தை
முகம்.

நடைபாதை மனிதர்களுக்கு
இணையாய்
தவிழ்ந்து செல்லும் வாகன
நெரிசல்களிடையே
விடியலின் கனவுடன் வெறித்தபடி
சிகப்புக் கம்பளத்தினுள்
காய்ந்தும் காயாமலும்
வெண்கோடுகளுக்குள் சிறைபட்டு
"அது"வான "அவன்"

வேகத்தைக் கட்டுப்படுத்தும்
சாலையோரக் காவலாளியாய்
காட்சிப் பொருளாய்
வெக்கையுடன் போட்டி போட்டு
வறண்ட மனதினை
வாட்டியெடுக்கும் பதுமைகளாய்
காட்சிகள்.

காய்ந்த உதடுகளில்
எங்கிருந்தோ வந்த
ஒரு துளி மழைத்துளி
சட்டென்று இடம்பிடிக்கும்.

*– விஜி –*

### கருப்பாகிப் போன ஞாயிறு...

என்ன செய்ய முடிந்தது
அந்த அதிகாலைப் பொழுதில்
அலுப்பு நீக்கி எழுவதற்குள்
காவுப் பசி கொண்ட
கடல் ராட்சசி
மீண்டும் விழுங்கிவிட்டாள்
கடல்கோளால் எம்
தமிழ்க் கூட்டத்தை.

உயிர்களும் உடல்களும்
உருக்குலைந்தது கண்டு
உறைந்து போனது குருதி
மொழிக்குள் அடங்காத மொழி கொண்டு
புலம்பித் தவிக்கிறது மனம்.

எங்கிருந்தாலும்
இயற்கையாலும் செயற்கையாலும்
என் தமிழர்களுக்கு மட்டும்
ஏன் தான் இப்படியோ...

அவர்களது ஆன்மா அமைதிபெற
வேண்டுதல் வைப்போம்.

உடமைகளையும் வடிவுகளையும்
இழந்தோருக்கு
உரிய பாதுகாப்பு கொடுத்து
வாரி அணைத்து வாழ்வு கொடுக்க
நம் கரங்களையும் நீட்டுவோம்...

### காலம் மாறும்!

தலைவாரி பூச்சூடி உன்னைப் பள்ளிக்கு
அனுப்பி வைத்தாள் உன் அன்னை.
சிலை போல ஏன் அங்கு நின்றாய் நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

விலை கொடுத்து வாங்கிய திருமணத்தால்
வந்த கணவன் என்பதாலா அல்லது
விலைகொடுத்துப் பள்ளிக்குப் போகும்
மனைவியாகிவிட்டோம் என்பதாலா?

காலம் மாறும் கணவனும் மாறுவான்
கவலைப்படாதே கண்மணியே
நாளும் நல்ல நாளாய் மாறும் உன்
மகளும் விலை கொடுக்காமல் போவாள்
பள்ளிக்கு.

*– ஈஸ்வர் –*

### இதுவரை...

இதுவரை...
அறிந்திருந்தேன்
உன் கண்கள் பேசுவது
உண்மையென்று...
இப்பொழுதுதான்
புரிந்து கொண்டேன்
உன் இதழ்கள் பேசுவது மட்டுமே
வார்த்தையென்று...
இப்பொழுது,
உன் மூச்சுக்காற்று
என்னிடம்
முணுமுணுத்துக் கொண்டாலும்
எதையும்
கேட்கத் தோணவில்லை.
எல்லாம்
பொய் மாயைக்குள்
பொசுங்கி
என் மெய் உருவத்தையும்
அழித்துவிடுமோ என்ற பயத்தில்...

*– யாஸ்மின் –*

### ஆசை ஆசையாய்

வாழ்த்து அட்டை நீட்டுகிறேன்
வாங்க மறுக்கிறாய்.

என்னை உன்னவனாக்கியதற்கு
உனக்கு ஏதேதோ
பரிசளிக்க நினைக்கிறேன்.
ஆனால், அவற்றையெல்லாம்
ஒதுக்குகிறாய்.

"உன்னை விடவும் வேறெந்த பரிசும்
தேவையில்லை" என்று
பொய் சொல்கிறாய்.


சிறிதும் பெரிதுமாய் நிறைய ஆசைகளை
நெஞ்சுக்குள் பூட்டி வைத்திருக்கிறாய்.

அந்த ஆசைகளையெல்லாம்
நிறைவேற்றுவதே இப்போது
என் ஆசையாகி போய் விட்டது.


ஆசை ஆசையாய்
வாங்கி தருவதில்தான்
காதல் நெருக்கமாகிறது
கண்மணி.

*– எஸ். முருகன் –*


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : கா. வசந்தன்
வயது : 20
முகவரி : பிரதான வீதி,
பனிச்சங்கேணி, வாகரை
பொழுதுபோக்கு: வானொலி
கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர் : பி. யோண்ஷைக்சன்
வயது : -
முகவரி : இல.46/47, சென்
அன்ரனிஸ் வீதி, பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர் : முகமது அனிபா றிழ்வான்.
வயது : 17
முகவரி : புதிய துறைமுக வீதி,
மூதூர் – 01
பொழுதுபோக்கு: வழமையானவை.




பெயர் : ஏ. ஆர். தாஸன்.
வயது : -
முகவரி தபால் பெட்டி இல. 40209
டோஹா, கட்டார்
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்,

## முதல் நாள் வேலையா... பதற்றம் எதற்கு?

**முதன்** முதலாக வேலைக்குப் போகும் ஆண், அல்லது பெண்ணா நீங்கள். அப்படியானால் உங்களிடம் ஓர் இனம் புரியாத பதற்றம் இருக்கும்.

நாம் பணி செய்யப்போகும் இடத்தில் இதர ஊழியர்கள் எப்படி இருப்பார்கள்? எப்படி நம்மிடம் பழகுவார்கள்? நாம் செய்ய வேண்டிய வேலை என்னவாக இருக்கும்? எளிமையாக இருக்குமா? அல்லது கஷ்டமானதாக இருக்குமா? முதலாளி அல்லது மேலதிகாரிகள் எதிர்பார்க்கும் அளவுக்கு நமது செயற்பாடு இருக்குமா? என்று பலவிதமான கேள்விகள் நம் மனத்தில் எழும்.



**முதல் நாள் வேலைக்குச் செல்வோருக்கு இதோ சில டிப்ஸ்...**

காலையில் சீக்கிரம் எழுந்திருக்க முதல்நாள் இரவு சீக்கிரமே தூங்கப்போய் விடுங்கள். மறக்காமல் கடிகாரம் அல்லது போனில் அலாரம் வைத்துவிடுங்கள். வழக்கமாக நாம்தான் காலையில் சீக்கிரம் எழுந்து விடுவோமே என்று அசட்டையாக இருந்துவிடாதீர்கள்.

முதல் நாள் வேலைக்குப் போவதால் நல்ல டிரஸ் போட்டுக் கொண்டு போனால்தான் எடுப்பாக இருக்கும். எனவே ஆபீஸுக்கு என்ன டிரஸ் போட்டுக் கொள்வது என்பதை முன்கூட்டியே தீர்மானித்து, அதை அயர்ன் செய்து தயாராக வைத்துவிடுங்கள். அதேபோல ஷூக்களுக்குப் பாலிஷ் செய்து வைத்துவிடுங்கள்.

வாகனத்தில் செல்பவராக இருந்தால் வண்டி 'ஸ்டார்டிங் ட்ரபல்' இல்லாமல் நல்ல நிலையில் இருக்கிறதா, பெட்ரோல் போதுமான அளவு உள்ளதா என்பதை முதல்நாளே உறுதி செய்து கொள்ளுங்கள்.

இப்படி முன்கூட்டியே சில வேலைகளைச் செய்வதால் ஆபீஸ் கிளம்பும் போது பதற்றம் இல்லாமல் இருக்கலாம்.

வேலைக்குச் செல்லவேண்டிய தினத்தன்று காலையில் சீக்கிரம் எழுந்து பல்துலக்கி, சூடாக ஒரு காப்பி சாப்பிடுங்கள். பின் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் குளிர்ந்த நீரில் குளியுங்கள். அது உங்கள் மனதுக்கும், உடலுக்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

அடுத்து உங்கள் வீட்டில் செய்தித்தாளை ஒரு நோட்டம் விடுங்கள். அதில் உள்ள முக்கியச் செய்திகளை மனதில் பதிவு செய்துகொள்ளுங்கள். இது உங்களுக்குப் பயனாக இருப்பதுடன் தேவையற்ற குழப்பம், பதற்றத்தைக் குறைக்க உதவும்.

எல்லாவற்றையும் செய்துவிட்டு ஆபீஸ் கிளம்பத் தயாரானால் கூட மனதில் ஒருவித பயம் இருக்கும். முதல்நாள் வேலைக்குச் செல்கிறோம். அலுவலகத்தில் சூழ்நிலை எப்படி இருக்குமோ? என்ற நினைப்பு இருந்து கொண்டே இருக்கும். எந்தவிதப் பதற்றத்துக்கும் இடந்தராமல் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்.

கொஞ்ச நேரம் ரேடியோவில் உங்களுக்குப் பிடித்த பாட்டைக் கேளுங்கள். அல்லது டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த சேனலை போட்டுப் பாருங்கள். மனம் அமைதி அடையும்.

அலுவலகத்துக்குக் குறிப்பிட்ட நேரத்துக்குச் சில நிமிடங்கள் முன்னதாகவே சென்றுவிடுங்கள். இதன் மூலம் நீங்கள் நம்பிக்கைக்குரியவர், நேரம் தவறாதவர் என்ற எண்ணம் உங்கள் மேலதிகாரிக்கு ஏற்படும்.

அலுவலகம் சென்றதும் இதர ஊழியர்களிடம் நீங்களே உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் புதியவர் என்பதால் மற்றவர்கள் உங்களை மகிழ்ச்சியுடன் கைகுலுக்கி வரவேற்பார்கள். எனவே அனாவசியப் பதற்றம் வேண்டாம். யாரிடம் எப்படிப் பேசவேண்டும், எப்படிப் பழக வேண்டும் என்பது போகப்போக உங்களுக்கே தெரிந்துவிடும்.

முதல் நாள் வேலை என்பது சிலருக்கு எளிதாகவும், சிலருக்கு கஷ்டமானதாகவும் இருக்கலாம். அதற்காக் கவலைப்படாதீர்கள். கொடுத்த வேலையை நிதானமாக, அதே சமயத்தில் அனாவசியக் காலதாமதம் இல்லாமல் செய்யுங்கள். உங்கள் மீது உள்ள முழு நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் வேலைகளை எதிர்கொள்ளுங்கள்.

வெற்றி உங்களுக்கே!




## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது –ஷோபா–*

### முட்டை சீஸ் பரோட்டா

***தேவையானவை:-***

சீஸ் - 25 கிராம்
கொத்தமல்லித்தழை - 1/2 கப்
புதினா இலை - 1/4 கப்
பச்சை மிளகாய் - 2
முட்டை - 3
உப்புத்தூள் - தேவையானளவு
மிளகாய்த்தூள் - சிறிது
சமையல் எண்ணெய் - சிறிது.

***செய்முறை :-***

25 கிராம் சீஸை மிக மெல்லியதாக நறுக்கிக் கொள்ளவும், 1/2 கப் கொத்த மல்லித்தழை, 1/4 கப் புதினா இலை, 2 பச்சை மிளகாய் ஆகியவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

மூன்று முட்டைகளைத் தேவையான உப்புத்தூள், ஒரு தேக்கரண்டி மிளகாய்த் தூள் கலந்து முட்டை அடிக்கும் கருவியால் அடித்துக் கொள்ளவும்.

இத்துடன் நறுக்கிய பொருட்களை கலந்து கொள்ளவும். வாணலியில் 5 மேசைக்கரண்டி சமையல் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், முட்டைக் கலவையை ஊற்றிக் கிளறி முட்டை வெந்ததும் இறக்கி வைத்துக் கொள்ளவும். கோகி பரோட்டாவிற்கு மாவு தயாரிப்பது போல் தயாரித்துக் கொள்ளவும்.

அதே முறையில் காலி.'.ப்ளவருக்குப் பதிலாக முட்டையையும், சீஸையும் தூவிப் பரோட்டாக்கள் செய்து சமையல் எண்ணெயைக் காய வைத்து சிவக்க வறுத்து எடுக்கவும்.

## மணப்பெண்கள் அழகைப் பராமரிப்பது எப்படி!

**ம**ணப்பெண் திருமணமாவதற்கு 3 மாதத்திற்கு முன்பிருந்தாவது முறையான அழகு பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும்.

அப்போது தான் மணப்பெண்ணின் முக அழகானது வீடியோ, போட்டோவில் வசீகரமானதாகத் தெரியும்.

✦ அரைத்தேக்கரண்டி எலுமிச்சம்பழ சாறுடன் சிறிது பால் சேர்த்து அத்துடன் கிளிசரின் சில துளிகள் விட்டு ஒன்றாகக் கலந்து அரைமணி நேரம் வைத்து விடுங்கள். பிறகு இதை எடுத்து இரவு படுப்பதற்கு முன்பு முகத்தில் நன்றாகப் பூசிக்கொள்ளுங்கள். காலையில் முகத்தைக் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதைத் தினமும் தவறாமல் செய்து வந்தால் உங்களது முகம் அபாரமாகப் பளிச்சிடும்.



✦ கனிந்த தக்காளியில் சாறு எடுத்து காலை, பகலில் முகம் முழுவதும் பூசி ஒரு மணி நேரம் உலரவிடவும். பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவவும். தினமும் தொடர்ந்து செய்துவர முகம் சிறிது சிறிதாக நல்ல நிறத்தை அடைகிறது.

✦ வெள்ளரிக்காயை மிக்ஸியில் அரைத்து சாறு எடுத்து முகம் முழுவதும் தடவி 25 நிமிடங்கள் உலரவிட்டு, பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவினாலும் முகம் பளபளப்பு பெறும்.

✦ பாதாமை அரைத்து பாலேட்டுடன் சேர்த்து சில துளிகள் பன்னீர் விட்டு முகத்தில் தடவிக்கொண்டு அரைமணி நேரம் உலரவிட்டு கழுவினால் முகம் பளிச்சென்று ஆகிவிடும். தொடர்ந்து செய்து வந்தால் முகச் சுருக்கம் என்றால் என்னவென்று கேட்பீர்கள். தயிர்கூட மிகச்சிறந்த அழகு சாதனம்தான். முகத்தில் தயிரை தடவி வர உங்கள் முகம் இளமைப் பொலிவுடன் திகழும்.

✦ கடலை மாவுடன் தயிர் சேர்த்து முகத்தில் தடவி அரை மணிநேரம் உலர வீட்டு வெது வெதுப்பான நீரில் கழுவி வர முகம் பொலிவு பெறும். கடலை மாவு ஒரு மிகச்சிறந்த கிளன்சிங் ஏஜண்ட்.

✦ முகத்திற்கு கிரீம் லோஷன், மாய்ஸரைஸர் என்று மாற்றி மாற்றி கவனத்துடன் ஒப்பனை செய்து கொள்ளும் நாம், கழுத்தை கவனிப்பதில்லை. நன்றாக உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பாருங்கள். முகம் பளிச் என்று இருக்கும். கழுத்து சம்பந்தமில்லாததுபோல கறுப்பாக இருக்கும். முகத்திற்கு எடுத்துக் கொள்ளும் கவனத்தை கழுத்திற்கும் எடுத்துக்கொள்வது நல்லது.

✦ சில பெண்கள் விதவிதமான உடையணிந்து முகத்தை ஒப்பனை செய்துகொண்டாலும் கைவிரல்களைப் பார்த்தால் தடிப்பாகவும், சொரசொரவென்றும் பார்ப்பதற்கே விகாரமாக இருக்கும். இதற்குக் காரணம் என்ன? அவர்கள் கைவிரல்களைச் சரியாக பராமரிக்காததுதான். சரிவரப் பராமரித்து அழகூட்டப்பட்ட விரல்களே உங்கள் அழகிற்கு மேலும் மெருகூட்டக்கூடியவை.

✦ வீட்டு வேலைகளின் போது உதாரணமாக பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தலின் போது கைகளில் ரப்பர் உறைகளைப் போட்டுக்கொள்வது அவசியம். உறைகளைப் பயன்படுத்துவதற்கு முன் ஏதாவது ஒரு ஹாண்ட் க்ரீம் தடவிக் கொள்ளுங்கள்.

✦ நகங்கள் மிகவும் மென்மையாக இருந்தால் ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் எடுத்து அதில் உப்பு சிறிதளவு போட்டு அதில் விரல் நகங்கள் படுமாறு சில நிமிடங்கள் வைத்திருக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து சில நாட்களுக்கு செய்து வர நகங்கள் உறுதி ஆகும். கைவிரல்கள் உலர்ந்து வெடிப்புகள் வராமலிருக்க ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறையாவது கிரீம் அல்லது தேங்காய் எண்ணெயை கைகளில் பரவலாகத் தடவி தேய்த்துவிட்டுக் கொள்ள வேண்டும்.

✦ நகங்களில் அவ்வப்போது ஆலிவ் எண்ணெய் சிறிது எடுத்து மசாஜ் செய்து கொள்வதால் நகங்கள் பலப்படும். ஒரு நாளைக்கு ஒரு முறையாவது க்ரீம் அல்லது ஆலிவ் எண்ணெயை எடுத்துக்கொண்டு கைவிரல்களை உருவி உருவித் தேய்த்து மசாஜ் செய்து கொள்ள வேண்டும். விரல்களை மஸாஜ் செய்வதால் இரத்த ஓட்டம் சீராகும்.

✦ நகங்கள் உறுதியில்லாமல் அவ்வப்போது உடைந்தாலோ அல்லது தெறித்து விட்டாலோ உடம்பில் போதுமான அளவு இரும்புச்சத்து அல்லது கல்சியச் சத்து இல்லை எனத்தெரிந்து கொள்ளலாம். அதிகமாக தண்ணீர் குடிப்பவர்களுக்கு நகங்கள் உறுதியாக இருக்கும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

*கேள்வி இல்லை! பதில் இல்லை!*
*பொருட் கொள்வனவு அவசியமில்லை!*
*வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!*

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

36

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
..........................................
தே.அ. அட்டை இல : ..........................................
கையொப்பம் : ..........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -36**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**
**29.08.2006**

**பரிசுப் போட்டி இல - 34**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**பய்ஸல் அஹமட், இல.01, 'கிப்ட் கோர்னர்', நுவரெலியா வீதி, ஹாலி - எல.**


அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**அத்தோடு** தப்பியோடுகிற ஐடியாவுக்கு ஒரு கும்பிடு போட வேண்டியதுதான். ஒரே ஒரு சான்ஸ் உண்டு. உன் வயிற்றிலோ, முழங்காலிலோ ஒரு வெட்டுக் காயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆஸ்பத்திரிக்குப் போக முடியும். அங்கிருந்து தப்புவதற்கு முயற்சி பண்ணலாம். என்ன செய்தேனும் தீவுகளுக்குப் போய்விடாதபடி தடுத்துக்கொள்ள வேண்டும்.

"இன்னொரு வழியும் உண்டு. தீவுகளுக்குக் கைதிகளைக் கொண்டு செல்கிற கப்பல் தயாராகவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பணத்தைக் கொஞ்சம் வெளியே எடுத்து, மருத்துவமனை சேவகனுக்கு லஞ்சம் கொடுக்கலாம். அவன் உங்கள் முழங்கால் மூட்டிலோ, முழங்கை மூட்டிலோ டர்பன்டைன் ஊசி ஏற்றுவான். அல்லது சிறுநீரில் நனைத்த ஒரு தலைமயிரை உங்கள் வெட்டுக் காயத்தில் வைத்து எடுப்பான். காயம் ரொம்ப மோசமாகிவிடும். அல்லது ஸல்பர் கொஞ்சம் கொடுத்து உங்களை மூக்கால் அதை உறிஞ்சும்படி சொல்வான். பிறகு உங்களுக்கு 102 டிகிரி காய்ச்சல் இருக்கிறது என்று டாக்டரிடம் சொல்வான். எப்படியோ, கப்பலுக்காகக் காத்திருக்கிற நாளில் என்ன செய்தாவது ஆஸ்பத்திரியில் இடம் பிடித்துவிட வேண்டும்.

"உங்களைத் தனியே கூட்டிட்டுப் பிரிக்காமல், முகாமில் உள்ள குடிசைகளில் மற்றவர்களோடு சேர்த்து வைத்திருந்தால், வேலையை ஆர அமரக் கவனிக்கலாம். அதற்கு நேரம் இருக்கும். முகாமின் உற்புறத்தில் வேலை செய்யப் போய் விடக்கூடாது. குமாஸ்தாவுக்கு லஞ்சம் கொடுத்து, கிராமத்தில் தோட்ட வேலையோ, கூட்டுகிற வேலையோ கிடைக்கிற மாதிரி பண்ணிக் கொள்ள வேண்டும். வேலை பார்ப்பதற்காகத் தினம் காலையில் வெளியே போய்விட்டு, இரவு திரும்பி வரலாமாகையால் போதுமான அவகாசம் கிடைக்கும். தண்டனைக் காலம் முடிந்து போய்க் கிராமத்தில் வசித்து வருகிற நபர்களுடனும், சீனர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் தப்புவதற்கு உதவ அவர்கள் தயாராக இருப்பார்கள். கிராமத்துக்கு வெளியே உள்ள முகாம்களுக்குப் போகவேண்டாம். அங்கே போனால் சீக்கிரமே சாவுதான். சில இடங்களில் யாராலுமே மூன்று மாதத்துக்கு மேல் இருக்க முடிந்ததில்லை. அங்கே அடர்த்தியான தோப்புக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஏகப்பட்ட மரங்களை வெட்டிப் போடும்படி கட்டாயப் படுத்துவார்கள்."



எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

ஜுலட் இந்தப் பயனான தகவல்களைப் பிரயாணம் நெடுகிலும் திரும்பத் திரும்பத் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

ஜுலட்டைப் பொறுத்தமட்டில் ஒரு திட்டம் தயாராக வைத்திருந்தான். தப்பியோடி மீண்டும் பிடிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டவன் அவன். ஆகவே தன்னை நேரே தண்டனைச் சிறைக்குத்தான் அனுப்பப்போகிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவனுடைய அலுமினியக் குழாயில் ஒரு சின்னஞ் சிறு கத்தி வைத்துக் கொண்டிருந்தான். பேனாக் கத்தியைக் காட்டிலும் சிறியது அது. அக்கரைக்குப் போனதுமே அந்தக் கத்தியை எடுத்து முழங்காலைக் கீறிக்கொள்ளப் போகிறானாம். கப்பலிருந்து இறங்கும்போது தடாலென்று விழப்போகிறானாம். அத்தனை பேர் கண் முன்னால் அப்படிச் செய்தால் துறைமுகத்திலிருந்து நேரே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று விடுவார்கள் என்பது அவன் எண்ணம். அதே போல்தான் நடக்கவும் செய்தது.

வார்டர்கள் முறை போட்டுக் கொண்டு சென்றார்கள். உடைமாற்றிக்கொள்வதற்காக, ஒவ்வொருவரும் திரும்பி வருகையில் வெள்ளையுடை அணிந்து இரும்புத் தொப்பி மாட்டிக்கொண்டிருந்தார்கள் வெயிலுக்காக. "அநேகமாய் வந்தாயிற்று," என்றான் ஜுலட். கப்பலில் ஜன்னல் துவாரங்களை மூடிவிட்டதால் தாள முடியாத வெப்பமாக இருந்தது. கண்ணாடி வழியாகப் பார்த்தபோது, கரையில் புதர்கள் தெரிந்தன. தண்ணீர் கலங்கலாக இருந்தது. கைபடாத கன்னிக் காடுகள் பச்சைப் பசேலென்று மனத்தைக் கவர்ந்தன. கப்பலின் சைரன் ஒலி கேட்டுப் பறவைகள் சிறகடித்துக் கொண்டு வானத்தின் குறுக்கே பறந்தோடின. முதன் முதலாக மர வீடுகளைக் கண்டோம். வளைவு வளைவான இரும்புப் பலகைகள் கூரையிட்டிருந்தன அவற்றுக்கு. கறுப்பு ஆண்களும், பெண்களும் வீட்டு வாசல்களின் மீது கப்பல் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கப்பலில் இப்படிப்பட்ட 'மனிதச் சரக்கு' வந்திறங்குவதைப் பார்த்துப் பார்த்து அவர்கள் பழகியிருந்தார்கள். கையைக்கூட ஆட்டவில்லை.

யாரும் பேசவில்லை. ஜுலட் தன் கத்தியைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தான். டிரௌசரின் முழங்கால் பக்கத்தில் வெட்டிவிட்டு, துணியின் ஓரங்கள் கிழிசல் போல் தோன்றுமாறு செய்து கொண்டிருந்தான். தளத்துக்குப் போன பிறகுதான் முழங்காலை வெட்டிக்கொள்ளப் போகிறானாம். இங்கேயே வெட்டிக்கொண்டால் தரையில் இரத்தக்கறை ஏற்பட்டு விடுமே?

கூண்டின் கதவுகளைத் திறந்தார்கள் வார்டர்கள். மூன்று மூன்று பேர்களாக அணி வகுக்கச் செய்தார்கள். நாங்கள் நாலாவது வரிசையில் இருந்தோம். தேகாவுக்கும் எனக்கும் நடுவில் ஜுலட் இருந்தான். தளத்தின் மீது சென்றோம். அப்போது பிற்பகல் இரண்டு மணி இருக்கும். கொளுத்தும் வெயில், படிகளை நோக்கி நடக்கலானோம். முதல் ஆள் படியிறங்கியபோது எங்கள் வரிசை ஒரு விநாடி நின்றது. ஜுலட் தனது இரண்டு கைகளையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. அதற்காக நான் அவன் பை மூட்டையை அவன் தோளின் மீதே பிடித்து வைத்துக் கொண்டேன். ஒரே ஒரு சரக்! மூன்று அல்லது நாலங்குல நீளத்துக்குக் கத்தி கிழித்தது முழங்கால் தோலை. சட்டெனக் கத்தியை என்னிடம் தந்து விட்டு, தன் பை மூட்டையைத் தானே பிடித்துக் கொண்டான். முதல் படியில் இறங்கிய கணமே இடறி விழுகிற மாதிரி விழுந்தான், கடைசிப் படி வரையில் கடகடவென்று உருண்டான். அவனைப் பிடித்து எழுப்பினார்கள். காயம்பட்டிருப்பதைக் கண்டதும் ஸ்ட்ரெச்சர் ஆட்களைக் கூப்பிட்டார்கள். அவன் திட்டமிட்டிருந்தபடியே அனைத்தும் நடந்தேறியது. ஸ்ட்ரெச்சரில் இரண்டு பேர் சுமந்து செல்ல, ஜுலட் மறைந்து போனான்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# அங்கங்களை வெட்டும் ஆபத்தானவர்கள்!

**மருத்துவ** சேவையே தன் உயிர்மூச்சாகக்கொண்டு வாழ்ந்த மருத்துவ நிபுணர் அமரர் ஜி.வெங்கட சாமி பற்றி சென்ற வாரம் எழுதியிருந்த தலையங்கத்தில், 'ஊருக்கு ஒரு மருத்துவர் இப்படித் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாலும் போதும்... இந்த நாட்டின் ஒவ்வொரு கைப்பிடி மண்ணிலும் இறைவனின் தரிசனம் நிச்சயம்!' என்று குறிப்பிட்டு இருந்தோம். அடுத்த இதழிலேயே, மருத்துவத் துறையின் கறுப்பு ஆடுகள் பற்றி இப்படியொரு அதிர்ச்சிக் கட்டுரையை அச்சேற்றுகின்ற நிலைமை! 'கண்ணா! வெளியே போகாதடா! புள்ள புடிக்கிறவன் புடிச்சிட்டுப் போய் கை, காலை வெட்டி, கண்ணைக் குருடாக்கிப் பிச்சை எடுக்க வெச்சிடுவான்!' எனப் பெற்றோர்கள், அடம் பிடிக்கும் தங்கள் பிள்ளைகளை சும்மாவாச்சிடும் மிரட்டுவது வழக்கம். ஆனால், உண்மையிலேயே இப்படியொரு கொடூரத்தை சில மருத்துவர்களே நடத்திவரும் அவலத்தை 'சி.என்.என். - ஐ.பி.என்.' டி.வி. சேனல் திட்டமிட்டு 'டொக்டர் சைத்தான்' என்கிற பெயரில் ஒரு ஒப்ரேஷன் நடத்தி, வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. இந்தச் சேனல் குழுவினர், தாங்கள் ஒரு குறிப்பிட்ட கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, குறிப்பாகச் சிலரின் பெயர்களையும் சொல்ல, அந்த டொக்டர்களுக்கு இவர்கள் மீது முழு நம்பிக்கை ஏற்படுகிறது. அதன்பின், தங்களோடு வந்திருக்கும் ஒரு சிறுவனின் கையை வெட்டி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, தயங்காமல் சம்மதித்து, 10,000 ரூபாய் ஃபீஸ் கேட்கிறார்கள் அந்த டோக்டர்கள். பணம் கை மாறுகிறது. இந்தக் காட்சிதான் டி.வி.யில் ஒளிபரப்பாகி, நாட்டையே பதைபதைக்கச் செய்து விட்டது இந்த ஒப்ரேஷனை வெற்றிகரமாக நடத்தி முடித்த புலனாய்வுக் குழுவின் தலைவரும், மேற்படி செய்திச் சேனலின் மூத்த நிருபருமான வி.கே.சசிகுமாரிடம் பேசினோம்...


அரவிந்த் அகர்வால்
அஜய் அகர்வால்
பி. கே. பன்சால்

"நம் இந்தியாவில் பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமோ, கிராமமோ இல்லை. மும்பையில் மட்டும் பிச்சைக்காரர்களுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூபாய் 180 கோடி. இவர்களை மாஃபியா கும்பல்கள் மடக்கிப் பணம் பிடுங்கி வருகின்றன. தவிர, நல்ல உடல் நலத்துடன் இருப்பவர்களையும் கடத்திச் சென்று கை, கால்களை வெட்டி, கண்களைக் குருடாக்கிப் பிச்சை எடுக்க வைக்கின்றன. இப்படி கை, கால்களை வெட்டுவதற்குச் சில டொக்டர்களே உடந்தையாக இருக்கின்றனர் என்பதுதான் நாங்கள் அம்பலமாக்கிய ஷாக் செய்தி.

இதற்காக, நாங்கள் 12 பேர் ஒரு குழுவாகச் சேர்ந்து ஆறுமாத காலம் மூச்சுக்காட்டாமல் பாடுபட்டோம். அமிதாப் தாக்கூர் என்பவர் தலைமையில் பணியாற்றும் டி.ஐ.ஜி. (Dedicative Investigating guild) என்னும் பத்திரிகையாளர்கள் குழுவும் எங்களோடு சேர்ந்து உழைத்தது" என்றார் சசிகுமார்.

"எங்கள் ஒப்ரேஷனில் சிக்கிய மருத்துவர்களில் முக்கியமானவர் பி.கே.பன்சால். உ.பி.யின் காசியா பாத் மற்றும் நொய்டாவின் சிவில் மருத்துவமனையில் பணியாற்றுபவர் (ஒரே அரசு மருத்துவர் இப்படி இரண்டு இடங்களில் பணியாற்ற முடியுமா என்பதே விசாரணைக்கு உரியது) இவரது சகோதரர், உ.பி.யில் செல்வாக்குள்ள ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. அந்தத் தைரியத்தில்தான் பன்சால் இந்த மாபாதகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். டெல்லியில் சிக்கியுள்ள அஜய் அகர்வால், பிரபல கங்காராம் அரசு மருத்துவமனையின் எதிரிலேயே ஒரு கிளினிக் வைத்து நடத்துகிறார். மூன்றாவதாகச் சிக்கியிருக்கும் அரவிந்த் அகர்வால், உ.பி.யின் பரேலியில், ஒரு பிரபல தனியார் மருத்துவமனையை நடத்திவருகிறார்" என்ற சசிகுமார், டெல்லியில் உலவும் ஊனமுற்ற பிச்சைக்காரர்களில் அதிகம் பேர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான் என்றும், அவர்களிலும் தமிழர்களின் எண்ணிக்கை தான் அதிகம் என்றும், இத்தகைய கொடூர தொழிலைச் செய்யும் மாஃபியா கும்பலுக்கு நாடு முழுவதுமே நெட்வெர்க் இருப்பதாகவும் சொல்லி, வயிற்றில் புளியைக் கரைத்தார்.

"டெல்லியில், டாக்டர் அஜய் அகர்வாலின் வீட்டில் சோதனை நடத்தி, அவரை ஒரே இரு இரவு மட்டுமே பிடித்து விசாரணை நடத்திய பொலிஸ், யாரும் புகார் தர முன்வரவில்லை எனக் காரணம் கூறி, அவரை அனுப்பிவிட்டது. ஐ.பி.சி. - 156, 157-இன் படி பொலிஸே இந்த வழக்கைப் பதிவு செய்து விசாரிக்கலாம் எனச் சட்டம் இருந்தும், நாங்கள் ஆதாரத்துடன் படம் பிடித்துக் காட்டியும், ஏனோ மௌனம் காக்கிறது பொலிஸ்.

உ.பி.யில் மட்டும் பொலிஸுக்குப் பயந்து, மற்ற இரு டொக்டர்களும் தலைமறைவாகிவிட்டார்கள். இவர்கள் இப்போது உ.பி.யின் உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற முயன்றுவருகிறார்கள். நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு விஷயங்களைத் திரட்டி, இது தொடர்பாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிப்புத் துறையின் அமைச்சர் மீரா குமாரிடம் கருத்துக் கேட்க முனைந்தோம். எங்களிடம் பேசுவதற்கும் தனக்கு நேரமில்லை எனத் தீர்மானமாக மறுத்துவிட்டார்" என்று சொன்ன சசிகுமார், தன்னைப் புகைப்படம் எடுக்க மறுத்துவிட்டார்.

"அடுத்தடுத்து நிறைய ஒப்ரேஷன்கள் இருக்கின்றன. முகம் காட்டிவிட்டால், தப்பு செய்கிறவர்கள் என்னைப் பார்க்கிறபோது உஷாராகி, ரகசிய கேமரா எங்கே என்று தேட ஆரம்பித்துவிடுவார்கள்" என்று சிரித்தார்.


ஜோஸ் அக்காரா

டிவியில் இவர்களின் பதிவுகள் வெளியாகி, மத்திய அரசு வட்டாரத்தில் களேபரம் தொடங்கிய அதேசமயம், உ.பி-யின் பரேலியில் அரவிந்த் அகர்வால் நடத்தும் மருத்துவமனைக்குள் ஆத்திரத்தோடு புகுந்த பொதுமக்கள், அந்த வளாகத்தையே அடித்து நொறுக்கிவிட்டனர். தலைமறைவாகிவிட்ட டொக்டர் அர்விந்த், மீடியாக்கள் திட்டமிட்டுத் தன்னை இதில் சிக்கவைத்து விட்டதாகவும், உண்மையில் தான் நிரபராதி என்றும் தன்னிலை விளக்கம் அளித்து ஒரு சி.டி.யை தனது அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

அலிகாரில் முகாம் அமைத்து, சமூக சேவை செய்து வரும், கேரளாவைச் சேர்ந்த கத்தோலிக்கப் பாதிரியார் ஜோஸ் அக்காராவிடம் இது குறித்து பேசினோம்.

"குடிகாரத் தந்தையின் அடி, உதை... மாற்றாந் தாய் கொடுமை, வறுமை போன்ற பல காரணங்களுக்காக வீட்டை விட்டு ஓடிவரும் குழந்தைகள், நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போகிறார்கள். நாடு முழுவதும் இப்படிப்பட்ட சிறுவர்கள் 30 லட்சத்துக்கும் அதிகம். அவர்களுடைய கிட்னி போன்ற பாகங்களைத் திருடுவது, கை, கால்களை வெட்டிப் பிச்சை எடுக்கவைப்பது போன்ற கொடுமைகளை மாஃபியாக்கள் செய்துவருகிறார்கள்.

தவிர, இந்தச் சிறுவர்களில் பலர் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி, திருடர்களாகவும், கிரிமினல்களாகவும் மாறிவிடுகிறார்கள். பிஞ்சு மனம் திரிந்து நஞ்சாக மாறியிருக்கும் பரிதாபத்துக்குரிய அவர்களிடம் மெள்ளப் பேசி, சமாதானமாக அழைத்துவந்து, மறுவாழ்வு கொடுக்க முயற்சி செய்து வருகிறேன். பல சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தும் இருக்கிறேன்.

மத்திய, மாநில அரசுகள் இந்த விஷயத்தில் மிகவும் மெத்தனமாக இருக்கின்றன. சேனலில் வெளியான செய்திக்குப் பிறகாவது அரசு விழித்துக்கொண்டு, இவர்களை நல்வழிப்படுத்த உடனடியாகப் புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும்" என்கிறார் ஜோஸ் அக்காரா.

உயிர்ப் பிச்சை கேட்டுக் கையேந்தி வருபவர்களுக்கு வாழ்க்கையைத் தருகிற அற்புதமான மருத்துவர்களுக்கு நடுவே, இப்படிக் கசாப்புக் கடை பாணியில் கை, கால்களை எடுக்கிற ஒரு சிலர் நீங்காத கறைகள்தான்!

*(நன்றி : ஆ.வி)*

சிரிப்பு 20

# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”



**அவரைப்** போல ஏழ்மை நிலையில் பிறந்த பல கோடி மக்கள், ஏழ்மையில் வாடி, வாழ்க்கையின் சுழல்களில் சிக்கி மடிந்து விடுகிறார்கள் என்ற ஒரு பயங்கரமான உண்மை, அவர் மனதில் ஆழமாகவே படிந்திருந்தது. நான் வளர்ந்து விட்டேன், வசதிகளை அடைந்து விட்டேன். மற்றவர்களைப் பற்றி எனக்கென்ன கவலை என்று அவர் இருந்ததே இல்லை.

தன்னுடைய மனக்குமுறல்களை, எண்ணங்களை, எல்லாவற்றையுமே தன் படங்களில் அடிப்படையாக வைத்தார். திரைப்படத்தின் மூலம் அதை ஒரு இயக்கமாகவே நடத்தினார் என்றால் அது மிகையே அல்ல! அதன் தொடக்கம் "ஈஸி ஸ்ட்ரீட்" படத்தில் முழுமையாகவே காணப்பட்டது. வாழ வழியின்றி அந்த வழியைத் தேடி அலையும் சாப்ளினின் பாத்திரமான ட்ராம்ப் ஒரு ஊருக்கு வருகிறான். அந்த ஊரில்



ஒரு கிறிஸ்துவ “மிஷன்” (Mission) கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்து சேர்கிறான். அங்கு எல்லோரும் பிரார்த்தனை செய்து கொண்டு பாடுகிறார்கள். ஆனால் சாப்ளினின் கவனம், அங்கிருந்த வசூல் உண்டியல் மேல் தான் இருக்கிறது. அதை யார் கண்ணிலும் படாமல் திருடி விடுகிறார். ஆனால் அந்தப் பிரார்த்தனையையும், பாடல்களையும், பாதிரியாரையும், சொற்பொழிவையும் கேட்ட அவன் மனம் மாறுகிறது. திருடிய உண்டியலைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வெளியேறுகிறார்! கால் போன போக்கில் நடந்துகொண்டு அந்த ஊரிலேயே மிகவும் அராஜகம் நிறைந்த தெருவான "ஈஸி ஸ்ட்ரீட்" உள்ளே நுழைகிறார். அந்தத் தெருவிற்குப் பெயர்தான் "ஈஸி ஸ்ட்ரீட்". ஆனால் அங்கு எல்லாமே மிக மிகக் கவனம்! ரவுடிகளின் கெடுபிடி நிறைந்த இடமது. பொலிஸ்காரர்களே வருவதற்குப் பயப்படுவார்கள். அப்படி மீறி வந்தால் 'பேட்டை ரவுடியான தலைவனிடம் (Eric Camphell) உதைபட்டு ஸ்டெச்சரில் பொலிஸ் ஸ்டேஷனுக்கு தூக்கிச் செல்லப்படுவார்கள். இதையெல்லாம் பார்த்த சாப்ளினின் மனதில் ஒரு புதிய எண்ணம், ஆசை தோன்றுகிறது. விளைவு - சாப்ளின் பொலிஸ்காரராகிறார்.

பொலிஸ் ஆடையில் அந்தத் தெருவில் பவனி வருகிறார், ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும். இவரைப் பார்த்த ரவுடித் தலைவனுக்கு ஏளனம். மிரட்டி துரத்துவதற்காக, தன் பலத்தைக் காட்ட, அந்தத் தெருவிலிருக்கும் ஒரே 'காஸ் லைட்டை' (Gas Light) இரண்டாக வளைக்கிறார்.

இலாவகமாக அவன் முதுகின் மேல் பாய்ந்து அந்த ரவுடித் தலைவனின் தலையை விளக்குக்குள்ளே மாட்டி விடுகிறார். அது எரிவதற்குத் தேவையான அந்த கேஸையும் (Gas) திருப்பி விடுகிறார். அது மனிதர்களுக்கு விஷத்தைப் போல. அவன் சாய்ந்து விடுகிறான், விளக்கினுள்ளே தலையோடு. டாக்டரைப் போல அவன் நாடியை பரிசோதிக்கிறார். மேலும் கொஞ்சம் காஸை (Gas) திருப்புகிறார். அவன் நினைவற்றுக் கிடக்கிறான். சூரப்புலியான பொலிஸ்காரர்கள் அவனைத் தூக்கிச் செல்கிறார்கள். அந்த பீதி நிறைந்த தெருவில் சாப்ளினின் பெயரும், மதிப்பும், கௌரவமும் திடீரென்று உயர்கின்றன. இப்பொழுது அவர் அந்தத் தெருவின் ஹீரோ!


அந்தத் தெருவில் ஒரு பெண், பன்றிக் கறித்துண்டை திருடிக்கொண்டு ஓடுகிறாள். பொலிஸ்காரரான சாப்ளின் அவள் வீட்டுக்குள் நுழைகிறார். அங்கு அவளைச் சூழ்ந்து கொண்டிருக்கும் ஏழ்மையைக் கவனித்த பொழுது மனம் உருகுகிறார். வெளியே வந்து அதே கடையிலிருந்து இவரே காய்க்கறிகளைத் திருடி அவளுக்குக் கொடுக்கிறார்! இதை நம்ப முடியாமல் திகைக்கிறாள் அந்தப் பெண். ஏழைப் பங்காளன் என்ற பெயர் இவரை மேலும் உயர்த்துகிறது. நல்லவனாக மாறி உண்டியலைத் திருடிய அதே



இடத்திற்குச் சென்று பிரார்த்தனைகள் செய்கிறார். அங்கு 'ஆர்கன்' வாத்தியத்தை வாசிக்கும் பெண் இவருக்குக் காதலியாகிறாள். அராஜகம் நிறைந்த அந்தத் தெருவில் இப்பொழுது அமைதி தாண்டவம் ஆடுகிறது. "ஈஸி ஸ்ட்ரீட்" வசூலைக் குவித்தது மட்டும் அல்லாமல் சாப்ளினின் படைப்புகள் செல்லவிருக்கும் திசையையும் காட்டியது. சிரிப்பிற்குப் பின்னால் கண்ணீர், இவை இரண்டிற்கும் பின்னால் மனித வாழ்க்கை. இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம், அவர் படங்கள் வெறும் பொழுதுபோக்குக் கருவிகளாக மட்டுமல்லாமல் கருத்தையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் காவியங்களாக அமைந்தன. இது அன்று முதல் இன்றுவரை எந்த நகைச்சுவை நடிகனும் செய்யாத ஒரு சாதனை! சாப்ளினின் படைப்புகளுக்கு நிரந்தரமான புகழொளி 90 வருடங்களுக்குப் பிறகும் சுடர் விட்டுப் பிரகாசிப்பதற்கு முக்கிய காரணம் இவைகள் தான்.

(இவருடைய படங்களின் தாக்கத்தினால் தமிழில் அர்த்தமுள்ள சிந்திக்க வைக்கும் நகைச்சுவையைப் படைத்தார் என்.எஸ். கிருஷ்ணன். ஆனால் அவருடைய படங்களெல்லாம் தமிழில் இருந்ததினால் விந்திய மலைக்கு அப்பால் செல்ல முடியவில்லை. ஆங்கிலப் படங்களுக்குள்ள பலம் யாதெனில் உலகம் முழுவதும் அவை செல்லக்கூடியவை.)

மியூச்சுவல் நிறுவனத்துடன் சாப்ளின் அவர்களுக்காக எடுக்கவேண்டிய மீதி மூன்று படங்களில் அமரத்துவம்



பெற்றது. "தி இமிக்ரண்ட்" (The Immigrant) (இமிக்ரெண்ட் என்றால் தாய் நாட்டை விட்டு மற்றொரு நாட்டிற்கு வாழச் செல்பவன்.)

(தொடரும்)

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

24



## இராணி மஹம் அனகா

**மஹம்** அனகாவின் வேண்டுகோளை என்றுமே நிராகரிக்காத அக்பர் மன்னர் உடனடியாகச் சம்மதம் தெரிவித்தார். இதன்படி வங்க தேசத்திற்கு அனுப்பும் படைகளுக்கு ஆதம்கானை தலைமை ஏற்றுச் செல்ல உத்தரவிடப்பட்டது.

ஆதம்கான் உண்மையில் மனித உருவில் வெளிவந்த ஓர் ஓநாய் என்றே அப்போது காபூல் வாசிகள் பேசிக்கொண்டார்கள்.

அக்பர் மன்னர் வட இந்தியாவினை ஆட்சி செய்தபோது காபூலில் மது, மாது, இசை ஆகிய மூன்று விடயங்களுமே ஆதம்கானின் முக்கிய பொழுது போக்குகளாகக் காணப்பட்டன.

1561ஆம் ஆண்டில் அக்பர் மன்னரினால் ஆதம்கான் தலைமையில் அனுப்பப்பட்ட படை பெரும் சமரின்பின் வங்க தேசத்தினைக் கைப்பற்றியது. ஏற்கனவே ஒழுங்காக அக்பர் மன்னரின் கீழ் நிர்வாகம் நடாத்திவந்த பாஸ் பகதூர் தன்னைத்தானே சுல்தானாக அறிவித்துக் கொண்டமை அக்பரை ஆத்திரமுறச் செய்திருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்ட ஆதம்கான் கிழக்கிந்தியாவினைக் கைப்பற்றியது மட்டுமில்லாமல் தனது சொந்த வேட்டையினையும் நடாத்த ஆரம்பித்தான். அக்பரின் படைகள் வங்க தேசத்தினை முற்றுகையிட ஆரம்பித்தபோது ஆதம்கான், பகதூரின் அரண்மனையின் அந்தப்புரத்தினையே நோக்கிச் சென்றான்.

முதலில், தான் போரில் தோல்வி அடைந்தால் தனது மனைவியாகிய ரூப்மதி உட்பட அனைத்து அந்தப்புர அழகிகளையும் உடனடியாகவே கொன்றுவிடும்படி பகதூர் தனது வீரர்களுக்குக் கட்டளை இட்டிருந்தார்.

இந்தக் கட்டளைக்கு ஏற்ப அந்தப்புரத்தினுள் நுழைந்த வீரர்கள் சகட்டு மேனிக்கு வேட்டையாடத் தொடங்கினர். இதில் அங்கு தங்கியிருந்த அனைத்துப் பெண்களுமே மிக மோசமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சமரின் போது அரண்மனையில் ஒளிந்திருந்த ரூப்மதி வீரர்களினால் பிடிக்கப்பட்டு ஆதம்கானின் உத்தரவுப்படி அவனின் முன்னால் நிறுத்தப்பட்டாள். ஏற்கனவே ஆதம்கானைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ரூப்மதி தான் தயாராக வைத்திருந்த விஷத்தினை அவனுக்கு முன்னாலேயே



உட்கொண்டாள்.

ரூப்மதி கொண்டுவரப்படுகின்றாள் எனக் காத்திருந்த ஆதம்கான் அவளைக் கட்டித் தழுவ முற்பட்டபோது இச் சம்பவம் நிகழ்ந்தது. இதனால் சினம் கொண்ட ஆதம்கான் ரூப்மதியின் உடலினை அரண்மனையின் ஒரு மையத்தில் போட்டுவிட்டது மட்டுமன்றி, ஏனைய வீரர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என உத்தரவிட்டான்.

மறுபுறம், வங்க தேசம் கைப்பற்றப்பட்ட செய்தி அக்பர் மன்னருக்கு தெரிவிக்கப்பட்ட அதே நேரம், ஆதம்கானின் அடாவடித்தனங்கள் அவருக்கு முற்றாக மறைக்கப்பட்டிருந்தன.

வங்கப் போர் சில நாட்களிலேயே முடிவடைந்துவிட்டது. ஆனால் அதன் பின் விளைவுகளோ படுபயங்கரமானவை. வெற்றி சூடிய ஆதம்கானின் படைகள் வங்க நகரைச் சூறையாடினார்கள். குழந்தைகள், பெண்கள், வயதானவர்கள் என்ற வேறுபாடின்றி பலர் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.

இந்த விடயங்கள் அனைத்தும் மிகப் பிந்தியே மன்னர் அக்பருக்குத் தெரியவந்தது. கடும் கோபமடைந்த அக்பர் மன்னர் உடனடியாக டில்லியில் இருந்து வங்க தேசம் சென்றார்.

அக்பர் மன்னரைப் பின் தொடர்ந்த மஹம் அனகா எப்படியாவது தனது மகன் ஆதம்கானைக் காப்பாற்றவே போராடினாள்.

ஆனால் அவளை தன் முன்னால் வரவழைத்த அக்பர் மன்னர், அவளது மகன் செய்த அனைத்துப் படுகொலைகளையும் அடாவடித்தனங்களையும் நேரடியாக காண்பித்தார்.

அனைத்தையும் கேட்டு இடிந்துபோன அவள், தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று, உண்ண ஆகாரம் இன்றி முடங்கிப் போனாள். சரியாக ஆறு வாரங்களின் பின் உயிர் பிரிந்த நிலையில் அவளது உடல் மீட்கப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

(இரகசியங்கள் தொடரும்...)

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## மரணத்தின் விளிம்பில் திலீபன்! முதலமைச்சர் பதவி பிரபாகரனுக்கு?

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் திலீபன். இலங்கை வரலாற்றிலேயே அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணாவிரதம் மேற்கொண்டு மரணித்த முதல் நபர் திலீபன்தானென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், உடலில் நீர்த்தன்மை வற்றி, வேதனை தாங்க முடியாமல் தண்ணீர் கேட்டுத் திலீபன் முனகியபோது நீரைக் கொடுத்திருந்தால், திலீபனைக் காப்பாற்றியிருக்க முடியும். திலீபனை மரணிக்க வைப்பதன் மூலம்தான் அப்பாவித் தமிழ் மக்களின் இந்திய எதிர்ப்பு உணர்வலைகளை உயிர்ப்பிக்க முடியுமென்பது புலிகளின் திட்டம். திலீபனின் இயற்பெயர் பார்த்தீபன். தந்தையின் பெயர் இராசையா. அவரை அமிர்தலிங்கம் என்றும் அழைப்பதுண்டு. மகன் குற்றுயிராகக் கிடந்து அவஸ்தைப் படுவதை அருகேயிருந்து பார்த்துச் சகிக்க முடியாமல் அழுது குளறிய இராசையாவைப் புலி இயக்க உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.




1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினைந்தாம் திகதி காலை 9.30 மணிக்கு திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இரண்டு நாட்கள் கழித்து 17ஆம் திகதி சுபாஷாந்தினி இராஜசுந்தரம் என்ற பெயர் கொண்ட ஆசிரியை, திலீபனுக்கு ஆதரவாக அதே மேடையில் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். மறுநாள் வல்வெட்டித்துறைச் சந்தியில் மேடை அமைத்து ஐந்து தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். இதேபோன்று சாவகச்சேரி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் சாகும்வரையிலான உண்ணாவிரதங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக யாழ்ப்பாணப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இதற்கிடையில் இந்தியப் படைக்கு எதிராக ஹர்த்தால்களைப் புலிகள் இயக்கம் ஒழுங்கு செய்தது. பாடசாலைகள், கடைகள் என்பவற்றை மூடுமாறும் அவ்வியக்கம் எச்சரிக்கை விடுத்தது. திலீபனின் வர்ணப் புகைப்படங்கள் தாங்கிய சுவரொட்டிகளைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணமெங்கும் ஒட்டியது. ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் கிராமம் கிராமமாகச் சென்ற புலி இயக்க உறுப்பினர்கள், திலீபனின் உண்ணாவிரதம் பற்றி பிரசாரம் செய்ததோடு, இந்திய அமைதிப் படை முகாம்களுக்கு முன்னால் மறியல் போராட்டங்களை நடாத்துமாறு கோரிக்கையும் விடுத்தனர். நல்லூரில் உண்ணாவிரதமிருந்த திலீபனைத் தவிர, ஏனைய இடங்களில் சாகும்வரையிலான உண்ணாவிரதங்களை ஆரம்பித்தவர்கள் ஓரிரு தினங்களில் அவற்றைக் கைவிட்டனர். திலீபனுக்கு அருகே உண்ணாவிரதத்தை ஆரம்பித்த ஆசிரியை சுபாஷாந்தினி இராஜசுந்தரம் மறுநாளே உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி நீர்வேலியில் இரு பெண்களை முட்டிமோதிய இந்தியப் படை ஜீப் பொன்று தாக்குதலுக்குள்ளானது. அதில் பயணம் செய்த மூன்று இந்தியப் படை அதிகாரிகள் தாக்கப்பட்டதோடு, அவர்கள் கட்டிவைக்கப்பட்டனர். இந்தியப் படையின் உயரதிகாரியொருவர் தலையிட்டதையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதே தினம் யாழ்ப்பாணம், பண்ணையிலிருந்த பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த புலிகள், அங்கிருந்த உபகரணங்களை அடித்து நொறுக்கியதோடு, பொலிஸாரின் சீருடைகளையும் கிழித்துத் தாக்கினர். தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் நிலையம் இழுத்து மூடப்பட்டது. பொலிஸார் அருகேயிருந்த யாழ். கோட்டை இந்திய அமைதிப்படை முகாமில் தஞ்சமடைந்தனர்.

இதற்கிடையில் இந்திய அமைதிப் படை தலையிட்டு

(அரசியல் தொடர்)

திலீபனின் உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டுமென்றும், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யுமாறும் கோரி, இந்தியப் படையின் உயரதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங்கிடம் யாழ்ப்பாணத்திலுள்ள சில வெகுஜன அமைப்புகள் மகஜரொன்றைச் சமர்ப்பித்தன.

திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தியது. வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் இயன்றவரை விரைவாக அமைக்கப்பட வேண்டுமென்று புலிகள் இயக்கம் உட்பட அனைத்து தமிழீழக் குழுக்களும் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தின. இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படைத் தளபதி ஜெனரல் ஹர்கிரற் சிங், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுவரும் கொந்தளிப்பு நிலை குறித்துப் புதுடில்லியிலுள்ள இந்தியப் படை அதிகாரிகளுக்கு அறிவித்தார். புலிகள் இயக்கத் தலைமையுடன் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொந்தளிப்பு நிலையைத் தணிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். குறிப்பாகத் திலீபனின் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பிரபாகரனைச் சந்தித்துப் பேசி நிலைமைகளைக் கையாளுமாறு இந்திய மத்திய அரசின் அதிகாரிகள் கொழும்பில் அப்போது பணியாற்றிய இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித்தை வலியுறுத்தினர். பிரபாகரனின் கோரிக்கை இந்திய அதிகாரிகளைப் பெரும் சங்கடத்துக் குள்ளாக்கியது. வடக்கு - கிழக்கு நிர்வாக சபையை செயற்படுத்தி, தேவையான அதிகாரங்கள் அனைத்தையும் உடனடியாக வழங்குமாறு இந்தியாவைப் பிரபாகரன் வலியுறுத்தினார். இதற்குத் தேவையான அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களையும் விதிமுறைகளையும் மேற்கொள்ளும்வரை பொறுத்திருக்கப் பிரபாகரன் தயாராக இல்லை.

பிரபாகரனுடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தான் யாழ்ப்பாணம் வருவதாக தீக்ஷித் யாழ்ப்பாணத்திலுள்ள அமைதிப் படைத் தலைமைத்துவத்துக்கு அறிவித்தார். தீக்ஷித்துடன் பேசுவதற்குப் பிரபாகரன் வரமாட்டாரென்றும் அன்ரன் பாலசிங்கம், யோகி, மாத்தையா ஆகியோர் வருவரென்றும் புலிகள் தரப்பு அறிவித்தது. செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் வருமாறு தீக்ஷித்துக்குச் செய்தி அனுப்பப்பட்டது. பிரபாகரன் நேரடியாகப் பேசுவதற்கு வரத்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

தயாரில்லையென்றால், தான் யாழ்ப்பாணம் வருவதில் அர்த்தமில்லையென்று தீக்ஷித் பதிலளித்தார். தீக்ஷித்தின் நிர்ப்பந்தத்துக்குப் பிரபாகரன் இணங்கியதையடுத்து செப்டெம்பர் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியப் படை தலைமையகத்தில் சந்திப்பு இடம்பெற்றது. பிரபாகரனோடு அன்ரன் பாலசிங்கம், யோகி, மாத்தையா,

**பிரபாகரனைச் சந்திப்பதற்கு முன்னர் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்த பின்னரே தீக்ஷித் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். பிரபாகரன் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து தீக்ஷித், ஜெயவர்த்தனாவுக்கு விளங்கப்படுத்தினார். வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையின் தலைவராகவும், முதலமைச்சராகவும் பிரபாகரனை உடனடியாகவே நியமிக்கத் தயாரென்று ஜெயவர்த்தனா தெரிவித்தார். தேர்தல்கள் மூலம் மாகாண சபையும் மாகாண அமைச்சர்களும் நியமிக்கப்படும்வரை, பிரபாகரன் அப்பதவியை வகிக்கலாமென்றும் ஜெயவர்த் தனா தெரிவித்தார். வழமையான சட்டம், ஒழுங்கு தொடர்பான அதிகாரங்களையும் நிர்வாக அதிகாரங்களையும் வழங்குவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா உறுதியளித்தார்.**

லோரன்ஸ் திலகர் உட்பட வேறு சிலரும் கலந்து கொண்டனர்.

பிரபாகரனைச் சந்திப்பதற்கு முன்னர் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்த பின்னரே தீக்ஷித் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். பிரபாகரன் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து தீக்ஷித், ஜெயவர்த்தனாவுக்கு விளங்கப்படுத்தினார். வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையின் தலைவராகவும், முதலமைச்சராகவும் பிரபாகரனை உடனடியாகவே நியமிக்கத் தயாரென்று ஜெயவர்த்தனா தெரிவித்தார். தேர்தல்கள் மூலம் மாகாண சபையும் மாகாண அமைச்சர்களும் நியமிக்கப்படும்வரை, பிரபாகரன் அப்பதவியை வகிக்கலாமென்றும் ஜெயவர்த்தனா தெரிவித்தார். வழமையான சட்டம், ஒழுங்கு தொடர்பான அதிகாரங்களையும் நிர்வாக அதிகாரங்களையும் வழங்குவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா உறுதியளித்தார். நிதி சம்பந்தப்பட்ட சில அதிகாரங்கள் வழங்கப்படுமென்றும் அவர் சொன்னார். பிரபாகரன் எழுப்பக்கூடிய ஏனைய பிரச்சினைகளைப் பரஸ்பரம் கலந்து பேசி பின்னர் முடிவெடுக்கலாமென்றும் அவர் சொன்னார். ஒப்பந்தத்துக்குச் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு இருப்பதால் பிரபாகரனின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற முடியாதென்றும் அவர் கூறினார்.

(தொடர்ந்து வரும்....)




நிலைமை அறிய சந்துநாயர் வீட்டுக்கு போகிறார் ஸ்ரீதேவி. பிரபாகரனின் உருவில் இருந்த கோவிந்தன் முற்றத்தில் கால் வைக்கிறான். அவனிடம் ஒரு பதற்றம் தெரிகிறது. சாப்பிடும் தோரணையில் பிரபாகரனின் வீட்டுக்கு குமாரை அழைத்துச் செல்கிறான். இருவரும் பேசிக் கொண்டே போகிறார்கள்.

"இந்தப் பக்கமே நான் அதைக் கொண்டுவரப் போறதில்லை."

"அப்படின்னா அது ரொம்பவும் பத்திரமான இடத்துல இருக்கு. அதுல எதுவும் சந்தேகம் இல்லையே?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முற்படும்போதுதான் சற்றுத் தொலைவில் யாரோ நடந்து வருவதுபோல் தோன்றியது. நிலா வெளிச்சத்தில் அது ஒரு பெண் உருவம் என்பதும் தெரிந்தது.

"யாரு... ஸ்ரீதேவிதானே?" குமார் கேட்டார்?

அவள், அவருக்கு அருகில் வந்தாள்.

"எங்கே இந்தப் பக்கம்?" - அவள் கேட்டாள்.

"பிரபாகரனோட வீட்டுக்குத்தான்!" - குமார் பதிலளித்தார்.

"நீங்க எங்க வேணும்னாலும் போங்க. முதல்ல அப்படியே பின்னுக்கு வாங்க சீக்கிரமா!" அவள், அவரது தோளைப் பிடித்து இழுத்து இடது புறமாக நிற்க வைத்தாள்.

அப்போதுதான் குமாருக்குப் புரிந்தது, தான் எப்படிப்பட்ட இடத்தில், பாழுங்கிணற்றின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோம் என்பது. நல்லவேளை, முன்னோக்கி இன்னும் ஓர் எட்டு எடுத்து வைத்தால் அது நிச்சயம் கிணற்றுக்குள்தான் என்பதில் அவருக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை. சட்டென்று அவர் திரும்பிப் பார்த்தபோது பிரபாகரனையும் அங்கு காணவில்லை.

"பிரபாகரா... எங்க போயிட்ட?" - குமார்.

பக்கத்தில் எங்கும் பிரபாகரன் இருப்பதாகத் தெரியவில்லை.

**எழுதுவது சிவன்**

"உங்ககூட பிரபாகரன் இருந்தாரா என்ன?" - அவள் கேட்டாள்.

"ஆமாம். அவன்தான் என்னை வலுக்கட்டாயமா கூட்டிட்டு வந்தான்".

"அப்படின்னா நாம நேரா அவர் வீட்டுக்கே போயிடலாம் வாங்க. என்னைப் பார்த்ததும் இடத்தைக் காலி பண்ணிட்டாரோ என்னவோ?"

ஸ்ரீதேவியைப் பார்த்து அவன் ஏன் சொல்லாமல், கொள்ளாமல் நழுவினான் என்பது குமாருக்குப் புரியவே இல்லை.

இருவரும் பிரபாகரனின் வீட்டை அடைந்தனர். வீட்டு வராந்தாவில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வெளிச்சம் எட்ட முடியாத மற்றப் பகுதிகளில் இருள் அப்பிக் கிடந்தது.

பிரபாகரனின் அம்மா நல்ல தூக்கத்தில் இருக்கிறார் என்று தோன்றியது.

"நாம் திரும்பிப் போய் விடலாம்". - குமார் கூறினார்.

"கொஞ்சம் பொறுங்க. நாம வருவோம்னு அவர் இதுவரைக்கும் காத்திருக்கலாம். எதுக்கும் ஒரு தடவை குரல் கொடுத்துப் பார்ப்போம்". - ஸ்ரீதேவி சொன்னாள்.



குமார், பிரபாகரனின் அம்மாவை அழைத்தார்.

முதல் தடவைக் குரல் கொடுத்தபோதே "இதோ வர்றேன்!" என்று பதில் குரல் வந்தது. சற்று நேரத்துக்குக்குள் ஏற்றிய விளக்குடன் அவர் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

"யாரு திருமேனியா? கூட இருக்கிறது யார்?" பிரபாகரனின் அம்மா கேட்டார்.

"ஓ... உங்களுக்குத் தெரியாது இல்லையா? இவங்க என் கூட காலேஜில வேலை செய்யுறாங்க. நம்ம ஊரைப் பார்க்கணும்னு சொன்னதால கூட்டிட்டு வந்தேன்".

"இந்த ராத்திரி வேளையிலயா?" - அந்த அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"நாங்க இவ்வளவு நேரமா பிரபாகரனுக்காகத்தான் காத்திருந்தோம்".

"எங்க..., அவனைக் காணோமே?"

"இன்னும் வீட்டுக்கு வரலையா? ஒன்னாத்தான் கிளம்பி வந்தோம்".

"என்ன பிள்ளையோ? எதும் சாப்பிடாமல் நேத்துராத்திரி இங்கேயிருந்து போனவன்தான். அதுக்குப் பிறகு இது வரைக்கும் என் கண்ணுக்குத் தட்டுப்படவே இல்லை".

"நிஜமாவா சொல்றீங்க? எங்களுக்காக நீங்க சமையல் செஞ்சு வைச்சு, காத்திட்டிருப்பிங்கன்னு தான் அவன் சொன்னான்".

"சமையல் பண்ணி வச்சிருக்கிறது வாஸ்தவம்தான். ஆனா, நான் எங்கே அவனைப் பார்த்தேன்?"

"இதென்ன மாயம், அவன் அதுக்குள்ள எங்கதான் போயிருப்பான்?" - குமார் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"இப்பெல்லாம் அவன் அந்தக் குட்டப்பன் கூடவே சதா சுத்திக்கிட்டிருக்கான். அவன் ரொம்பவும் மோசமானவன், அது தெரியுமில்லை உங்களுக்கு?"

"தெரியும்!"

"அதனால அவன் வீட்டுக்குக்கூட சரியான நேரத்துக்கு வந்து சாப்பிடுகிறதே இல்லை".

குமாரும், ஸ்ரீதேவியும் வராந்தாவில் உட்கார்ந்தார்கள்.

எப்படியும் பிரபாகரன் வந்து விடுவான் என்று நினைத்தார் குமார்.

"அப்போ நான் சாப்பாடு பரிமாறட்டுமா? ஆறிப்போயிருக்கும், வேணும்னா சூடு பண்ணிடுறேன்".

"இந்த நேரத்துக்கு மேல அதெல்லாம் வேண்டாம். நாங்க கிளம்புறோம். அவன் வந்தா, நாங்க விசாரிச்சதா சொல்லுங்க" - குமார் எழுந்தார்.

அம்மா 'சரி' என்று தலையாட்டினார்.

இருவரும் எழுந்து தெரு வாசற்படி கடந்தனர்.

'எதுக்காக அவன் இப்படியெல்லாம் கண்ணாமூச்சி விளையாடுறான்? ஒண்ணும் புரியலையே?' குமார் தனக்குத்தானே பேசிக்கொள்வது போல் கேட்டார்.

(வாசனை வீசும்....)

**மனதுக்கு நிம்மதி**

# தினமும் உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

"**சே**..! என்ன வாழ்க்கை இது! காலையில் எழுந்திருக்க வேண்டியது, சமைக்க வேண்டியது, ஸ்கூல் போற பிள்ளைகளை ரெடி பண்ணவேண்டியது, அரக்கப் பரக்க அள்ளிப் போட்டுக் கொண்டு ஆபீஸ் ஓடவேண்டியது, அலுத்துச்சலித்து சாயந்தரம் வரவேண்டியது, ராத்திரியானா டி.வி. சீரியல் பார்க்கவேண்டியது, அப்பாடான்னு படுத்துத் தூங்கவேண்டியது... மறுநாள் காலையில் எழுந்ததும் திரும்பவும் முதல் நாள் நடந்த மாதிரியான அதே காரியங்கள்... எந்த மாற்றமுமில்லாமல் செக்குமாடு போல வாழ்க்கை தினம் தினம் ஒரே மாதிரி போய்க்கிட்டிருக்கிறது கடுப்பா இருக்கே!" - இப்படி புலம்பாத இல்லத்தரசிகளே இருக்கமுடியாது.


அவர்கள் புலம்பலில் நியாயம் இருக்கிறது. ஆனால் அதற்காக, ஒரேயடியாக நமது அன்றாட செயல்களை விட்டு ஒதுங்கியிருக்கவும் முடியாது. பின் என்னதான் செய்யலாம்? தினசரி வாழ்க்கையில் சின்னச் சின்ன மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் ஒரு புத்துணர்ச்சியை நம்மால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பத்தோடு ஒவ்வொரு இடத்துக்குச் சென்றுவருவது என்று தீர்மானித்துக்கொள்ளலாம். ஒரு ஞாயிற்றுக்கிழமையில் கடற்கரைக்குப் போனால், இன்னொரு ஞாயிற்றுக்கிழமையன்று நெருங்கின உறவினர் வீட்டுக்குப் போய் வரலாம். இன்னொரு வாரம் நண்பர் குடும்பத்துடன் கழிக்கலாம்.

இதெல்லாம் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது... ஆனால், நடைமுறைக்குச் சாத்தியப்படாது என்கிறீர்களா? இல்லை. சாத்தியமாகும். எதையுமே புதிதாக ஒன்றைச் செயல்படுத்த ஆரம்பிக்கும்போது அது சாத்தியமாகாது என்றுதான் தோன்றும். பிடிவாதமாகச் செய்வது என்று முடிவு கட்டி நாலு ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியே போய்ப் பாருங்கள். ஐந்தாவது வாரம் உங்களுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளாது!

எப்போதுமே இஸ்திரி செய்யப்பட்ட முழுக் கை வைத்த சட்டைதான் போடுவது, ராத்திரி ஒன்பது மணியானால் விளக்கை நிறுத்திவிட்டுத் தூங்கிவிடுவது... என்று என்னதான் அற்புதமான வழக்கமாக இருந்தாலும் சரி, அவை ஒரு சடங்காக மாறும்போது சலிப்புத் தட்டிவிடும்.

வாழ்க்கையை சுவாரஸ்யமானதாக ஆக்கிக்கொள்ள சின்னச் சின்ன மாறுதல்கள் நிச்சயம் தேவை. முழுக் கைச் சட்டையே போடுபவர் ஒரு மாறுதலுக்காக ஒரு நாள் டி-ஷர்ட் போட்டுப் பார்க்கட்டும்... ஒரு வகையான புத்துணர்வு கிடைப்பதை உணர்வார். என்னதான் இட்லி நல்ல உணவாக இருந்தாலும், வயிற்றுக்குக் கெடுதல் செய்யாத பொருளாகவே இருந்தாலும், அதையே தினம் தினம் காலை டிபனாகச் செய்துகொண்டு இருந்தால் வாழ்க்கையே வெறுத்துப் போய்விடாதா? பதிலாக, ஒரு நாள் கார்ன் ஃப்ளேக்ஸும் பப்பாளிப்பழமும் சாப்பிட்டுப் பாருங்கள். அன்று முழுக்க இனம் புரியாத ஓர் உற்சாகத்தில் மிதக்கிற மாதிரி உணர்வீர்கள்.



அதனால், என்னதான் நல்ல பழக்க வழக்கமாக இருந்தாலும் வாரத்துக்கு ஒரு முறை அல்லது மாதத்துக்கு ஒரு முறையாவது வேண்டுமென்றே அதை மீறிச் செயல்பட்டுப் பாருங்கள். அதற்காக மது அருந்ாதவர்களை மது அருந்துங்கள் என்றோ, புகை பிடிக்காதவர்கள் புகை பிடியுங்கள் என்றோ நான் சொல்ல வரவில்லை. அவையெல்லாம் அடிப்படை ஒழுக்கங்கள். பெரியவர்களை மதித்தல், பிறருக்கு உதவுதல் போன்ற அடிப்படை ஒழுங்குகளை மீறுவது என்பது டிராஃபிக் விதிமுறைகளை மீறுவது மாதிரி. விபத்தில்தான் கொண்டுவிடும்.

நான் சொல்வது அதையல்ல. நம் தினசரி செயல்பாடுகளை, பழக்க வழக்கங்களை அவ்வப்போது மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்கிறேன்.

விப்ரோ கம்ப்யூட்டர் நிறுவனத்தைப் பற்றிக் கேள்விப்படாதவர்களே இருக்கமுடியாது. விப்ரோ என்பது ஒரு வெற்றிக் கதை. இந்த வெற்றிக் கதையை எழுதிய அதன் தலைவர் அஜீம் பிரேம்ஜி, அண்மையில் அகமதாபாத்தில், 'இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் மானேஜ்மெண்ட்'டில் ஓர் உரை நிகழ்த்தினார்.

மாற்றங்களை நம்மால் தவிர்க்கவே முடியாது என்பதை அருமையான உதாரணங்களோடும், அவை எந்தெந்த ரூபத்தில் எல்லாம் வரும், அவற்றை எப்படி எதிர்கொண்டால் நம்மால் வாழ்க்கையில் வெற்றிகரமாக எதிர்நீச்சல் போட்டு ஜெயிக்க முடியும் என்பது பற்றியும் அவர் அன்று பேசிய பேச்சு, நிர்வாக இயல் படிக்கும் அத்தனை பேருக்கும் மிகச் சிறந்த விளக்கப் பாடமாக அமைந்து விட்டது.

மிகச் சாதாரண உத்தியோகத்தில் இருப்பவர்களும், குடும்பத் தலைவிகளும் கூட அவரது இந்த உரையில் இருந்து தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும்.

**இதோ, அவர் ஆற்றிய அந்த உரையின் சுருக்கம்...**

"உலகில் என்றுமே மாறாமல் இருக்கக்கூடிய ஒரே விஷயம் 'மாற்றம்' மட்டுமே! மாற்றங்களுக்கு ஏற்ப மனிதன் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும். 'நான் மாறமாட்டேன். இப்படியேதான் இருப்பேன்' என்றால் அவன் முன்னேறமாட்டான்.

மாற்றங்கள் நிகழும்போது அவற்றுக்கேற்ப தன்னையும் மாற்றிக் கொள்வது சிறந்தது. அதைவிட நாமே மாற்றங்களை உருவாக்குவது புத்திசாலித்தனமானது. அதுவாக உண்டாகும் மாற்றம், நாம் சற்று அசந்திருக்கும் நேரத்தில் நமது பின்மண்டையில் அடித்துவிட்டுப் போய்விடும். உங்களுக்கு லேசாக முதுகு வலிக்கும் போதே டாக்டரிடம் போய் சிகிச்சை எடுத்துக்கொண்டால் பிரச்சினை பெரிதாகாது. உங்கள் மோட்டார் பைக் லேசாக மக்கர் பண்ணும்போதே அதை சர்வீஸுக்கு விட்டால், அது உங்களை மிக அவசரமான நேரத்தில் பழிவாங்காது. அதுபோல, உங்கள் குடும்பத்தில் லேசாகப் பிரச்சினை எழும் என்று தெரிந்தாலே, அதை உடனே சரி செய்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். இல்லையென்றால், அது பெரியதொரு குடும்ப விரிசலில் கொண்டுபோய் விட்டுவிடும்!

அதைப் போலத்தான் வாழ்க்கையில் நிகழ்கிற மாற்றங்களும். அவற்றை எதிர்கொள்ளவும், அவற்றுக்கேற்ப நம்மை மாற்றிக்கொள்ளவும் நாம் தயாராக இருக்கவேண்டியது அவசியம்!"

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 181க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

தர்மிக்கா - தர்மதாஸ், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அனீஸா. எச். அமீன் 61/14, மீராபள்ளி வீதி, காத்தான்குடி - 06
2. மரியம் றொஸ்மின், 390A, செமனரிவத்த ரோட், தென்னக்கும்புர.
3. பாத்திமா நஹ்லா, இல. 278/1, பெலியத்த வீதி, யோனகபுர, டிக்வெல்ல.
4. கே. குசேலர், இ/எம்பி/பரி.யோவான் த.ம.வி, இறக்குவானை.
5. கே. எம். எஸ். ஆப்டீன், 36, போல்ஸ் வீதி, எம். சி. விடுதி, புத்தளம்.
6. இந்திராணி பத்மராஜன், 86/6, டன்பார் வீதி, ஹட்டன்.
7. வ. இளநிதி, இல. 5, பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
8. கே. பீ. எம். ஹுஸைன், 42, அல்பிரட் வீட்டுத் தோட்டம், கொழும்பு - 3
9. ஆர். தயானி, இல. 04, பிரதான வீதி, கலஹா.
10. எஸ். மிதுஷன், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு - 2, கல்முனை.

## குறுக்கெழுத்துப் போட்டி 183

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| ■ | 20 | 21 | 22 | 23 | ■ |
| 25 | ■ | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | ■ | ■ | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. அணுப் பரிசோதனையில் எதிர்ப்புகளை எதிர்நோக்கும் நாடொன்று.
5. பெண் (திரும்பியுள்ளது)
7. வாகனத்தை ஓட்டுபவர். (குழம்பியுள்ளது)
11. வீதி என்றும் கூறலாம்.
13. உணவு தயாரித்தல். (குழம்பியுள்ளது)
20. உறவு அல்லது தீவட்டி என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
27. மாதவன் நடித்த திரைப்படமொன்று.
31. முதுமை அல்லது வெண்மயிர் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
35. மணம் என்றும் கூறலாம்.

**மேலிருந்து கீழ்**

1. உடல் உறுப்பொன்று.
2. போதை தருவது (குழம்பியுள்ளது).
3. நிலவு (குழம்பியுள்ளது).
5. துறவி என்றும் கூறலாம்.
6. மங்கள, அமங்கள வைபவங்களில் முக்கிய இடம் பிடிப்பது (குழம்பியுள்ளது).
16. பல பொருட்களைக் குறிக்கும் (குழம்பியுள்ளது).
25. உணவு என்றும் பொருள்படும்.
30. பயிர்களைத் தாக்கும் உயிரினங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி 181 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச 1 | வீ 2 | ன் 3 | உ 4 | ■ | ணா 6 |
| ஸ் 7 | ம 8 | க 9 | ■ | தை 11 | வ் 12 |
| ணா 13 | ன் 14 | கா 15 | ■ | தி 17 | மா 18 |
| ன் 19 | ■ | த 21 | ரு 22 | ■ | ■ |
| ■ | செ 26 | ■ | சீ 28 | தெ 29 | வி 30 |
| லா 31 | ய் 32 | மை 33 | ■ | தி 35 | ஆ 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 29.08.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-183
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



**- வழங்குவது றாஹில்**

## காதல் செய்!

**நீ கண்களால்**
**தொடாது விட்டாலும் உன்**
**பசி உன்னை ஆளுகிறது.**
**ஒரு மன்னனாக**
**உன்னை நீ**
**அமுல்படுத்துகின்றாயா?**
**வண்ணனாக உன்னை**
**நீ ஒப்பனை**
**செய்கின்றாயா?**
**ஒரு நாளைக்கு நூறு**
**தடவை உடை**
**மாற்றுகின்றாயா?**
**காதல் உன்னை**
**வணங்குகிறது.**
**நீ காதலைத்**
**தொழுகிறாய்.**
**உன் இதயம்**
**ஆலயமாகியிருக்கிறது.**
**நீ விழியில்**
**விதைக்கிறாய், உன்**
**இதயத்தில் முளைக்கிறது**
**காதல்.**
**நீ கண்களில் கவிதை**
**எழுதுகிறாய், உன் மனதில்**
**கேட்கிறது பாடல்.**
**உன் கனவைப்**
**பூத்தூவி அழைக்கின்றாயா?**
**உன் எண்ணங்களுக்கு**
**நிலவை**
**அறிமுகமாக்குகின்றாயா?**
**காதல் உன் முகவரி**
**கைப்பற்றியிருக்கிறது.**
**ஒரு பூஞ்சிறை**
**கிடைத்திருக்கிறது**
**உனக்கு!**
**மௌனம் மிகச் சிறந்த**
**மொழி -**
**காதலிக்கும்போது.**
**எல்லையற்ற அர்த்தங்களால்**
**சூழப்படுகிறாய் நீ அப்போது.**
**காதல் மிகப் புனிதமான**
**வேதம்.**
**நீ காதல் வாசம் நுகரும்**
**போது உன்னைத்**
**தென்றலால் ஆசீர்வதிக்கிறார்**
**கடவுள்.**
**நீ காதல் பாஷை பேசும்**
**போது நூறு கம்பனுக்கு**
**இணையாகிறாய் நீ.**
**நீ அடிக்கடி சிரிக்கிறாய்.**
**அடிக்கடி உடைகிறாய்.**
**நீ அவ்வப்போது உன்னை**
**அடைகிறாய்.**
**உன் உயிரை நீ பார்க்க**
**வேண்டாமா?**
**உன் இதயத் துடிப்பை நீ**
**பதிவு செய்யக்கூடாதா?**
**இந்தப் பூமி பூக்கள்**
**சுமந்திருப்பது**
**காதலுக்காகத்தான்.**
**நீ காதலை வணங்கு!**
**உன் உயிரில்**
**நிலாக்கற்களால் ஆலயம்**
**உண்டாகும்.**
**நீ காதலை**
**வணங்கும்போது உன்**
**சொர்க்கம் ஆயிரம்**
**தாஜ்மஹால்களால்**
**நிறைகின்றது.**
**உனக்குப் பூக்களின்**
**வாழ்த்து வேண்டுமா?**
**விண்மீன்களின்**
**ஆசீர்வாதம் தேவையா?**
**காதல் செய்! காதல்**
**செய்!**

# அபிஷேகம்

**குளித்து** முடித்துத் தலையைத் துவட்டியபடியே திண்ணைச் சுவரில் தொங்கிய சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான் நல்லதம்பி.

நேரம் பதினொரு மணியைக் காட்டியது. இன்னும் அரை மணி நேரத்தில் முருகன் கோயில் மதிய பூஜை தொடங்கிவிடும்.

டவலை இடுப்பில் கட்டிக்கொண்டு ஈரத்துணியைப் பிழிந்து கொடியில் விரித்துப் போட்டவன் கால்களைத் தட்டிவிட்டு வீட்டினுள் நுழைந்தான்.

நாலு முழ வேட்டியைக் கட்டிக்கொண்டு டவலை ரெக்கில் விரித்துப் போட்டான்.

பிள்ளையார் படத்துக்குமுன் நின்று திருநீறிட்டுக் கொண்டான்.

மனைவி வடிவு எவர்சில்வர் செம்பில் ஊற்றி மூடிவைத்திருந்த பாலை எடுத்துக்கொண்டு முருகன் கோயிலை நோக்கி நடந்தான்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான நல்லதம்பி, சாதாரண தோட்டத் தொழிலாளி என்றாலும் முயற்சியினால் முன்னேறியவன்.

மது அருந்துதல், புகைபிடித்தல் போன்ற தீய பழக்கங்கள் எதுவுமே அவனிடம் கிடையாது.

மனைவியும் தானும் உழைத்த பணத்தில் சிறிது சிறிதாக மிச்சம் பிடித்து ஒரு பசுவை வாங்கினான். தோட்டத்தில் வேலை செய்ததோடு பாற் சபைக்குப் பால் விற்று வருமானத்தைப் பெருக்கினான்.

தன்னுடைய வருமானத்தைக் கொண்டு உயர் ரக பசுவொன்றை வாங்கினான். பால் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்தது.

அவனது முழு முயற்சிக்கும் வடிவு முதன்மையாக நின்றாள். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதிலிருந்து ஏனைய வேலைகளை வடிவு கவனித்துக்கொண்டாள்.

நல்லதம்பி தன் உயர்வோடு நின்றுவிடாமல் அக்கம் பக்கத்தவர்களையும், பசு வளர்ப்பிலீடுபடுமாறு உற்சாகப்படுத்தினான். அவனது அறிவுரையைக் கேட்டுப் பசு வளர்ப்பில் ஈடுபட முன்வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்தான்.

பசு வளர்ப்பிலீடுபட்டவர்களிடமிருந்து தானே பாலைச் சேகரித்துப் பாற் சபைக்கு எடுத்துச் செல்வான். ஒவ்வொருவரிடமிருந்தும் வாங்கும் பாலின் அளவை 'பாஸ்' புத்தகத்தில் பதிந்து உரியவரிடம் கொடுத்து விடுவான். மாதக் கடைசியில் கணக்குப் பார்த்து பணத்தைக் கொடுப்பான். பலரின் வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கும் நல்லதம்பியைத் தேடி பல பதவிகளும் வந்து சேர்ந்தன.

கோயில் கமிட்டித் தலைவர், பசு வளர்ப்போர் சங்கத் தலைவர் மரணாதாரக் கமிட்டித் தலைவர் எனப் பல பதவிகள் நல்லதம்பியை மகுடமிட்டன.

பால் சேகரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. எனவே காலை, மாலை இரு வேளைகளிலும் பால் சேகரித்து பாற் சபைக்குக் கொடுத்தான்.

நல்லதம்பியிடம் ஓரளவு சேமிப்பு இருந்தது. ஒருதொகைப் பணத்தை முதலீடு செய்து ஓர் ஆட்டோவை வாங்கினான். தற்போது அவனது பால் வியாபாரம் ஆட்டோவில் ஜாம்... ஜாம்... என்று நடக்கிறது.

இரவு நேரத்தில் பிரசவ வேதனைக்குள்ளாகும் தாய்மாரை இலசவமாக அழைத்துச் சென்று பக்கத்து வைத்தியசாலையில் சேர்ப்பான். இவ்வரிய சேவையை அனைவரும் பாராட்டினர்.

நல்லதம்பியின் இரண்டாவது பசு ஓர் கன்றை ஈன்றது. முதலாவதாகக் கறக்கும் பாலை, முருகன் கோயில் அபிஷேகத்துக்குக் கொடுக்க எண்ணியிருந்தான். எனவே தான் அந்தப் பாலை எடுத்துக்கொண்டு குறுக்குப் பாதை வழியாகக் கோயிலை நோக்கிச் சென்றான்.

ஆலயத்தை அண்மித்துக் கொண்டிருந்த அவனுக்குக் குழந்தைகள் வீரிட்டு அழுவது கேட்டது. ஓட்டு லயத்துப் பக்கமிருந்து வந்த அந்த அலறலைக் கேட்டவன் ஓட்டு லயத்தை நோக்கிச் சென்றான். அருகில் போகப் போக நல்லதம்பிக்கு விஷயம் புரிந்து விட்டது. சின்னவனின் இரட்டைக் குழந்தைகள் அலறுவதை அறிந்து நேரே சின்னவனின் வீட்டை நோக்கி விரைந்தான்.

பாவம் சின்னவன். நோயாளியுங் கூட. ஏற்கனவே இரண்டு பிள்ளைகளைக் கொடுத்த இறைவன், போதாக்குறைக்கு இம்முறை இரட்டைச் செல்வங்களைக் கொடுத்துவிட்டான்.

வீட்டினுள் நுழைந்த நல்லதம்பி கண்ட காட்சி அவனைப் புல்லரிக்கச் செய்து விட்டது. சின்னவனின் மனைவி பார்வதி ஒரு பிள்ளையையும், மாமியார் ஒரு பிள்ளையையும் வைத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனாலும் பிள்ளைகளின் அலறல் ஓய்ந்த பாடில்லை.

நல்லதம்பியைக் கண்ட பார்வதி "புள்ளைங்களுக்குப் பால்மா முடிஞ்சிப் போச்சி. வாங்கி வரப் போனவர இன்னுங் காணலியே" எனக் கண்ணீர் மல்கக் கூறினாள்.




பார்வதியிடமிருந்து பிள்ளையை வாங்கினான் நல்லதம்பி. செம்பிலுள்ள பாலைக் காய்ச்சி ஆற வைத்து சீனி கலந்து பிள்ளைகளுக்குக் கொடுக்கும்படி கூறினான்.

பார்வதி பம்பரமாகச் சுழன்றாள். பாலைக்காய்ச்சி ஆற வைத்து சீனி கலந்து பிள்ளைகளுக்கு கொடுக்கும்படி கூறினார். பார்வதி பம்பரமாகச் சுழன்றாள். பாழைலக் காய்ச்சி ஆறவைத்து சீனி கலந்து இரண்டு பால் போத்தல்களில் ஊற்றினாள். புறங்கையில் கொஞ்சம் பாலைப் பீய்ச்சினாள். சூடு அளவாயிருந்தது.

ஒரு போத்தலை மாமியாரிடம் கொடுத்தாள். நல்லதம்பியிடமிருந்து குழந்தையை வாங்கியவள் தானும் பாலைப் பருக்கினாள். பெரு மழை ஓய்ந்தது போல குழந்தைகளின் அலறல் ஓய்ந்தது.

குழந்தைகளைப் பார்த்தான் நல்லதம்பி. பால் வடியும் முகத்துடன் புன்னகைத்த அப்பாலகர்களைப் பார்த்து உச்சி குளிர்ந்து போனான்.

மறுநாளிலிருந்து தினமும் காலையில் வந்து ஒரு போத்தல் பாலைப் பெற்றுக் கொள்ளும்படி பார்வதியிடம் கூறியவன், செம்பை எடுத்துக்கொண்டு சின்னவனின் வீட்டிலிருந்து வெளியேறினான்.

அதேவேளை, முருகன் கோயில் காண்டா மணி 'டாண்... டாண்...' என ஒலித்து நல்லதம்பியை வாழ்த்தியது.

(யாவும் கற்பனை)

# காக்கைக் கூடு

**ஏதோ** கணிப்பீடு என்று வீட்டுக்கு வந்த அதிகாரிகள் அம்மாவின் அடையாள அட்டையைக் கேட்டபோதுதான் அவளது அறைக்குள் நுழைந்தேன்.

அம்மா இல்லாதபோது அவளது அறைக்குள் நான் நுழைந்ததில்லை. அதற்கு அவசியமும் ஏற்படவில்லை. ஆனால் இன்று பக்கத்து வீட்டு அக்காவின் பிரசவத்திற்கு துணையாகப் போன அம்மா ஆஸ்பத்திரியில் நின்றுவிட்டாள். அலுமாரிக்குள் இருந்த ஹேன்ட் பேக்கினுள் அம்மாவின் அடையாள அட்டையுடன் இதுவரை நான் கண்டிராத அப்பாவின் அடையாள அட்டையும் மற்றும் அப்பாவின் சில ஆவணங்களும் இருந்தன. வந்திருந்தவர்கள் கேட்ட தகவல்களை வழங்கிவிட்டு, அவர்களை அனுப்பிய கையோடு அப்பாவின் அடையாள அட்டையைப் பார்க்கிறேன். எனக்கு ஏழு வயதாகும் போது, எட்டு வருடங்களுக்கு முன் அப்பா நெஞ்சு வலியால் இறந்துபோனார். உயரமாக அழகாக இருப்பார். எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கியவர். அப்பாவின் எந்தச் சாயலும் என்னில் இல்லாதது எனக்குப் பெருங்குறைதான். அம்மாவும் நல்ல வடிவாக இருப்பாள். ஒரு மகன் என்ற வட்டம் தாண்டி வெளியில் நின்று பார்க்கும் பொழுது கூட அம்மாவின் உடலிலும் உள்ளத்திலும் ஒரு குறையும் சொல்ல முடியாது. அப்பா இறந்து எட்டு வருடங்கள் ஆனபின்னும் அம்மா இன்னும் மறுமணம் செய்யவில்லை. அப்பாவின் அடையாள அட்டைப் படம் சரிதான். ஆனால் அப்பாவின் பெயர் குமார் என்றிருந்தது. ஆனால் என் முதலெழுத்து எஸ். அதன்படி என் அப்பாவின் பெயர் சங்கரன். அப்பாவின் கூப்பிடும் பெயர் குமார் என்று அம்மா சொல்லி இருக்கிறாள். ஆனால் அடையாள அட்டை உட்பட அப்பாவின் அனைத்து ஆவணங்களிலும் உண்மைப் பெயர் குமார் என்றும் வேறு பெயர்கள் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனது சிந்தனைக்கெட்டியவரை எனக்கு ஒன்று புரிந்தது. நான் அப்பாவுக்கு... பிறந்தவனில்லை... ஆனால் அப்பாவோ, அம்மாவோ இதுவரை என்னிடம் அப்படி நடந்து கொள்ளவே இல்லையே... எனக்குத் தெரியக்கூடாது என்பதற்காகத்தான் சொந்த ஊர் உறவுகளை விட்டு அம்மா ஒதுங்கினாளா அல்லது ஒதுக்கப்பட்டாளா...? அப்பாவின் குடும்பத்தில் அவர்தான் மூத்தவர். சித்தப்பாவிற்கு குழந்தை பிறந்த போது 'முதல் வாரிசு' என்று பாட்டி


தம்பன் செல்வி எம்.சி. ஜுவைரியா
(தம்பாலை)


கொஞ்சினாளே. நானிருக்கும் போது சித்தப்பா மகன் எப்படி முதல் வாரிசாவான்? ஆக... நான் அப்பாவின் பிள்ளை இல்லை. சந்தேகம் என்பது மனதில் வந்து விட்டால் வண்டுபோல அரித்துக்கொண்டே இருக்கும். எதேச்சையான சம்பவங்கள் கூட சாட்சிகளாகிவிடும். அம்மா வருவது போல சத்தம் கேட்கிறது. எடுத்ததை இருந்தபடியே வைத்து விட்டு வெளியேறுகிறேன். சந்தேகம் என் மனதில் சீழ்கட்டியிருந்தது. உடைய வேண்டும் அல்லது உடைக்கவேண்டும். அம்மாவிடமே கேட்டுவிடலாமா...? பர்வதற்குத் தேர் தந்த பாரியிடம், தேர் எங்கே வாங்கியது எனக் கேட்க முடியுமா..? 'ஓம்' என்று சொல்லிவிட்டால்... இல்லையென மறுக்கவும் முடியாது. களங்கமே தெரியாத இவளா இப்படி...? அம்மா இப்படிப்பட்டவள் என்று தெரிந்ததால்தானா அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்தது....? அம்மாவின் தோழி சுசீலா அன்ட்டி என்னுடன் நல்ல இரக்கம். அவவிடம் கேட்கலாம். கேட்டேன். உண்மைதான்... நான் அப்பாவின் மகனல்ல... சுசீலா அன்ட்டி சொன்ன விசயங்களைக் கேட்டு நான் கூனிக் குறுகிப்போனேன். என் அம்மாவுக்கு நன்றி சொல்ல வழி தேடுவேனா..., இல்லை மன்னிப்புக் கேட்க மொழி தேடுவேனா...

அம்மாவும் அப்பாவும் திருமணம் முடித்து பல வருடங்களாகியும் குழந்தை கிடைக்கவில்லையாம். தாய், தந்தையை இழந்து உறவினர்களிடம் வளர்ந்து வந்த என்னை, அம்மாவும் அப்பாவும் எடுத்து வந்தார்களாம். வளர்த்த பிள்ளை என்று யாரும் சொல்ல முடியாதளவு, ஏன் நானே நினைக்காதளவு வளர்த்தார்களாம்... அப்பா சாகும்போது, "வளர்த்த மகன் என்று மகனுக்குத் தெரியக்கூடாது. அதனால் நீ வேறு ஊருக்குப் போய் அவனை வளர்த்தெடு..." என்று சொன்னாராம்.

நான் இது பற்றி விசாரித்ததை அம்மாவிடம் சொல்ல வேண்டாம் என்ற சத்தியம் எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்கிறேன். அம்மா என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் பார்வையை நேர்கொள்ள முடியாமல் அவள் மடியில் புதைந்து கொள்கிறேன்.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

சமத்துவம் பேசுகின்ற எத்தனையோ பொதுநலவாதிகளும், எழுத்தாற்றல் கொண்டோரும் உலகெல்லாம் பரவிக்கிடக்கிறார்கள். ஆனால் சமத்துவம் என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளும் வரையில் 'சமத்துவம்' என்ற சொல்லும் கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதற்கு சில சான்றோரின் ஆதாரபூர்வமான சிந்தனைகள் விடை பகரக்கூடியதாகவுள்ளன. உதாரணமாக, எண்ணெயும், தண்ணீரும் என்றுமே ஒன்றுபடுவதில்லை. ஏனெனில் இரண்டும் திரவப் பொருளாயிருந்தபோதிலும், இரண்டும் இருவேறு இயல்பைக் கொண்டவை. அதுபோல், ஒவ்வொரு மனிதனும் தகுதிக்கேற்ப இயல்பைக் கொண்டுள்ளமை வெளிப்படையானது. எனவேதான் இப்படிக் கூறிவைத்தார் போலும்.

**"இனம் போன்று இனமல்லாதார் கேண்மை மகளிர்**
**மனம் போல வேறு படும்."**


*குறள் : 822*

மகளிர் இனத்தார் போல வெளியில் தோற்றமளித்தாலும் மனத்தளவில் இனமில்லாதவரின் கேண்மையானது விலை மகளிர் மனம் போல அடிக்கடி வேறுபடும்.

## விருந்தோ கொடுத்தாள்?

**கண்கள்** இரண்டும் விக்கிரமனின் மனதின் ஆழத்தை எடை போட்டுக் கொண்டிருந்த பொழுது, மரகதவல்லியின் தோளைத் தொட்டாள் அங்கயற்கண்ணி. தொட்ட மாத்திரத்தில் அவள் கனவுலகிலிருந்து மீண்டவள் போல் ஒருமுறை திடுக்குற்றாள். ஆயினும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாத போதும், அவ்விடத்தை விட்டகல மனமில்லாமல் நின்ற போது, வந்த விருந்தினரை உபசரிக்கக்கூட முடியாத அளவுக்கு குழந்தையாக இருக்கிறாள் எனது மகள் என்று பெரியவர் சொன்னதும், மெதுவாக அங்கிருந்து செல்ல முற்பட்ட மரகதவல்லி, மெதுவாக அருகில் நின்ற அங்கயற்கண்ணியின் கையைப்பற்றி இழுத்தாள். அவளின் நோக்கத்தை அறிந்த அங்கயற்கண்ணியும் தொடரவே, இருவரும் வரவேற்பு மண்டபத்தை விட்டகன்றனர்.

அறையைச் சென்றடைந்த இருவரும் தட்டொன்றில் பழங்களையும், பருகுவதற்காக பானங்களையும் எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரானபோது, அங்கயற்கண்ணி 'ஏது உபசரிப்பு அமர்க்களமாக இருக்கிறதே! வந்திருப்பவர் முன்பு அறிமுகமா?' என்று கேட்டதும், ஒருகணம் விக்கித்து நின்ற மரகதவல்லி, இல்லை என்பது போல் தலையை அசைத்தாள். ஆனாலும் அவள் முகத்தில் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் வெட்கப்படலங்களைக் கண்டதும் "மனைக்கு வந்தவர்களை இதுவரை நீங்கள் உபசரித்ததே இல்லையா?" என்று



### தருவது கற்பகன்

அங்கயற்கண்ணி பேச்சைத் தொடங்கியதும், மரகதவல்லி ஒருமுறை அவளைத் திரும்பிப் பார்த்தாள். ஆயினும் அவள் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பதை யோசித்தாளோ என்னவோ, தொடர்ந்து நடக்கத் தொடங்கினாள். அங்கயற்கண்ணியோ விட்டபாடில்லை. "ஏன் நான் கேட்பது புரியவில்லையா?" என்றாள். "இதுவரை இல்லை" என்றாள் மரகதவல்லி. "அப்படி என்றால் இன்று மட்டும் இவ்வளவு உற்சாகமாக இருக்கிறீர்களே?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும் துணுக்குற்றாள் மரகதவல்லி. எதிர்பாராத கேள்வி என்பதால் மனதுக்குள் மறைத்து வைத்திருந்த ரகசியம் வெளிப்பட்டது போல் ஒரு அச்சம் தோன்றியபோதும், அதைச் சமாளிக்க ஒரு சந்தர்ப்பம் தேடவேண்டும் போலிருந்தது. எதைச் சொல்லலாம் என்று நினைத்தவளுக்கு உடனடியாகக் கிடைத்தது. "நீங்கள் துணைக்கிருப்பதால் தான்" என்றாள் மரகதவல்லி. "நான் கூட விருந்தாளிதானே?" என்றாள் அங்கயற்கண்ணி. இதைக் கேட்டதும் என்ன செய்வதென்று விழித்தாள் மரகதவல்லி. என்ன சொல்லித் தப்பித்துக் கொள்வது என்று மூளையைக் குடைந்தாள். சடுதியாக எதுவும் கிடைக்கவில்லை. மௌனம் குடிகொண்டுவிட்டது கண்டு, அங்கயற்கண்ணி அழைத்தாள் வெகுநேரமாகிவிட்டதே! எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்றதும் இருவரும் வரவேற்பு மண்டபத்தை நோக்கி நடந்தனர்.

வரவேற்பு மண்டபத்தினுள் இருவரும் நுழைந்தபோது இவர்களின் வரவுக்காகக் காத்திருந்த மரகதவல்லியின் தந்தை, மரகதவல்லி தட்டோடுவருவதைக் கண்டதும் ஒருகணம் பிரமித்துத்தான் போனார். அவர் இதுவரைக்கும் காணாத ஒரு புதுப் பெண்ணைப் பார்த்தது போலிருந்தது அவருக்கு. இருந்தும் அதை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல் இலேசாகப் புன்னகை செய்துவிட்டு விக்கிரமனின் பக்கமாகத் தலையை அசைத்து கொடுக்கும்படி சைகை செய்ததுமாதிரி இருந்த. மரகதவல்லி மெதுவாக விக்கிரமன் அமர்ந்திருந்த ஆசனத்திற்கு அருகில் சென்றாள். அவனாகத் தட்டிலிருந்து எடுத்துக் கொள்ளமுன் தட்டை அவன் முன் நீட்டும்போது அவள் முகத்தில் என்றுமில்லாத அளவுக்கு நாணம் படர்வதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளை மேலும் துன்பத்துக்குள்ளாக்க விரும்பாத விக்கிரமன், மெதுவாக அவள் கையிலிருந்த தட்டை வாங்கி அருகிலிருந்த முக்காலியின் மேல் வைத்தான். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மரகதவல்லியின் தந்தையின் மனதில் என்றுமே இல்லாத அளவுக்கு மகிழ்ச்சி தாண்டவமாடியதென்றால் அது என்றும் இல்லாதவாறு மரகதவல்லியின் மனதில் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் காரணமாக இருந்தது.

மரகதவல்லி தட்டைக் கொடுத்துவிட்டு வந்ததும் வராததுமாக அங்கயற்கண்ணி கேட்டாள். "அண்ணனிடம் பழத்தட்டைக் கொடுத்தபோது உங்கள் கைகள் நடுக்கம் கண்டதே ஏன்?" என்று "அப்படி ஒன்றுமில்லையே என்று சமாளிக்க முயன்ற மரகதவல்லியைச் சீண்டுவது போல். "ஒன்றுமில்லை என்றால் எது இல்லை? காதல் இல்லையா? அல்லது தைரியம் இல்லையா?" - இந்தக் கேள்வி மரகதவல்லியை நிலைகுலைய வைத்துவிட்டது. அவள் முகத்தில் கலவரம் தென்படத் தொடங்கியதை அவதானித்த அங்கயற்கண்ணி, "அண்ணா கூறியது பொய்யென்று நினைத்தேன். இப்போது புரிகிறது. என்றவள் "ஊம்! என்ன செய்வது எனக்கு அண்ணியாக வரப்போகும் ஒருத்தி இப்படிக் கோழைத்தனமாக இருப்பாளென்று". இதைக் கேட்டதும் ஒருமுறை அவள் மனதுக்குள் திடுப்பென்று ஒரு கேள்வி எழுந்தோடி மறைந்தது. அந்த உணர்வுகள் அவள் முகத்தில் பிரதிபலிப்பதைக் கவனித்த அங்கயற்கண்ணி, "பயந்துவிடாதீர்கள் அவள் வேறு யாருமல்ல. அவள் வெகு தூரத்திலும் இல்லை. என் அருகில் தான் இருக்கிறாள் என்றதும் மரகதவல்லியின் முகம் படர்ந்து குற்றங்கள் குங்குமச்சிமிழானது. அங்கயற்கண்ணியை அப்படியே கட்டியணைத்து உச்சியில் முத்தமிட்டாள். அவளை அறியாமலேயே ஆரத்தழுவிக் கொண்டாள்.

இத்தனைக்குப் பிறகும் அங்கயற்கண்ணி தனது பங்குக்கு "அண்ணி! உங்களைக் கண்டமாத்திரத்திலேயே நீங்கள் எனக்கு அவ்விழியாகவேண்டும் என்று தான் நினைத்தேன். இவ்வளவு விரைவாக இது நடக்கும் என்று நான் என்னவே இல்லை" என்று மகிழ்ச்சி பொங்க கூறியபோது "தங்கையே வேளையாகிறது" என்று குரல் கொடுத்தான் விக்கிரமன்.

*"செறிதொடி செய்திருந்த கள்ளம் உறுதுயர்*
*தீர்க்கும் மருந்தொன்று உடைத்து"*

*அதிகாரம் 128*
*குறள் 1275.*

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியா, யாழ்ப்பாணத்தில் நடந்த சண்டைகளில் யாருக்கு வெற்றி?**

*-செ.காஞ்சனா -அநுராதபுரம்.*

அங்கு சண்டை இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அதற்கிடையில் ஏன் அவசரப் படுகிறீர்கள்.

✉ **கடலால் உணவுப் பொருட்களைக் கொண்டுபோகும் கப்பலை புலிகள் அனுமதித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறதே, அப்படி யென்றால் பாதுகாப்பாக தரைவழியாகவே அனுப்பி வைத்திருக்கலாமே?**

*-தில்லை நடராசா- செட்டிகுளம்.*

கொண்டுபோயிருக்கலாம் தான். முழுப் பொருட்களும் யாழ்ப்பாணம் போய் சேரும் என்ற உத்தரவாதத்தை வழங்க யாருக்கும் திராணி இருப்பதாகத் தெரியவில்லையே. இதை ஐ.சி.ஆர்.சி. கூடவா யோசிக்காமல் இருந்திருக்கும்

✉ **புலிகளால் மூதூரில் கடத்தப்பட்ட முஸ்லிம்களைப் பற்றி யாரும் கதைக்கவோ, விவாதிக்கவோ முற்படுவதாகத் தெரியவில்லையே ஏன்?**

*- உவைஷ் ரஹ்மான் -பேருவளை.*

அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய பெரும் நோயை உள்ளே வைத்துக் கொண்டு, அதன் அறிகுறியான காய்ச்சலுக்கு மருந்து கொடுப்பதில் ஆர்வம் காட்டுகிறார் கள். முதலில் அரசியல் சண்டை முடியட்டும்.

✉ **புதுக்குடியிருப்பில் பலியான 61 பேரும் பாடசாலை மாணவிகளா? புலிகளா? மழுப்பாமல் பதில் சொல்லவும்?**

*- வை. இந்திரன் -சிலாபம்.*

கொல்லப்பட்டவர்கள் பாடசாலை மாண விகள். பயிற்சிக்காக அங்கு கொண்டுவரப் பட்டவர்கள். ஆயுதப் பயிற்சி என்று அரசு சொல்கிறது. ஆனால், என்ன பயிற்சி? அதை யார் ஏற்பாடு செய்தார்கள்? என்பது தெரிய வில்லை என்றும், அங்கு யாரும் உண்மை யான தகவலைத் தருகிறார்கள் இல்லை என்றும் ஐ.நா. அபய ஸ்தாபனம் சொல் கிறது.

அந்த இடம் புலிகளின் அதிகட்டுப் பாட்டுப் பகுதி என்பதையும், மாணவிகளை ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் அழைத் துக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதை யும் யாரும் மறுக்கவில்லை.

குறிப்பிட்ட நேரத்தில் அப்பிரதேசத்தைப் புலிகள் காவல் காத்திருக்கிறார்கள். தவிர வும் பலியானவர்களில் ஆண்களின் சடலங்க ளும் கிடக்கின்றன. இவை பற்றி யாரும் மூச்சுக் காட்டவில்லை. இவ்வளவு நடந்தும் என்ன பயிற்சி நடந்தது? யார் ஒழுங்கு செய் தார்கள் என்பதெல்லாம் தமக்கே தெரியா தென்று புலிகள் கூறியிருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்.

✉ **கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக கண்காணிப்புக்குழுவின் கதையும் ஆகிவிட்டதே! அவர்களின் எதிர்காலப் பணி என்னவாக இருக்கும்?**

*-எஸ்.வைரவநாதன் - பட்டித்திடல்*

மேன்மையான உங்கள் கவலையை நினைத்து எனக்கும் கவலைதான். அதற் காகக் கழுதை, கட்டெறும்பு என்றெல்லாம் நாம் சொல்லக்கூடாது. அதைச் சொல்ல தென் இலங்கையில் சிகப்புச் சட்டையோடு யாராவது இருப்பார்கள்.




✉ **காவி உடை போட்டவர்கள் இப்படி கண்ட இடத்திலும் அடிவாங்கிக் கொண்டு திரிவது பௌத்த மதத்துக்கு அவமானமாக இருக்காதா?**

*-கி. தமிழ்ச் செல்வி- பம்பலப்பிட்டி.*

ஆரம்பத்தில் அப்படித்தான் இருந்தது. இப்பொழுது அவர்களுக்கும் பழகிவிட்டது. சண்டை பிடிக்கச் சொல்லி பௌத்தம் போதிக்கவில்லையே நாம் ஏன் வெட்கப் படவேண்டும்.

✉ **முத்தரப்புக் கிரிக்கட் போட்டி நடக்காதெண்டு உமது வாயால் சொன்னீர். அது பலித்துவிடும் போல் இருக்கிறதே?**

*-ஆ.ரூபன் - தெஹிவளை.*

தென் ஆபிரிக்கா அணி விலகியவுடனேயே சுவாரஷ்யம் குறைந்த விட்டது. ஆனாலும் இந்திய அணியினர் காட்டிய அசாதாரணத்துணிச்சலை பாராட்டித்தான் ஆகவேண்டும் ம்... உலகக் கோப்பைக்கு முன்னர் இலங்கை, இந்திய அணிகளின் பலம், பலவீனங்களைப் பரீட்சித்துப் பார்க்க நமக்குக் கிடைத்த வாய்ப்பை வர்ணபகவான் விரும்பவில்லை. ரூபனை விடவும் சச்சின் மிகுந்த கவலையோடு நாடு திரும்பியிருக்கிறார்.

✉ **சார்க் விளையாட்டில் இலங்கைக்கு எத்தனை தங்கம் கிடைக்கும் ஆருடம் பிளீஸ்?**

*- ஆர்.வசந்தா - வெளிமடை.*

பதினைந்து வருடத்துக்குப் பின் நமது நாட்டில் இந்த விளையாட்டுக்களை இலங்கை நடத்துகிறது. காத்திருந்த வருட எண்ணிக்கையில் தங்கங்களை கைப்பற்றினால் உங்களோடு நானும் மகிழ்ச்சி கொள்வேன்.

✉ **"நெஞ்சில் ஜில் ஜில்" "உனக் கும் எனக்கும் சம்திங் சம்திங்" இப்படி பெயர்களை வைத்து விட்டு பிறகு திடீ ரென்று மாற்றினால் தயாரிப்பாளர்களுக்கு இலாபமா? நஷ்டமா?**

*- பூ. மேரி - மன்னார்.*

பெயர்களை மாற்றிக் கொள்வது கூட ஒரு விளம்பர யுக்திதான். "சிவாஜி" ஸ்டில் கள் இண்டர் நெட்டில் வெளியானது கூட தவறுதலாக இல்லையாம்!.

✉ **பேச்சுவார்த்தையினூடாக தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. யுத்தத்தால்தான் அது சாத்தியமாகும் என்று நான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?**

*- வி.வேல்முருகன் - உப்பாறு.*

யுத்தம் செய்வதைவிடவும் பேச்சு வார் த்தை நடத்துவது பல மடங்கு சிரமம் என்ற உண்மையை கடந்த பல சந்தர்ப்பங்களில் அனுபவித்தாகிவிட்டது. சிரமத்தைப் பார்க் காமல் பேச்சுக்கள் மீது தான் நம்பிக்கை கொள்வது நல்லது. இயல்பு நிலையைக் குழப்பும் வன்முறையையும் யுத்தத்தையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு தனித்திறமை தேவையில்லை. பேச்சுவார்த் தையைச் செய்யத்தான் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு போன்ற விடயத்தில் பக்குவப்பட்ட மனிதன் அவசியம்.

✉ **கடும் மழை, கடும் வெயில் சிந்தியாவிற்கு எது பிடிக்கும்?**

*-கா. சிந்தூரி - ஹட்டன்.*

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பார்கள். ஆகவே கடும், கடும் ரெண்டுமே எனக்குப் பிடிக்காது.

✉ **சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் சூப்பர் தாத்தாவாகப் போகிறார். சிந்தியா சூப்பர் தாத்தாவா? சூப்பர் பாட்டியா?**

*- மு.பகிரதன் - பண்டாரவளை.*

அவர் சூப்பர் ஸ்டார் ஓ.கே. நான் சூப்பர் என்று ஒரு நாளும் சொல்லவில்லையே. இப்படித்தான் சிலபேர், நான்தான் ஏகதலை வன், நான் தான் தேசியத் தலைவன், நான் தான் மக்கள் தலைவன் என்று சொல்லிக் கொள்கிறார்கள். என்னையும் ஏன் வம்புக்குள் இழுத்து விடுகிறீர்கள்.

✉ **இலங்கையில் தமிழ் சினிமா தயாரிக்கப்படுவதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லையே. சிந்தியாவுக்கு இந்த விருப்பமெல்லாம் இல்லையா?**

*என்.எம். தௌபீக் - மாளிகாவத்தை.*

தயாரிப்பாளர்கள் இல்லாததுதான் கார ணம். இருக்கிற தயாரிப்பாளர்கள் மட்டமான சினிமாக்களை இறக்குமதி செய்து பினாமிப் பெயர்களில் வயதுக்கு வந்தவர்களின் வருமா னத்தில் ஒருபகுதியைப் பறித்துக் கொள்கி றார்களே. நல்ல சினிமா இலங்கையில் முயல்கொம்புதான்.

# சர்ச்சைக்குரிய தீர்ப்புகள்

சர்ச்சையின் மறுபெயராக நடுவர் டேரல் ஹேர் திகழ்கிறார். ஒவ்வொரு தொடரில் ஏதாவது ஒரு பிரச்சினைனயை கிளப்புவதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார். இவருடைய சர்ச்சை சரித்திரம்:

✦ 1993இல் ஆஸ்திரேலியா, மேற்கிந்திய அணிகள் மோதிய அடிலெய்ட் டெஸ்டில் வால்ஷ் வீசிய பந்து மெக்டெர்மட்டின் கிளவுசுக்கு மிகவும் அருகில் செல்ல, அதை கேட்ச் பிடித்த விக்கெட் கீப்பர் 'அப்பில;' செய்தார். இதற்கு ஹேரும் அவுட் கொடுத்தார். இதனால் மேற்கிந்திய அணிகளஒரு ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பின்னர் டி.வி. 'ரீப்ளே'வில் ஹேர் தந்த முடிவு தவறானது என்பது தெரியவந்தது.


டேரல் ஹேர்

✦ மெல்போனில் 1995இல் இலங்கை, அவுஸ்திரேலியா மோதிய டெஸ்டில் இலங்கையின் முரளிதரன் பந்தை எறிவதாக கூறி ஏழு முறை நோபால் தந்தார். இவரது முடிவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ரணதுங்கா தலைமையிலான இலங்கை அணி அப்போட்டியில் விளையாட மறுத்தது. ஆனால் சிறிது நேரம் கழித்து, ஆட்டத்தை தொடர இலங்கை சம்மதித்தது. போட்டி முழுவதும் ஸ்டீவ் டன் நின்ற முனையிலிருந்தே முரளிதரன் பந்து வீசினார்.

✦ 1998இல் தன்னுடைய சுயசரிதையில் முரளிதரனின் செயல்கள் மிகவும் கொடூரமானது என குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து கிரிக்கெட்டின் புகழை சீர்குலைக்கிறார் என ஐ.சி.சி.யிடம் இலங்கை கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியது. இதனால் கோபமடைந்த ஹேர், இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து முத்தரப்பு தொடரிலிருந்து விலகினார். இதையடுத்து இலங்கை பங்குபெறும் ஆட்டங்களிலும் நடுவராக இருப்பதை பெரும்பாலும் தவிர்த்து வந்துள்ளார்.

✦ கடந்த நவம்பரில் பைசலாபாத் டெஸ்டில் இங்கிலாந்தின் ஹார்மிசன் பந்தை விக்கெட்டைக் குறிவைத்து 'த்ரோ' செய்தார். பந்து உடலில் தாக்காமல் இருக்க இன்சமாம் பேட்டை வைத்து தடுக்க முயற்சி செய்தார். ஆனால் இதை ஹேர் ரன் அவுட்டாக அறிவித்தார்.

✦ இங்கிலாந்து, பாகிஸ்தான் மோதிய லீட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தான் பந்தை சேதப்படுத்தியதற்காக பாகிஸ்தானுக்கு ஐந்து ரன்கள் அபராதம் விதித்தார். மேலும் பாகிஸ்தான் வீரர்கள் போட்டியில் கலந்து கொள்ள மறுத்ததையடுத்து நான்காம் நாள் அட்டத்தையும் ரத்து செய்தார்.

இப்போட்டியில் மற்றொரு நடுவராகப் பணிபுரிந்த டாக்டரோவும் பல சர்ச்சைகளில் சிக்கியுள்ளார். இவரது தீர்ப்புகள் பெரும்பாலும் ஒரு தலைப்பட்சமாக இருந்துள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிரடி முடிவு! களமிறங்க மறுத்த பாகிஸ்தானுக்கு 'அடி!'

**லண்டன்:** கிரிக்கெட் வரலாற்றை புரட்டி எடுத்து இருக்கிறது ஓவல் டெஸ்ட். பரபரப்பான இப்போட்டியில் பாகிஸ்தான் அணி பந்தை சேதப்படுத்தியதாக நடுவர்கள் புகார் கூறினர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக நான்காம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்கு பிறகு பாகிஸ்தான் வீரர்கள் களமிறங்க மறுத்தனர். இப்படி விதிமுறைகளுக்கு புறம்பாக நடந்து கொண்டதற்கு தண்டனையாக ஓவல் டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி வெற்றதாக நேற்று முறைப்படி அறிவிக்கப்பட்டது. கடந்த 129 கால டெஸ்ட் வரலாற்றில் முதல் முறையாக இத்தகையதொரு முடிவு வழங்கப்பட்டுள்ளது.


மைதானத்திலிருந்து வெளியேறும் பாக்கிஸ்தான் அணியினர்

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி ஓவலில் கடந்த 17ம் திகதி துவங்கியது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 173, பாகிஸ்தான் 504 ரன்கள் எடுத்தன.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை இங்கிலாந்து ஆடியது. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து 1 விக்கெட் இழப்புக்கு 78 ரன்கள் எடுத்திருந்தது. இப்போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. ஆட்டத்தின் 56 ஓவரை பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் உமர்குல் வீசினார். இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 230 ரன்கள் எடுத்திருந்தது. அப்பொழுது பந்தை வாங்கி பார்த்த வெஸ்ட் இண்டீஸ் அம்பயர் பில்லி டாக்ட்ரோவ், பாகிஸ்தான் பந்தை சேதப்படுத்தியதை கண்டறிந்தார். இதனால் மற்றொரு அம்பயரான ஆஸ்திரேலியாவின் டேரல் ஹேரை அழைத்து ஆலோசனை செய்த பிறகு பாகிஸ்தானுக்கு அபராதமாக 5 ரன்களை வழங்கினார்.

**பாக்., கோபம்:** பாகிஸ்தான் கேப்டன் இன்சமாம், பந்தை எங்கள் அணி வீரர்கள் சேதப்படுத்தவில்லை என வாதிட்டார். ஆனால் இன்சமாமின் வாதத்தை அம்பயர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பந்து மாற்றப்பட்டு புதிய பந்து வீசப்பட்டது. தேநீர் இடைவேளையின் போது இங்கிலாந்து அணி விக்கெட் இழப்புக்கு 298 ரன்கள் எடுத்திருந்தது.

தேநீர் இடைவேளைக்கு சென்ற பாகிஸ்தான் அணி, தொடர்ந்து விளையாட மறுத்துவிட்டது. பாகிஸ்தானின் இந்த திடீர் முடிவை அறிந்த அம்பயர் டேரல் ஹேர், வீரர்கள் தங்கியிருக்கும் அறைக்குள் சென்றார். கேப்டன் இன்சமாமிடம் 'வெளியில் வரவில்லையா? என்று கேட்டார். அதற்கு பதிலளித்த இன்சமாம் ஏன் பந்தை மாற்றினீர்கள்? என்று கேட்க, 'இக்கேள்விக்கு பதிலளிக்க நான் இங்கு வரவில்லை' என்று கூறிவிட்டு வெளியில் சென்று விட்டார் டேரல் ஹேர்.

**போட்டி ரத்து:** அடுத்த 15 நிமிடங்களில் அம்பயர்கள் மைதானத்துக்குள் வந்தனர். அப்பொழுது பேட்டிங் செய்து கொண்டிருந்த பால் கோலிஸ்வுட், இயான் பெல் இருவரிடமும், பாகிஸ்தான் வீரர்கள் விளையாட மறுப்பு தெரிவித்ததை அறிவித்தனர். தொடர்ந்து பெயில்சை எடுத்துவிட்டு சென்று விட்டனர். அடுத்த சில நிமிடங்களில் பாகிஸ்தான் வீரர்கள் மைதானத்திற்குள் வந்தனர். அப்பொழுது அம்பயர்கள் அங்கு இல்லை. உடனடியாக பாகிஸ்தான் அணி அறைக்கு திரும்பியது.

**கறுப்பு நாள்:** பாகிஸ்தான் வீரர்களின் இச்செயல் 129 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் கறுப்பு நாளாக அமைந்து விட்டது. கிரிக்கெட் விதிமுறைகளின் படி ஒரு அணி களமிறங்க மறுத்தால், எதிரணி வெற்றி பெற்றதாக அறிவிக்க வாய்ப்புக்கள் உண்டு. அதன்படி போட்டி நடுவராக இருந்த தென் ஆப்பிரிக்காவின் மைக் புரோக்டர், போட்டியை புறக்கணித்த பாகிஸ்தான் அணியை தோல்வி அடைந்ததாக அறிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், "கேப்டன்களையும் விவாதித்தோம்.

பாகிஸ்தான் இன்சமாம் தொடர்ந்து விளையாட மறுத்துவிட்டார். இதனால் இப்போட்டியை இங்கிலாந்துக்கு சாதகமாக மாற்றி அந்த அணி வெற்றி பெற்றதாக அறிவித்தோம். போட்டியின் போது பாகிஸ்தான் வீரர்கள் பந்தை சேதப்படுத்தியதை அம்பயர்கள் உறுதி செய்துள்ளனர். அதனால் பாகிஸ்தானுக்கு 5 ரன்கள் அபாரதமாக வழங்கப்பட்டது," என்றார்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## இந்தியாவின் தங்க வேட்டை

தெற்காசிய விளையாட்டு போட்டிகளில் இந்திய அணியின் தங்க வேட்டை தொடர்கிறது. 21ஆம் திகதி டேபிள் டென்னிசில் தங்கம் வென்ற இந்தியா, படகு வலித்தல், துப்பாக்கி சுடுதல் மற்றும் ஸ்குவாஷ் போட்டிகளிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது.


ராதிகா பாரலே

இந்தியா வெள்ளி: கபடி போட்டிகளை இந்திய அணி வெற்றியுடன் துவக்கி உள்ளது. ஆண்கள் பிரிவில் இந்தியா, நேபாளத்தை 77-17 என வீழ்த்தியது. இந்தியா, நேபாள அணிகளுக்கிடையேயான பெண்கள் பிரிவு ஆட்டத்திலும் 76-14 என வெற்றி பெற்றது.

ஏழுக்கு ஏழு: படகு வலித்தல் போட்டிகளில் நேற்று நடந்த டேபிள் டென்னிஸ் குழு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் சரத் கமல், இலங்கையின் ரோகன் சிரிசேனாவை 11-7, 11-6 11-8 என்ற செட்களில் வீழ்த்தினார். மற்ற ஆட்டங்களிலும் இந்திய வீரர்கள் துடிப்புடன் விளையாட இந்திய அணி 3-1 என்ற போட்டி கணக்கில் இலங்கையை வீழ்த்தி, தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றது.

தங்கமங்கை ராதிகா: பெண்களுக்கான 10 மீற்றர், "ஏர் ரைபிள்' பிரிவில் இந்தியாவின் ராதிகா பராலே, 498.1 புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். மற்றொரு இந்திய வீராங்கயையான நவ்திப் வெண்கலம் வென்றார். மேலும் குழு சாம்பியன்ஷிப் போட்டிகளிலும் இந்திய அணி தங்கம் வென்றது.



வீழ்ந்தது பாக்...: ஆண்களுக்கான ஹாக்கி பிரிவில் இந்திய அணி, பரம எதிரி பாகிஸ்தானை 2-0 என வீழ்த்தி மகிழ்ச்சியுடன் தொடரை துவங்கியுள்ளது. இந்தியா சார்பில் ரகுநாத் (16வது நிமிடம்), குர்பாஜ் சிங் (61வது நிமிடம்) கோல்கள் அடித்தனர்.

ஜோஷ்னா தங்கம்: பெண்களுக்கான ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஆதிக்கம் தொடர்கிறது. நான்காம் நாளான 22 ஆம் திகதி வரை இந்தியா 40 தங்கம், ஆறு வெள்ளி மற்றும் மூன்று வெண்கல பதக்கங்களை கைப்பற்றி முதலிடம் வகிக்கிறது.

சின்சினாட்டி: 'சின்சினாட்டி ஓபன்' டென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் ஆண்டி ரோடிக் சாம்பியன் பட்டம் கைப்பற்றினார். ஏ.டி.பி. அந்தஸ்து பெற்ற 'சின்சினாட்டியில் நடந்தது. முன்னணி வீரர்கள் பங்கேற்கும் இத்தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் அமெரிக்காவின் ஆண்டி ரோடிக், ஸ்பெயின் கார்லஸ் பெராராவுடன் மோதினார். விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில், ரோடிக் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் பெராராவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் கைப்பற்றினார். முன்னாள் நம்பர் ஒன் வீரரான ரோடிக், இந்த ஆண்டில் கைப்பற்றும் முதல் கோப்பை இதுவாகும். உலகின் நம்பர் ஒன் வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் இத்தொடரின் இரண்டாவது சுற்றிலும், பிரெஞ்ச் ஓபன் சாம்பியனான ஸ்பெயினின் ரபேல் நாடல் காலிறுதிப் போட்டியிலும் வெளியேறி ஏமாற்றம் அளித்தனர்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 7

6,15,24 போன்ற தேதிகளில் பிறந்து இவர்களது தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் சுக்கிரன், கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவார்.

இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் கண்ணியமான மனிதராகவும் காட்சியளிப்பர். மற்ற 6 எண் காரர்களைப்போல் இல்லாது நாசூக்காவும், ஆடம்பரமின்றியும், அதிக கலகலப்பாகப் பழகாது வார்த்தைகளை மிகவும் நிதானித்து உபயோகிக்கக் கூடியவர்களாகவும் இருப்பர். சில நேரங்களில் வாதம் செய்கின்றபோது காரசாரமாகப் பேசுவர். தனிமையில் இருந்து கொண்டு சிந்தனை செய்வர்.

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சங்கீதம், தத்துவம் போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் இருக்கும். ஆள் நடமாட்ட மில்லாத இடங்களையும், மலைப்பிரதேசங்களையும், நீர்த்தேக்கங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். பிறருக்கு உதவுவதன் மூலம் தன் தகுதியை உயர்த்திக்கொள்ள ஆசைப்படமாட்டாரகள். தன்னால் இயலாத காரியத்தை முடியும் எனக் கூறமாட்டாரகள். முன்பின் சிந்தித்தே செயல்படுவர். அதிகமான ஆள் நடமாட்டம் உள்ள இடத்தில் வாழ்வதைவிட தனிமையான இடத்தில் அமைதியாக வாழ ஆசைப்படுவர்.

இவர்களுக்குப் பெயர், பெயர் எண் பொருத்தமானதாக அமையுமேயானால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவதோடு வீடு, வாகனம், நிலம் போன்றவைகளைப் பெற்று சுகமாக வாழ்வர். இவர்களது மன நிலையை யாரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. எதையும் எளிதில் வெளியில் கூறமாட்டார்கள். சில நேரங்களில் எதையோ இழந்ததைப்போன்று காட்சியளிப்பர். பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமையப்பெற்றவர்கள் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வாழ்கின்றனர். ஆனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமற்ற பெயர் அமையுமேயானால் இவர்களுக்கு ஏதாவது ஒரு குறை இருந்து கொண்டே இருக்கும். குழப்பத்துடனே வாழ்ந்துகொண்டு இருப்பர். எழுதுவதாலும், ஆடம்பரப் பொருட்களை விற்பதாலும் லாபம் பெறும் பாக்கியமுள்ளவர்கள்.

சட்டம், சமயம், தத்துவம், கணிதம், சோதிடம் போன்றவற்றில் ஆர்வம் இருக்கும். எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு, தனிமையில் புதுப்புது கருத்துக்கள் மனதில் தோன்றும். இவர்கள் பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமையுமேயானால் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் அடைவர். ஆனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமற்ற பெயர் இருக்குமேயானால் இவர்களுடைய முன்னேற்றம் தடைப்படும். வாழ்க்கை போராட்டம் அமைந்ததாக இருக்கும். இதனால் பெயரைப் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்வது அவசியம்.

சந்தோஷமான சூழ்நிலையில் சகஜமாய் பழகும் இவர்கள், சிறிது மனக்கஷ்டம் இருந்தால் நண்பர்களிடம் கடிந்து விழுவர். புதுமையும், பழமையும் கலந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் எப்பொழுதும் ஒரு நிலையான எண்ணத்துடன் இருக்கமாட்டார்கள். இவர்களுக்கு எப்பொழுதும் தான் சொல்வதைச் செய்வதற்கு ஒரு உதவியாளர் இருக்கவேண்டுமென எண்ணுவர். வீட்டை அலங்கரித்து வைத்துக் கொள்வதிலும், தோட்டம் போடுவதிலும் ஆர்வம் உடையவர்கள்.

ஆண்டவனை வழிபடுவதில் அதிக நம்பிக்கை கொண்ட இவர்கள் சமயத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்கும் என்ன சம்பந்தம் என ஆராயத் தொடங்குவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் நல்ல ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதால் தமது பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டால் சீரும் சிறப்புமாக வாழலாம்.

***தொழில்***

எழுதுவதாலும், பேசுவதாலும் பொருளீட்டுவர். ஆடம்பர சம்பந்தமான பொருள், வாகனம், பச்சைப் பொருள், ஜவுளி போன்றவற்றாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பர்.

***நோய்***

இவர்களுக்கு மனக் குழப்பம் சம்பந்தமான நோய், மூட்டு வலி, கண் நோய், முதுகுவலி, வாயுக்கோளாறு முதலியன வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை***

சுக்கிரன், கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சூரியன், சுக்கிரன் ஆதிக்கமான 19,37,46,64,15,24,33,42,60,69 போன்ற எண்களில் பெயர் அமைத்துக்கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை.***

யோகமான எண்கள் -6,2.
யோகமான தேதிகள்-6,15,24,2,11,20,29.
யோகமான நிறம் -பச்சை, வெளிர் நீலம், வெளிர்மஞ்சள்.
யோகமான மோதிரக்கல் -மரகதம், ஜேட்.
ஆகாத தேதிகள்- 3,12,21,30,9,18,27.
ஆகாத நிறம்- ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், சிவப்பு.

*அடுத்த வாரம் பிறப்பெண் 6, கூட்டெண் 8 பற்றிப் பார்ப்போம்.*

# ரெனே டேக்கார்ட்டே (- 1596 - 1650 நூற்றாண்டு)

புகழ்பெற்ற பிரெஞ்சுத் தத்துவஞானியும், விஞ்ஞானியும், கணித மேதையுமான ரெனே டேக்கார்ட்டே (Rene Descartes) 1596ஆம் ஆண்டில் லே ஹாயே என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர், லா பிளேஷ் கல்லூரி என்ற ஒரு சிறந்த இயேசுச் சங்கப் பள்ளியில் இளமையில் கல்வி பயின்றார். இவர் தமது 26ஆவது வயதில், பாய்ட்டியேர் பல்கலைக் கழகத்தில் சட்டத்தில் பட்டம் பெற்றார். எனினும், இவர் ஒருபோதும் சட்டத் தொழிலாற்றவில்லை. இவர் மிகச் சிறந்த கல்வி பெற்ற போதிலும், கணிதம் நீங்கலாக, மற்றத் துறைகள் எதிலும் நம்பகமான தகவல்கள் இல்லை எனக் கருதினார். எனவே, முறைசார்ந்த கல்வியைத் தொடர்வதைவிட ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து, உலகைத் தாமே நேரடியாக அறிந்து கொள்ள முடிவு செய்தார். இவருடைய குடும்பம் வசதியுடையதாக இருந்தமையால் இவர் சுற்றுப் பயணம் செய்வதற்குத் தேவையான பணம் தாராளமாகக் கிடைத்தது.

டேக்கார்ட்டே, 1616 முதல் 1628 வரை விரிவாகச் சுற்றுப் பயணம் செய்தார். இவர் சிறிது காலம் ஹாலந்து, பவேரியா, அங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று வெவ்வேறு இராணுவங்களில் பணியாற்றினார். எனினும், நேரடிப் போர் எதிலும் இவர் பங்கு கொள்ளவில்லை. இத்தாலி, ஹாலந்து, டென்மார்க் போன்ற மற்ற நாடுகளுக்கு இவர் சென்றார். இந்த ஆண்டுகளில், உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு பொதுவான முறையை இவர் வகுத்தமைத்தார். உலகைப் பற்றிய ஒரு விரிவான உருக்காட்சியை உருவாக்குவதற்கு இவர் தமது முறையைப் பயன்படுத்திப் பார்க்க முடிவு செய்தார். பின்னர் இவர், ஹாலந்தில் குடியமர்ந்தார். அங்கு இவர் 20 ஆண்டு காலம் வாழ்ந்தார். ஹாலந்தில் அதிக அறிவுச் சுதந்திரம் இருப்பதாக இவர் கருதினார். மேலும் பாரிஸ் நகரின் சமூகக் குழப்பங்களிலிருந்து வெகு தொலைவில் இருக்க விரும்பினார். இக்காரணங்களிலேயே இவர் ஹாலந்தில் குடியமரத் தீர்மானித்தார்.

டேக்கார்டே 1629ஆம் ஆண்டில், "உள்ளத்தை வழிச் செலுத்துவதற்கான விதிகள்" (Rules for the Direction of the Mind) என்ற நூலை எழுதினார். இதில் இவர் தமது முறையை விளக்கிக் கூறியுள்ளார். (ஆனால், இந்நூல் முழுமை பெறவில்லை. அதனால், அது வெளியிடுவதற்கு எழுதப்படவில்லை எனத் தெரிகிறது, எனினும், டேக்கார்ட்டே இறந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு இது முதலில் வெளியிடப்பட்டது. 1630 முதல் 1634 வரையிலான ஆண்டுகளில் அறிவியல் ஆராய்ச்சியில் டேக்கார்ட்டே தமது முறையைப் பயன்படுத்தினார். உடல் உட்கூறியல், உடலியல் ஆகியவற்றை அறிவதற்கு இவர் உடல் உறுப்புக்களை அறுத்துப் பார்த்தார். ஒளியியல் (Optics) வானிலையியல், கணிதம் ஆகியவற்றிலும் வேறுபல அறிவியல் பிரிவுகளிலும் இவர் தனியாக தீவிர ஆராய்ச்சிகள் நடத்தினார்.

தமது அறிவியல் முடிவுகளை 'உலகம்' (Le Monde) என்னும் நூலில் தொகுத்து வழங்க டேக்கார்ட்டே விரும்பினார். ஆனால், 1633ஆம் ஆண்டில் அந்த நூல் முடியும் தறுவாயிலிருந்தபோது பூமி சூரியினைச் சுற்றி வருகிறது என்னும் கோப்பர்னிக்கசின் கோட்பாட்டினை ஆதரித்து வாதாடியதற்காகக் கலிலீயோவுக்குத் திருச்சபை அதிகாரிகள் தண்டனை விதித்த செய்தியை இவர் அறிந்தார். ஹாலந்தில் இவர் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கவில்லையெனினும், டேக்கார்ட்டேயும் தமது நூலில் கோப்பர்னிக்கசின் கோட்பாட்டை ஆதரித்து எழுதியிருந்தமையால் அந்த நூலை வெளியிடாமலிருப்பதுதான் விவேகமானது என்று டேக்கார்ட்டே முடிவு செய்தார். இதற்குப் பதிலாக 1637 ஆம் ஆண்டில், "அறிவியல்களில் பகுத்தறிவைச் செலுத்தி உண்மையைக் காணும் முறை" என்ற தமது புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். (இந்நூல், "முறைகள் பற்றிய ஆய்வுரை" எனச் சுருக்கமாக அழைக்கப் பெற்றது.)

இந்த நூலை டேக்கார்ட்டே லத்தீன் மொழியில் எழுதாமல் பிரெஞ்சு மொழியில் எழுதினார். பண்டையைக் கிரேக்க லத்தீன் கலைக் கல்வி கற்காதவர்கள் உட்பட கற்றறிந்தோர் அனைவரும் படிக்க வேண்டும் என விரும்பி இவர் இந்நூலை பிரெஞ்சு மொழியில் எழுதினார். இந்நூலுக்குப் பின்னிணைப்பாக மூன்று கட்டுரைகளையும் இவர் சேர்த்திருந்தார். இக்கட்டுரைகளில், தமது முறையினைப் பயன்படுத்தி தாம் கண்டுபிடித்தவற்றுக்கு இவர் எடுத்துக் காட்டுகள் காட்டியிருந்தார். இவற்றில் முதலாவது பின்னிணைப்பில், "ஒளியியல்" (Optics) இடம் பெற்றிருந்தது. அதில் "ஒளி விலகல் விதி"யை (Law of Refraction of Light) இவர் கூறியிருந்தார். (ஆனால், இந்த விதி ஏற்கனவே வில்லி பிரார்டு ஸ்னெல் என்பவர் கண்டுபிடித்ததாகும்.) "ஆடிகள்" (Lense) குறித்தும், பல்வேறு ஒளியியல் கருவிகள் பற்றியும் இதில் விளக்கியிருந்தார். கண்ணின் செயல்முறை பற்றியும் இதில் விளக்கியிருந்தார். பிற்காலத்தில் கிறிஸ்டியான் ஹியூஜன் என்பவர் வகுத்தமைத்த அலைக் கோட்பாட்டுக்கு முன்னோடியாக அமைந்த ஒளி பற்றிய ஓர் கோட்பாட்டையும் இவர் கூறியிருந்தார். இவரது இரண்டாவது பின்னிணைப்பு, வானிலையியல் பற்றி முதலாவது நவீன ஆய்வினைக் கொண்டிருந்தது. இதில் மேகங்கள், மழை, காற்று வீச்சு ஆகியவை பற்றி விவாதித்திருந்தார். வானவில் உண்டாவதற்குச் சரியான விளக்கமும் அளித்திருந்தார். வெப்பத்தில் கண்ணுக்குப் புலனாகாத திரவம் அடங்கிருக்கிறது என்ற கொள்கையை இவர் மறுத்துரைத்தார். வெப்பம் என்பது ஒரு வகையான உள்முக இயக்கம் என்று மிகச் சரியாக முடிவு செய்தார். (ஆனால், இந்தக் கொள்கையை, ஏற்கனவே பிரான்சிஸ் பேக்கனும் மற்றவர்களும் கூறியிருந்தார்கள்). மூன்றாவது பின்னிணைப்பு, வடிவ கணிதம் (Geometry) பற்றியதாகும். இவருடைய சாதனைகளில் மிக முக்கியமானது இந்த வடிவ கணிதமே எனலாம். இதில், "பகுப்பாய்வு வடிவ கணிதம்" (Analytic Geometry) என்ற தமது புதிய கண்டுபிடிப்பை இவர் விளக்கியிருந்தார். இவர் கண்டுபிடித்த பகுப்பாய்வு வடிவ கணிதம், கணிதத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும். இந்தப் பகுப்பாய்வு கணிதம் தான் பின்னர் ஐசக் நியூட்டன், "நுண் கணிதத்தை" (Calculus) கண்டுபிடிப்பதற்கு வழியமைத்தது.

## உலகை வியக்க வைத்தவர்கள்

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

யாழ்ப்பாணத்தில இருந்து சனம் சொல்லுகித கதைகளைக் கேக்கேக்க ரொம்பவும் நெஞ்சு கனத்துப் போகுதுங்கோ. தொடர்ந்து இருந்த ஊரடங்குச் சட்டத்தாலே சனம் நல்லது கெட்டதை தெரிஞ்சு கொள்ள முடியாமல் நாலைஞ்சு குடும்பம் ஒண்டாச் சேர்ந்து சமைச்சுச் சாப்பிட்டுக் கொண்டு இருந்திருக்கினம். சில பேர் காலைச் சாப்பாடே சாப்பிடாமல் மதியமும் இரவும் மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்திருக்கினம்.

சண்டை நடக்கேக்க குண்டு வந்து ஊருக்க விழயில்லை எண்டதும், சனங்களுக்கு ஒண்டும் ஆபத்து இல்லை எண்டதும் ஆறுதலான விடயம் தான். ஆனால் ஊரடங்குச் சட்டம் போட்டு ஊரின்ர வாசலை மூடிவிட்டதாலை வெளியாலை இறங்கி என்ன நடக்குதெண்டதைத் தெரிஞ்சுகொள்ளாமல் இருந்திருக்கினம். இடையில ஏதோ பள்ளிக் கூடத்தில இன்ரவல் விடுமாப்போலை அரை மணித்தியாலம் எண்டும், ஒரு மணித்தியாலம் எண்டும், ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி விடுறதும், அந்த நேரத்துக்குள் சனம் பறந்து திரிஞ்சு சாமான் வேண்டிறது, அயலட்டைகளைக் கண்டு இருக்கிறியளோ எனக், கேட்டுக் கொள்ளிறதும் எண்டு அந்தக் கிழமை வாழ்ந்த வாழ்க்கையை நினைச்சால் ஏதோ நரக வாழ்க்கை வாழ்ந்த மாதிரித்தான் சொல்லினம்.

சனத்தின்ர நிலைமை அப்புடியெண்டால் அங்காலப் பக்கத்தாலை ஆட்டிலெறியும், மல்டி பெரலும் எண்டு அடிக்கினம் சொல்லி வேலையில்லை. அவ்வளவு குண்டுகளும் போய் வன்னியில எங்கு விழுந்ததோ, எத்தின பேர் செத்திச்சினமோ எண்டதெல்லாம் வெளியால தெரியாது. ஆனால் கிபிரால அடிச்சு மாணவிகள் செத்ததை மட்டும், படம் போட்டுக் காட்டி நல்லா பிரசாரம் பண்ணிச்சினம். சரி, அது ஒரு பக்கம் இருக்கட்டும். மல்டி பெரல் அடிக்கேக்க ஏதோ தட தடவெண்டு ஒரே முழக்கமாகத் தான் இருந்துச்சுது.

என்னடாப்பா உப்பிடிப் போட்டு மல்டியாலை கொளுத்துறாங்கள் எண்டு பெடியளிட்டக் கேட்டால் அவை பயந்து போயிருக்கினமாம். வேற என்ன கருமத்தாலை அடிச்சாலும் நிண்டு ஆமிக்காரனுக்கு விளையாட்டுக் காட்டலாம். ஆனால் உந்தக் கோதாரி விழுந்த மல்டியாலை அடிக்கிறதை எதிர் கொள்ள முடியுதில்லை எண்டு அவை பெடியள் சொல்லினமாம்.

முன்னம் சண்டை நடக்கேக்க ஊருக்குள்ள ஷெல் விழுந்தது. ஆனால் இந்த முறை எல்லா ஷெல்களும் தலைக்கு மேலால வேற வேற திசைகளை நோக்கிப் போகுது. இருந்த சனத்துக்கு வாண வேடிக்கைதான். பெடியள் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கப் போறமெண்டு வெளிக்கிட்டால் படைக்கு எதிரா அடிக்கிற ஷெல்கள் சனத்துக்கதான் விழப் போகுது எண்டது மட்டும் தெளிவாத் தெரியுது. உப்பிடி ரெண்டு தரப்பும் மாறி மாறி மோதிக் கொண்டிச்சினமெண்டால் சாதாரண அப்பாவிச் சனத்துக்குத்தான் பிரச்சினை எண்டது இப்ப நல்லா தெளிவாத் தெரிஞ்சுபோச்சு. உதைப் புரிஞ்சு கொள்ளாமல் சண்டைதான் பிடிக்கப்போறம், சண்டைதான் ஒரே வழியெண்டு துவங்கிச்சினமெண்டால் அவையைப் போல மனநோயாளி வேறு யாரும் இருக்கமாட்டினம். அப்புடித் தொடங்கிப் போட்டு, சனம் சாகினம், சனத்துக்கு சாப்பாடு இல்லை எண்டு யாராவது சொல்லிச்சினமெண்டால், அவையை காலில போடுறதாலதான் அடிக்க வேணும். 'ஆடு நனையுது எண்டு ஓநாய் அழுத' கதையாக சனத்துக்கு துன்பம் வரும் எண்டு நல்லாத் தெரிஞ்சு கொண்டும் சண்டை பிடிக்கிறது, பிறகு எங்கட மக்கள், மக்கள் எண்டு ஒரு நடிப்புக்குச் சொல்லுறது. உதுதான் கடந்த காலத்திலையும் நடந்துது. உதே பல்லவியை திரும்பவும் பாடி, இருக்கிற சனத்தையும் சாகடிச்சுப் போடாதீங்கோ எண்டு சனங்கள் சொல்லுற அளவில இருக்கினம். சனம் எப்பவும்தான் எதையாவது சொல்லுது. உதுகளை யார் கணக்கில எடுக்கினம்.

அதுமட்டுமில்லையுங்கோ. ஊரடங்குச் சட்டம் ஒருபக்கம், சனம் அடங்கி ஒடுங்கி ஒரு பக்கம் எண்டு குடா நாடே ஓய்ந்து போய் இருக்கேக்க இருபத்தி அஞ்சுக்கும் மேற்பட்டவை காணாமல் போயிருக்கினம். பதினைஞ்சுக்கும் அதிகமானவை கொல்லப்பட்டிருக்கினம். எடுத்தவுடன சனம் கொல்லப்படுகினம் எண்டும் ஆமிக்காரன் தான் சுட்டிருப்பான் எண்டும் ஒரு முடிவுக்கு வந்திடுவினம். ஆனால் மூதூரில நடந்த சம்பவங்களைப் பார்க்கேக்க, சண்டை பிடிக்க ஊருக்குள்ள வந்த இயக்கப் பெடியள் சண்டை ஒருபக்கம், மற்றப்பக்கம் தங்களுக்கு வேண்டாதவையை தேடிப்பிடிச்சு - பெயர்வாரியாகப் பிடிச்சு - போட்டுத்தள்ளிப்போட்டுப் போனவை. அதுபோலை யாழ்ப்பாணத்திலையும் சண்டை நடக்கேக்க ஊருக்குள்ள புலிகள் வந்திருக்கினம். சண்டைப் புடிச்சவை சரி, மற்றப்படிக்கு ஊருக்குள்ள வந்து வேறு என்னென்ன செய்திச்சினம் எண்டு யாருக்கும் தெரியாது. எங்கட சனமும் ஏன் வம்பு எண்டு சத்தம் போடாம இருந்துபோடுவினம். பெடியளும் ஆமிக்காரன் மேல் பழி விழட்டும் எண்டு என்னென்ன செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்யுவினம். 'பிள்ளையின்ர பெயரைச் சொல்லி பூதம் தின்ட' கதையாக அவையைச் சொல்லி இவையும், இவையைச் சொல்லி அவையும் செய்யுவினம். யார் செய்திச்சினமோ, ஆனால் பாதிக்கப்படுவது ஒட்டு மொத்தத்தில் எங்கட சனம்தான். படைத்தரப்புக்குத் தகவல் கொடுக்கினம், சிநேகிதம் வச்சுக் கொண்டிருக்கினம் எண்டு புலிகள் சுட்டால் என்ன, புலிகளுக்கு சப்போர்ட் பண்ணினம் எண்டு படைத்தரப்பு சுட்டால் என்ன, தமிழனைத்தான் அழிக்கினம்.

சனம் என்ன செய்யுறது, துவக்கோடை யார் வந்து சொன்னாலும் தலையை ஆட்டிக்கொண்டு செய்யுவினம், கேப்பினம். அதைப் புரிஞ்சு கொள்ளாமல் தாங்கள் துவக்கோட்டை வந்தால் மட்டும் சனம் பயந்துகொண்டு நடுங்க வேணும். மற்றவை துவக்கோடை வந்து மிரட்டேக்க அதை எதிர்த்து வீரம் பேச வேணும் எண்டு நினைக்கிறது மகா முட்டாள் தனமுங்கோ.

துவக்குத் தூக்கிக்கொண்டு திரியிறவையே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமல் தலைக்கருப்பையும் காட்டாமல் ஒளிஞ்சுகொண்டு திரியேக்க, வெறுங்கையோடை நிராயுத பாணிகளாக நிக்கிற சனம் மட்டும் எப்புடிங்கோ பயப்படாமல் இருக்கமுடியும்? என்னவோ சனத்தின்ர சைட்டில இருந்து யாரும் கொஞ்சம் கூட திங் பண்ணினமில்லை எண்டது மட்டும் தெளிவாத் தெரியுது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்த வாரம் உங்கள் பலன்

(24.08.2006 தொடங்கி 30.08.2006 வரை)

### சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், புதன், செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. கர்க்கடகம் - வெள்ளி, சனி. சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை (முதற்கால்.) தொழில் நிலை மாற்றம், பணச் செலவு, புதிய முயற்சி, பெரியோர் சகாயம், உறவினர் உபத்திரம், குடும்பக் கலகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும், பணவரவு, எதிர்பாரா செலவு, குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை அதிகம், தூர இடப் பயணம், தேக சுகக் கஷ்டம், உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, எதிர்பாரா செலவு, வீண்குறை கேட்டல், குடும்பக் கவலை, பிள்ளைகள் தொல்லை. உத்தியோகமாற்றம், புதிய பதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், எதிர்பார்த்த வரவு, தூர இடப்பயணம், மனக்கலக்கம், குடும்பப் பொறுப்பு, உறவினர் உபத்திரம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பகை, வீண்குறை கேட்டல், பெரியோர் சகாயம், மனப் பயம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த எண்ணம், குடும்பச் சுகம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பண வரவு, காரியானுகூலம், தேகசுகக் கஷ்டம், வைத்தியச் செலவு, குடும்ப நன்மை, உத்தியோகப் பேறு,மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், பணச் செலவு, காரியத்தடை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், கடன் பயம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**


**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பேறு, எதிர்பார்த்த நன்மை, புதிய முயற்சி, வீண் மனஸ்தாபம், வெளியிடத் தொல்லை, அந்நியர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், புதிய முயற்சி, வெளியிட வாசம், உறவினர் உபத்திரம், குடும்பக் கலக்கம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பணச் செலவு, உயர்ந்தோர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகக் கலக்கம், பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பயம்,வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி, இனசன மகிழ்ச்சி, எதிர்பாராச் செலவு, குடும்பத் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)




இதுதான் அக்றோபட்டிக் நடனம். நாம் அனைவரும் பரத நாட்டியத்தை நன்கு அறிந்தவர்கள். கண்டு களிப்பவர்கள். அதேபோல அவுஸ்திரேலிய கண்டத்தில் பிரபலமிக்கதுதான் அக்றோபட்டிக் நடனம். இதில் விசேடம் என்னவென்றால் நடனக் கலைஞர்கள் ஏறக்குறைய ஜிம்னாஸ்டிக் வீரர்கள் போலவே மாறிவிடுவார்கள் என்பதுதான். இவ்வகை நடனங்களைப் பார்வையிட சினிமாத் தியேட்டருக்குச் சமமாக மக்கள் கூடுவதுதான் விசேஷ அம்சம்.

இந்திய மும்பாய் நகரில் நடந்த ஓர் உறியடி காட்சிதான் இது. தமக்குக் கிடைக்கும் பரிசுப் பெறுமதிக்கு மேலாக, தாம் உறியடித்து விட்டோம் எனப் பெயரெடுப்பதையே விளையாட்டுக் குழுவினர் விரும்புகின்றார்களாம். படத்தை நன்றாகப் பாருங்கள். மாடியின் உச்சியில் உள்ளவர்களும் சரிநேரே உறியடியை அவதானிக்கிறார்கள்.




**படை** வீரர்கள் போர்க்களத்தில் போரிடுவதை மட்டும்தான் படங்களில் பார்த்திருப்பீர்கள். இது போர்க்களம் நுழையும் முன் படைவீரர்கள் ஓய்வெடுக்கும் காட்சி. தென் லெபனானிற்குள் ஆக்கிரமிப்புக்குள் நுழைய முன்னர் இஸ்ரேலிய வீரர்கள் ஓய்வெடுக்கும் காட்சியே இது.

வில்லாக வளைவது எனக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இந்த வனிதையோ தனது இரு கால்களையுமே 180 பாகைக்கு நேர்கோடாக நீட்டியுள்ளார். நீங்களும் முயன்று பார்த்து கால் சுளுக்கினால் நாம் பொறுப்பல்ல.







வீட்டில் நாய் வளர்ப்போம். பூனை வளர்ப்போம். அமெரிக்காவில் பிலடெல்பியா மாநிலத்தில் ஜேம்ஸ் ஹசி என்பவர் செல்லமாக வளர்க்கும் உடும்பையே படத்தில் காண்கின்றீர்கள். தினமும் சாப்பாட்டின் பின் வீதிக்குச் சென்று ஏப்பம் விட்டால்தான் உடும்பாருக்கு செமிக்குமாம். உடும்பார் ஏப்பம் விடத் தயாராவதையே படத்தில் காண்கின்றீர்கள்.





தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk